இப்பொழுது நடைபெறுகிறது

கும்பகோணம் டைமண்ட் டாக்கீஸ்

(மாலை மணி 6 & இரவு மணி 10)

மற்றும்

சென்னையில் — காஸினோ, பிரபாத், ஸரஸ்வதி

மற்றும்

தென்னாடெங்கும்

# தாய் உள்ளம்



அன்பிற் சிறந்தது தாய் உள்ளம்

# தாய் உள்ளம்



படத்தில் உயர்ந்தது தாய் உள்ளம்

டைரக்ஷன்....ராம்நாத்

நாராயணன் கம்பெனி தயாரிப்பு.... ஸ்டுடியோ....வாஹினி

## நீங்கள் இன்று உங்கள் பற்களை **மக்ளீன்** செய்தீர்களா ?



மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை உங்கள் பற்களை வெண்மையாகவும், ஈறுகளை ஆரோக்கியமாகவும், சுவாசத்தை இனியதாகவும் ஒரே சமயத்தில் விளங்கச் செய்கிறது.

மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையில் அடங்கியுள்ள பொருள்கள் வாயில் ஊறும் கெட்ட நீர்களையும் புளிப்புச் சத்தையும் கரைத்து பற்கள் பழுதடையாமல் காப்பாற்றி விகாரமான கறைகளையும் அகற்றி விடுகின்றன. இப்பொழுதே ஒரு டியூப் மக்ளீன் பெராக்ஸைட் பற்பசை வாங்கி பிரதிதினமும் இரண்டு தடவை உங்கள் பற்களைச் சுத்தம் செய்து வாருங்கள்.

"பெருமையைப் பெறத் தகுதி வாய்ந்தவர்களுக்கு நான் பெருமை தருகிறேன். பல வருஷங்களாக நான் மக்ளீன்ஸ் உபயோகித்து என் பற்கள் அழகாகவும் வெண்மையாகவும் இருக்கின்றன."

**இன்றே மக்ளீன்ஸ் வாங்குக!**




வியாபார விவரங்களுக்கு: ஜே.எல்.மாரிசன், ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட் மஹாலக்ஷ்மி கோவிலுக்கு எதிரில், வார்டன் ரோட், பம்பாய் 26.

# சரித்திர இந்தியா

## கீர்த்தி பெற்ற மதுரை மீனாக்ஷி கோவில்

வலதுபுறம் படத்தில் காணப்படுவது பிரஸித்தமான மதுரைக் கோயிலின் முன் கோபுரவாசல். இக்கோயிலின் ஒரு பாகம் சிவனுக்கும் மற்றொரு பாகம் அன்னாரின் நாயகி மீனாக்ஷிக்குமாக அமைந்துள்ளது.

இங்குள்ள தேநீர் கடைகளுக்குச் செல்பவர்கள் ஒரு கோப்பை புத்துணர்ச்சியளிக்கும் தேநீரைப் பருகி சிறிது இளைப்பாறலாம். ஆனால் வாஸ்தவமான புதுமைக்கும் உயர்ந்த மணத்திற்கும் நீங்கள் **'ப்ரூக் பாண்ட் டீ'**யே கேட்டு வாங்கி அருந்துங்கள்.






# ப்ரூக் பாண்ட் தேயிலை

இந்தியத் தேயிலைகளுள் சிறந்தது
இந்தியாவிற் சிறந்த பாக்கெட்டுகளில் கிடைக்கும்.

BBT/G/17



மலேரியா அவனை

பாழ்படுத்திவிட்டது

'பாலுட்ரின்' இருக்கையில்

எனக்கு மலேரியாவைப்

பற்றிய பயமில்லை

நாள் கணக்கில் ஜுரமடித்துக்கொண்டிருந்தால் எத்தனை கஷ்டமாயிருக்கும்! பாவம் அவன் சக்தி முழுவதும் இழந்து வாழ்க்கையிலேயே பற்றுதல் அற்றுப்போய் விட்டான் என்றால் அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவன் அதற்கு என்ன செய்கிறான் என்பதுதான் ஆச்சரியமாயிருக்கிறது. தினம் ஒரு மாத்திரைவிதம் 3 அல்லது 4 நாட்களுக்கு அவன் 'பாலுட்ரின்' சாப்பிட்டால் சுலபமாகக் குணமடையலாமே! மேலும் 'பாலுட்ரின்' மலேரியாவைத் தடுக்கிறது. நான் ஒரு 'பாலுட்ரின்' மாத்திரையை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சாப்பாட்டுக்குப் பிறகு தவறாமல் உட்கொள்வதால் எனக்கு மலேரியாவைப்பற்றிய பயமில்லை.



ICI

பாலுட்ரின்*

டிரேட மார்க்

மலேரியாவுக்கு ஓர் அற்புதமான மருந்து

* அனுவுக்கு ஒரு வில்லை

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்

IX-P 140 TM

# மாரிஸ் மைனர் எந்த வகையைச் சேர்ந்த கார்?



கடினமான பேரம் செய்தாலும் மதிப்பின் தராதரத்தையும் அறிந்தவர்களானால் மாரிஸை பெருமையுடன் வாங்குவர். இந்தக் கார்களை அவர்கள் தமது வியாபார ஆஸ்திகளாகவே கருதுகின்றனர்—தாரதம்யங்களை யறிந்தவர் என்பதை ருசுப்பிக்கும் ஆஸ்திகள் இவை. இம்மாதிரி மனிதர்கள் கூடுமிடங்களில் மாரிஸ் மைனர்களையும் எப்போதும் காணலாம்.

படத்தில் காணப்படும் நவீன ''மாரிஸ் மைனர்'' 50 வருட காலமாக என்ஜின் வேலைப்பாடு மேன்மைக்கும், சேவைச் சிறப்பிற்கும் கிடைத்த மாரிஸ் பரம்பரைப் புகழை மேலும் அதிகரிக்கச் செய்பவை.

இந்தக் காரில் ஒருமுறை ஏறி ஓட்டிப்பார்த்து அதன் உண்மைச் சிறப்பை அறியுங்கள்.



''தரமே முதன்மையாகக் கொண்ட''

**மாரிஸ்** மைனர்

4 கதவுள்ள ஸலூன்

## அடிஸன் & கம்பெனி லிமிடெட்,

மதராஸ் – பெங்களூர் – கோயமுத்தூர்

மற்றும் விற்பனை & ஸர்விஸ் வசதியுள்ள ஜில்லா வியாபாரிகள்.

ADZ 50

## ரொக்கப்பரிசு ரூ. 1000

( அபூர்வ சக்தியுடையது )

# மாய மோதிரம்



இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும் மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த்தேவதைகள் உங்களிடம் அணுகா. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள், இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணாமற்போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும் உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றியடைவீர்கள். சுருங்கச்சொன்னால் இம்மோதிரம் ஒரு பாதுகாப்பாளரைப் போன்றது. ஒருமுறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ. 3—0—0. ஸ்பெஷல் அதிக சக்திவாய்ந்தது ரூ. 3—15—0. தபாற்செலவு தனி. பலனில்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

**Principal, Bengal Mesmerism House (C. K.)**
**JULLUNDUR CITY. Pb.**

---

## பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டு விட்டன மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்து விட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர்என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மைசெய்தும் வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

Shrimathi. BIBI CHARAN PIARI

Sant Nagar (C. K.) Jullundur City



# பரிசு ரூபாய்... 7000
## முதற் பரிசு ரூ.......... 4000
## மற்ற பரிசுகள் ரூ.... 3000



மொத்தம் நான்கு பரிசுகள். மூன்று தவறுள்ள விடைகளுக்கும் பரிசு உண்டு.
இப்போட்டியின் சீலிட்ட விடை சென்னை ப்ரீமியர் பாங்க் ஆப் இந்தியாவில் டிபாசிட் செய்யப்பட்டுள்ளது.

★ பிரவேசக் கட்டணம்: கூப்பன் ஒவ்வொன்றுக்கும் அணா நான்கு மட்டுமே. ★

சலுகை: பத்து கூப்பன் அனுப்பும் ஒவ்வொருவரும் மேற்கொண்டு இரண்டு கூப்பன் இலவசமாக அனுப்பலாம்.

## முடிவு தேதி 12—3—52

| | | விடைகள் 1 | 2 |
|---|---|---|---|
| I | ஒரு போட்டி வெற்றிபெறுவதற்கு முக்கியமானது அதன்...........திருப்திகரமாயிருத்தலே. | விடை | துகை |
| 2 | தற்போது எந்த சர்க்கார் உத்தியோகமானாலும் இதில் தேர்ந்தெடுக்கப்படாமல் நியமனம் செய்வதில்லை. | பேட்டி | போட்டி |
| 3 | விசாரணையிலிருக்கும் கைதியைப் போலீஸார், குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி சில சமயம் இது செய்வதுண்டு என சொல்லப்படுவதுண்டு. | வற்புறுத்தல் | துன்புறுத்தல் |
| 4 | ...........ஐ ஒங்கவிடக்கூடாது. | விரோதி | வியாதி |
| 5 | ஒரு காரியத்தில் வெற்றி பெறவேண்டுமானல் இப்படியாகச் செய்யவேண்டும். | நிதானம் | கவனம் |
| 6 | மிதமிஞ்சிய இது ஏற்படும்போது ஒன்றுமே செய்யத் தோன்ருது நமக்கு. | கோபம் | சோகம் |
| 7 | ஒரு பெண் இப்படியாக இருக்கிருள் என்ருல் அவளை அணுக ஆவல் தோன்றும் காமுகர்களுக்கு (தகைமை=அழகு). | தனிமை | தகைமை |
| 8 | என்னதான் குழந்தை அருமையானதாயிருந்தாலும் இது அதிகம் கொடுப்பது கெடுதல்தானே! | செல்லம் | முத்தம் |
| 9 | பெண்ணுய்ப் பிறந்தவளுக்கு இது கட்டாயம் இருக்கவேண்டும் (நோற்பு=பொறுமை). | கற்பு | நோற்பு |
| IO | மனிதன் தன் வாழ்நாளுள் எத்தனையோ இதற்கு உள்ளாகவேண்டியிருக்கிறது. | சோதனை | வேதனை |
| II | இந்த வாசனையே இல்லாத சிலர் சினிமாவில் நடிப்பதைப் பார்க்கிருேம். | நடிப்பு | படிப்பு |
| I2 | நம் முன்னேர்கள் எழுதிவைத்துள்ள புராண கதைகளில் எவ்வளவு சிறந்த ........கள் நிறைந்துள்ளன! | கற்பனை | படிப்பினை |
| I3 | தமது நாட்டில் இது ஏற்படவேண்டுமென்று யார்தான் விரும்பமாட்டார்கள்! | சுபிட்சம் | சுயாட்சி |

மேலே உள்ள கட்டத்தில் பதின் மூன்று குறிப்புகளும் அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. அதில் குறிப்புக்கு மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். விடைகளைச் சாதா காகிதத்திலும் எழுதலாம், அச்சுக் கூப்பன்களும் இலவசம். விடைகளை வார்த்தைகளாகவோ 1-2 எண்களை உபயோகித்தோ எழுதவும். இப் போட்டியின் சரியான விடை காவேரி பங்குனி இதழில் வெளிவரும். சகல விஷயங்களிலும் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகளும் கட்டணமும் அனுப்பவேண்டிய விலாசம்:—

**மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி** "ஸ்ரீவாஸ்" பல்மநேர் P. O. (சித்தூர் ஜில்லா)

## நமது அடுத்த போட்டி
## 25-வது வெள்ளி விழா விசேஷப் போட்டி — எதிர்பாருங்கள்!

போட்டி 23-ன் சரியான விடை:-

(1) அமிதம் (2) மாறுதல் (3) புதிர் (4) அசத்தியம் (5) மத்தம் (6) யுத்தம் (7) பதில் (8) கடமை (9) தருணம் (10) ஆகாயம் (11) சோசியம் (12) திருத்தல் (13) திறமை 2 2 2 1 2 2 2 1 1 1 1 1 1

**போட்டி—22-ன் பரிசு விவரம்**

முதற் பரிசு தலைக்கு ரூ. 60—0—0 விதமும், இரண்டாவது பரிசு தலைக்கு ரூ. 3—0—0 விதமும், மூன்ருவது பரிசு தலைக்கு ரூ. 1—0—0 விதமும், நான்காவது பரிசு தலைக்கு ரூ. 0—8—0 விதமும் வழங்கப்பட்டன. பரிசுகள் 28-1-52 முதல் 3-2-52 வரை தேதிகளில் அனுப்பப்பட்டன. மற்ற விவரங்கள் வரலக்ஷ்மி கிராஸ் வர்ட்ஸ் நெ. 24ல் பார்க்கவும். தேவையானவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும்.

எங்கும் கலக்டர்கள் தேவை. நல்ல கமிஷனும் மெரிட் பரிசும் உண்டு.



மூன்று தலைமுறைகள்

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறாள்.




# WOODWARD'S
# GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

Agent T. T. KRISHNAMACHARI & Co. 12 A, Linghi Chetty Street, G. T. MADRAS.

# காவேரி

## பொருளடக்கம்

கர மலர் 11 | மாசி இதழ் 7


வயது வந்தவர்கள் வாக்களிப்பு ... ... ... ...11

நர்ஸ் நிர்மலா ... ... ... ... ...12
விஜயஸ்ரீ

உயிர்த் துணை ... ... ... ... ...17
விசுவம்

மனப் படகு ... ... ... ... ...20
கோமதி சுப்ரமண்யம்

என்ன விடை ... ... ... ... ...26
தி. சேஷாத்திரி

கலை எழுந்த கதை ... ... ... ... ...31
கே. எஸ். நாகராஜன்

நேபாள யாத்திரை-3 ... ... ... ...35
கே. ஸ்ரீ.

சிவப்புப் பூக்கள் ... ... ... ... ...42
வல்லிக்கண்ணன்

பெட்ரோலியம் ... ... ... ... ...52
அ. வேணுகோபாலன்

சர்தார் கே. எம். பணிக்கர் (அட்டைப் படம்) ... ...57
கே. ஸ்ரீ.

கூற்றுவனின் கலங்கள்-3 ... ... ... ... ...59
நா. கி. நாகராஜன்

இளமைத் தேன் ... ... ... ... ...63
நா. சீ. வரதராசன்

விடுதலை ... ... ... ... ...64
கே. வி. கே.

அன்பு மனமும் மணமும் ... ... ... ...69
எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

எனது கிழக்கு ஆசியாப் பிரயாணம்—இந்தோனீஷியாவிலே ...73
ரங்க ராமாநுஜ அய்யங்கார்

டில்லித் தபால் ... ... ... ... ...78
கே. ஸ்ரீநிவாஸன்


குறிப்பு :
'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

# மேன்மையின்

## பெருமை அநேக வருஷ
## உழைப்பிற்குப் பின்னும் விளங்கும்



சைக்கிள்கள்
சைக்கிள் சாமான்கள்
பெராம்புலேட்டர்கள்
குழந்தை வண்டிகள்
இவைகளில்
உயரிய ரகத்திற்கு



நம்பி வாங்க

# இங்கிலீஷ் சைக்கிள் & மோட்டர்

இம்போர்டிங் கம்பெனி லிமிடெட்

2/9 பிராட்வே :: :: மதராஸ் 1.

தந்தி :—"சைக்கிள்ஸ்" போன்: 3168

# காவேரி


| கர ௵<br>மலர் 11 | "சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்<br>செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்''—பாரதியார் | மாசி<br>இதழ் 7 |
|---|---|---|


## வயது வந்தவர்கள் வாக்களிப்பு

ஜனநாயக வாக்களிப்பு ஒருவாருக முடிந்துவிட்டது. பல மாகாணங்களில் காங்கிரஸுக்கு அமோகமான வெற்றி; சிலவற்றில் தோல்வி.

நமக்குச் சுதந்திரம் வாங்கித் தந்தது காங்கிரஸ் ஸ்தாபனம். சென்ற நான்கு வருடங்களாக மக்கள் ஆட்சி நடத்தியது காங்கிரஸ். இவ்வளவு இருந்தும் அதற்குப் பூரண வெற்றி இல்லை என்பது வருந்தத் தக்கதே. காரணம் பல இருக்கலாம்.

பொதுவாகப் பார்க்கப்போனல் இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் வேறு. வயதுவந்த வாக்குரிமைத் திட்டம் எதிர்பார்த்த அளவுக்கு நாசம் விளைவிக்கவில்லை என்பதைக் கொண்டு நாம் சந்தோஷப்படவேண்டியதே. ஆனல் வரும் தேர்தல்களில் அவை எத்தகைய மாறுதல்களை விளைவிக்கும் என்று இப்பொழுது கூறுவது கடினம். இத் தேர்தலில் பெரும்பாலான ஓட்டர்கள் தங்கள் சுற்றத்தார் காட்டிய வழியைப் பின்பற்றியிருக்கிருர்களே ஒழிய, கக்ஷிகளின் கொள்கைகளைப் பொறுத்து ஓட் செய்யவில்லை. துவேஷப் பிரசாரம் மிகவும் இத் தேர்தலில் வெற்றிகொண்டது என்று சொல்லவேண்டும். இப் பிரசாரத்துக்கு இலக்கானது நம் மாகாணத்தில் காங்கிரஸ் கக்ஷி. இப் பிரசாரம் மக்கள் மனதில் தைப்பதைப்போல் வேறு எதுவும் தைப்பதில்லை. அம்மாதிரியே ஓர் தலைவர்மீது பற்று ஏற்பட்டால் அவருள்ள கக்ஷியை மக்கள் கண்மூடித்தனமாக ஆதரிக்கத் தயாராகிவிடுகிருர்கள்.

இன்று காங்கிரஸ் வெற்றிபெற்றது தலைவர் பலத்தினுல். அது சில ஸ்தானங்களை இழந்தது, துவேஷப் பிரசாரத்திற்கு மக்கள் அடிமையானதினுல். கொள்கைகள் பற்றிய விவாதமே பெரும்பாலான வயதுவந்த வாக்காளர்கள் முன் நிற்கவில்லை. மக்கள் பண்டித நேருவை ஆதரித்தார்கள் என்ருல் அவர் வெளிநாட்டுக் கொள்கையை ஆதரித்தார்கள் என்று முடிவுகட்டுவதோ அல்லது ஹிந்துமதச் சீர்திருத்த மசோதாவை ஆதரிக்கிருர்கள் என்ருே கருத முடியாது. உண்மையில் அவர்களுக்கு நேர் மாருன அபிப்பிராயம் இருக்கலாம். எனினும் பண்டித நேருவின்பால் அவர்களுக்கு இருக்கும் நன்மதிப்பே அவர் கக்ஷிக்கு அவர்கள் வாக்களித்த காரணம். அவரைப்போல் பிரக்யாதி பெற்ற, மக்கள் அன்பிற்குப் பாத்திரமான தேசத் தலைவர் ஒருவர் (போஸ் என்று வைத்துக் கொள்ளுங்கள்) வேருெரு கக்ஷிக்குத் தலைவராக நின்று கொள்கைகளில் வேறுபட்டு மக்கள் ஓட்டைக் கோரினுல் அத்தேர்தல் முடிவுதான் கொள்கைக்குப் போடப்பட்ட முடிவு என்று கருதலாகும்.

நம் தேர்தலில் பங்கெடுத்துக் கொண்ட பெருவாரியானவர்கள் கொள்கைகளைப் புரிந்துகொண்டு வோட் செய்தார்கள் என்று யாரும் சொல்லமுடியாது. சேரிகளிலுள்ள பெண்களும் ஹரிஜனங்களும் த்வேஷப் பிரசாரங்களினுலும் ஆசை வார்த்தைகளாலும் ஏமாந்து வாக்களித்தனர். மற்றும் சில மக்கள் அரசியல் பிரச்னை ஏதுமின்றி அபேக்ஷகர் ஓர் இனத்தைச் சார்ந்தவர் என்ற காரணத்தினுல் அவருக்கு வோட் அளித்துள்ளார்கள்.

இவை எல்லாம் எதைக் குறிக்கின்றன! பெரும்பாலான வயதுவந்த வாக்காளர்கள் அரசியல் அறிவு பெருமலேயே வாக்களிக்க உந்தப்பட்டதினுல் தாறுமாருக வாக்காளர்களின் தீர்ப்பு அமைந்துவிட்டது. ஒன்று மக்களுக்கு ஆழ்ந்த அரசியல் அறிவை ஊட்ட வேண்டும். அல்லது அது அவர்களுக்குக் கிட்டும்வரை வாக்களிப்புத் திட்டத்தை மாற்றி அமைக்கவேண்டும். இல்லையேல் காலக்கிரமத்தில் தேச நிர்வாகம் சுயநலக் கும்பல்கள் கையில் சிக்கி, நாட்டுச் சுதந்திரமும், மக்கள் சுதந்திரமும் பறிபோய்விடும்.

# நர்ஸ் நிர்மலா

"விஜயஸ்ரீ"

நாகராஜன் விழித்துக்கொண்டு விட்டான். அவனுடைய உள்ளம் மிக்க வேதனை யடைந்திருந்தது. தேகம் மெதுவாக நடுங்கிக் கொண்டு இருந்தது. கண்களைக் கசக்கிக்கொண்டு அறையைச்சுற்றி ஒரு நோட்டமிட்டான்.

"நர்ஸ்! நர்ஸ்!"

"இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தாள் நர்ஸ் நிர்மலா.

"ஒன்றுமில்லை—திரும்பவும் அந்தத் துர் சொப்பனம், நான் தத்தித் தத்தி நடந்துகொண்டு மஞ்சுளாவிடம் போகிறேன். அவள் தன் முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டு, "என்னை மறந்து விடுங்கள். நானும் உங்களை மறந்துவிட்டேன். நமக்குள் நிகழ்ந்ததை எல்லாம் கனவாகக் கருதி விடுங்கள். இனிமேல் நம் எண்ணம் ஈடேருது. எனக்கும் அதில் பிரியமில்லை" என்று கூறுகிருள். அவமானமடைந்து நான் அவ்விடத்தைவிட்டுக் கோபத்துடன் வெளியேறுகிறேன். என் நிலையை மறந்து சற்று வேகமாக நடக்க ஆரம்பிக்கவே கால் தடுக்கிக் கீழே விழுந்து........."

"மிஸ்டர் நாகராஜ்! நீங்கள் உங்கள் காதலியைப்பற்றியே நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். இன்னும் பத்துப் பதினைந்து நாட்களுக்குள் 'டிஸ்சார்ஜ்' ஆகிவிடுவீர்கள். ஒருவித சிறு ஊனமும் இன்றி இருக்கப் போகிறீர்கள். பிறகு........."

"நர்ஸ்! நீங்களெல்லாம் ஒன்றுசேர்ந்துகொண்டு என்னை ஏமாற்றுகிறீர்கள். ஒருகால் ஊனமுடன் தான் நான் உலகிலிருப்பேன் என்று எனக்கே தெரியும். நீங்கள் பொய் சொன்னால் நான் நம்பி விடவா போகிறேன்?"

"டாக்டர் ஆதிவராகனை நீங்கள் இன்னும் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை. உங்கள் கேஸ் மோசமாக இருக்குமானல், அதைப்பற்றி உங்களிடம் ஒன்றுமே பேசாமல் இருப்பாரே அல்லது எல்லாம் சரியாய்விடும் என்று பொய் சொல்லவே மாட்டார். எனவே நீங்கள் பயப்படுவது போல்........."

"என் காலைப்பற்றி எனக்குத் தெரியாதா? குணமடைந்து வந்தால் நான் உணரமாட்டேனு!...... அது போகட்டும், மஞ்சுளா இப்பொழுது வருவாள். நான் அவளைப் பார்க்கப் பிரியப்படவில்லை. நான் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கிறேன், நாளை வந்து பார்க்கலாம் என்று கூறி விடுங்கள்."

"நாகராஜ்! ஏன் நீங்கள் இப்படி நடந்துகொள்கிறீர்கள்? அவள் வந்து உங்களிடம் கொஞ்ச நேரம் உரையாடிக்கொண்டிருந்தால், உங்களுக்குத் தெளிவு ஏற்படும். அவளையே வேண்டுமானல் கேட்டுப்பாருங்கள், உங்கள் கால் நிலையைப்பற்றி. அப்பொழுதாவது பூரண குண மடைந்துகொண்டிருக்கிறீர்கள் என்று நம்புகிறீர்களா பார்க்கலாம்........."

"அவளைத்தான் நீங்கள் முன்னமேயே கலந்து கொண்டிருப்பீர்களே. அவளும் உங்கள் 'பிளான்' படி கால் நன்ருகக் குணமடைந்து கொண்டு தான் இருக்கிறது என்று சொல்வாள். ஆனல் அவள் உள்ளத்தில், என் ஊனத்தால் மாறுதல் ஏற்பட்டுவிட்டது என்று எனக்குத் தெரியும்."

நர்ஸ் நிர்மலா மேலே பேசவில்லை. கொஞ்ச நேரம் நாகராஜனையே பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு ஒரு பெருமூச்சுடன் வெளியே சென்ருள்.

டாக்டர் ஆதிவராகனின் 'நர்ஸிங் ஹோம்'முக்குச் சிகித்ஸைக்காக நாகராஜன் வந்து ஒரு வாரத்துக்கு மேல் ஆகிறது.

நாகராஜன் கார் ஓட்டுகிருன் என்ருல், வாயு வேகத்தில் செல்கிருன் என்று அர்த்தம். அவன் கார் ஓட்டுவதைப் பார்த்த பலர், எப்படி விபத்தொன்றிலும் அவன் சிக்கிக் கொள்ளாமல் இருக்கிருன் என்று ஒருமிக்க வியந்தார்கள்.

ஒரு நாள் நாற்பது மைல் வேகத்தில் காரைச் செலுத்திக் கொண்டிருந்த அவனுடைய பார்வையில் தெரு நடுவில் சிறு குழந்தையொன்று தடுக்கி விழுந்தது தெரிந்தது. காருக்கும் குழந்தைக்குமிடையே சில அடி தூரமே இருந்தது. சட்டென்று 'ஸ்டியரிங்'கைத் தன் பலம்கொண்ட மட்டும் திருப்பினன். குழந்தை ஒரு மயிரிழையில் தப்பியது. ஆனல் மோட்டார் அருகிலிருந்த மரமொன்றில் வேகமாக இடித்து, சாக்கடையில் கவிழ்ந்தது. காருக்குள் மாட்டிக்கொண்ட நாக

ராஜனுக்குப் பலத்த அடி, காயம். வலது காலில் முக்கிய எலும்பொன்று முறிந்துவிட்டது.

மிகுந்த பிரயாசையின்பேரில் நாகராஜன் விபத்துக்குள்ளான காரிலிருந்து வெளியே எடுக்கப்பட்டான். பிறகு டாக்டர் ஆதிவராகனின் நர்ஸிங் ஹோமில் 'அட்மிட்' செய்யப்பட்டான். அச்செய்தியை அறிந்த அவன் பெற்ருேர்கள் ஆஸ்பத்திரிக்கு விரைந்து வந்தார்கள். நாகராஜனுடன் கல்லூரியில் படித்த மஞ்சுளாவும் வந்திருந்தாள். நாகராஜனுக்கும் அவளுக்கும் அடுத்த தை மாதத்தில் கலியாணம் நடக்கவிருந்தது.

அவன் மயக்கமாய்க் கிடந்தான். உடம்பெல்லாம் 'பாண்டேஜ்' மயம், அவனுடைய வலது முழங்காலுக்குக் கீழேயிருந்த பாகத்தை டாக்டர் கூர்மையாகப் பரிசோதித்துக் கொண்டிருந்தார்.

"என்ன டாக்டர்! பையனுடைய கால் ஊனமில்லாமல் செய்துவிடுவீர்களா?" என்று கவலையுடன் கேட்டார் நாகராஜனின் தகப்பனுர்.

"முக்கியமான எலும்பு ஒன்று முறிந்திருக்கிறது ஸார். இருந்தாலும் குணப்படுத்திவிடுவேன் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது" என்று பதில் அளித்துவிட்டு, "பேஷண்டை ரொம்ப ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்வது உன் கடமை" என்று நர்ஸ் நிர்மலாவிடம் கூறினுர் டாக்டர்.

நர்ஸ் நிர்மலாவுக்கு இருபது அல்லது இருபத்தொரு வயதுதான் இருக்கும். அழகின் பிம்பமாகத் திகழ்ந்த அவள் பொலிவிற்கு, பருவமும் மெருகிட்டிருந்தது. டாக்டர் ஆதிவராகன் எப்படி கைராசிக்குப் பெயர் போனவரோ அதே மாதிரி அவர் நர்ஸிங் ஹோமில் வேலை செய்துவந்த நிர்மலா, நோயாளிகளிடம் அன்பைச் சொரிவதிலும், அவர்களைக் குதூகலமாக இருக்கச் செய்வதிலும் நிகரற்றவள். குணமடையாத வியாதியால் தவிக்கும் துர்ப்பாக்கியசாலிகளும், நிர்மலாவின் உழைப்பின் பலனுக, உயிரிடம் ஆசைகொண்டு மனேவலிமை பெற்றனர். அப்படிப்பட்டவளையே நாகராஜனின் பணிவிடைக்காக டாக்டர் அமர்த்தினுர் என்ருல், நோயாளியைப்பற்றி அவர் எவ்வளவு சிரத்தை எடுத்துக்கொண்டாரென்று தெரியவில்லையா?

நாகராஜன் ஆஸ்பத்திரிக்கு வந்து சில தினங்கள் ஆகிவிட்டன. அவன் மயக்கம் தெளிந்து எழுந்தவுடன், அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தான். நிர்மலாவைக் கண்டவுடன், என் இரு கால்களும் முறிந்து போய்விட்டனவா!" என்று ஹீனஸ்வரத்தில் கேட்டான்.

"இல்லை! இல்லை, ஒருகால் எலும்புதான் சற்று முறிந்திருக்கிறது. சில நாட்களில் குணமாகிவிடும்." என்று பதிலளித்தாள் அவள். படுக்கையிலிருந்து உயரே தூக்கிக் கட்டப்பட்டிருந்த, கட்டுகளால் சுற்றப்பட்ட, தன் காலையே சற்று நேரம் உற்று நோக்கிக்கொண்டு இருந்தான் நாகராஜன். பிறகு, "ஹூம், இது எங்கே குணமடையப்போகிறது? வாழ்நாள் முழுவதும் ஒரு கால் ஊனத்துடனேயே கழிக்கவேண்டும் போலிருக்கிறது" என்று முணகினுன்.

"நீங்கள் ஏன் அதைரியப்படுகிறீர்கள்? இன்னும் பத்து நாட்களுக்குள் பூரண குணம் அடைந்து, சாதாரணமாக ஓடியாடி, களிக்கப்போகிறீர்கள், பாருங்கள்"

"நீங்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். என் காலைப்பற்றி எனக்குத் தெரியாதா! நீங்கள் சொல்லிவிட்டால் நான் நம்பிவிடுவேனு என்ன? என் கால் குணமடையாது."

நர்ஸ் நிர்மலா ஒன்றும் பேசவில்லை. அவனைப் பார்த்து அவள் புன்னகை செய்தது, சிறு குழந்தை யொன்றின் பிதற்றலை ரசித்து அனுபவிக்கும் பெரியவர்களின் மனேபாவத்தை ஒத்திருந்தது. அவனுடைய மனதில் தன் கால் குணமடையாது என்ற எண்ணம் வேரூன்றிவிட்டது என்று அடுத்த இரண்டு மூன்று நாட்களில் கண்டுகொண்டாள் நிர்மலா, அவனுடைய பேச்சிலிருந்தே. மஞ்சுளா, தன் கால் ஊனமுடன்தான் இருக்கும் என்று நினைத்து, தன்னை மணந்துகொள்ள மறுப்பாள் என்று நாகராஜன் முடிவு செய்திருந்ததும், நிர்மலாவுக்குத் தெரியும்.

ஒருநாள் டாக்டர் ஆதிவராகனின் முகத்தில் கவலைக்குறியைக் கண்ட அவள், "நீங்கள் மிஸ்டர் நாகராஜனைப் பற்றித்தானே நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். எனக்கு அவர் புதிராகவேயிருக்கிருர். அவருடைய கால் படிப்படியாக குணமடைந்து வருகிறது. ஆனுல் அவர் மனேநிலை தான் விநோதமாய் இருக்கிறது. தம் கால் குணமேயடையாது என்று பிடிவாதமாக நம்புகிருர் அவர்." என்று கூறினுள்.

"என்னிடம்கூட அப்படித்தான் சொன்னுன். அம் மனேநிலை ஏன் வந்தது தெரியுமா? விபத்து நேர்ந்ததல்லவா? அப்பொழுதேற்பட்ட அதிர்ச்சியில் அவன் மூளை குழம்பிப்போய், சாதாரணமாகச் சிந்தித்து உண்மையான முடிவுக்குவரும் சக்தியைத்தற்காலிகமாக இழந்துவிட்டிருக்கிருன். அவன் புத்தி பழைய நிலைக்கு, அதாவது விபத்துக்கு முன்னிருந்த நிலைக்கு வந்துவிட்டால், அவன் மனேநிலையும் மாறும் என்றே கருதுகிறேன்."

"ஆனுல் ஒன்று டாக்டர். தன் காதலைப்பற்றித்தான் அவர் அப்படி நினைக்கிருரே தவிர மற்ற விஷயங்களில் சாதாரணமாகத்தான் இருக்கிருர். பாவம்! மஞ்சுளாவை நினைத்தால்தான் பரிதாபமாயிருக்கிறது."

"ஏன்?"

"அவள் அவரை மனப்பூர்வமாக நேசிக்கிறாள். அவர் பூரண குணமடைவார் என்று நம்புகிறாள். குணமடையாத போதிலும் அவரை மணக்கச் சித்தமாக இருக்கிறாள். ஆனால் அவரோ அவளைப் பார்க்கவும் மறுக்கிறார் அவள் தன்னை நிராகரித்துவிட்டதாகச் சொல்கிறார். உண்மையைச் சொன்னாலும், தம்மை ஏமாற்றவேண்டாம், எல்லாம் தெரியும் என்கிறார்."

"ஓ, அப்படியா...... அதுதான் நான் சொன்னேனே. அதிர்ச்சியால் மூளை குழம்பிப்போய் இருக்கிறது. அந்தத் தற்காலிகக் குழப்பம் மறைந்தவுடன் அவன் மூளை பழையபடி ஒழுங்காக வேலை செய்யும்" என்று அவர் முடிக்கையில் டெலிபோன் 'கண கண'வென்று ஒலித்தது. அதில் பேசிவிட்டு, "ராவ் பகதூர் ராகவாச்சாரி வீட்டில் ஏதோ கேஸாம். அவசரமாம். நான் போய் வருகிறேன்" என்று விடை பெற்றுக் கொண்டார். சிந்தனை தேங்கிய முகத்துடன் அவள் நாகராஜனின் அறையை அடைந்தாள்.

மஞ்சுளாவுக்கும் நாகராஜனின் மனோநிலை புரியவில்லை. இல்லாத பொல்லாத எண்ணங்களெல்லாம் அவளை வருத்தின. ஒருவேளை நர்ஸ் நிர்மலா தன் கைவரிசையைக் காண்பித்திருக்கிறாளா? சேச்சே அப்படியிருக்காது. நாகராஜனும் அப்பேர்ப்பட்ட பேர்வழி அல்லவே. இந்த வேதனையை முடிக்க வழி ஒன்றுமில்லையா? என் வாழ்க்கை அவலமாகவா முடியவேண்டும்?—என்றெல்லாம் தன்னையே கேட்டுக் கொள்வாள். ஏக்கம் அவளைச் சூழ்ந்துகொண்டு துன்புறுத்தியது. நாகராஜன் அறையினுள்கூடத் தான் வரக்கூடாது என்று கட்டளை இட்டிருக்கிறான் என்று அறிந்தவுடன் அவள் இருதயமே வெடித்துவிடும் போல் ஆகிவிட்டது.

பத்து நாட்கள் சென்று மறைந்தன. நாகராஜனின் கால் படிப்படியாகக் குணமடைந்து கொண்டே வந்தது. இருப்பினும் அவன் அதை நம்ப மறுத்தான். பிடிவாதமாக, தன் கால் வாழ்நாள் முழுவதும் ஊனமாகத்தான் இருக்கும் என்று டாக்டர், பெற்றோர், நிர்மலா எல்லோரிடமும் சொன்னான். மஞ்சுளாவிடம் மட்டும் சொல்லவில்லை. அவளிடம்தான் அவன் பேசுவதையே விட்டுவிட்டானே!

அப்பொழுதுதான் நிர்மலாவிடம் சில மாறுதல்கள் தென்பட்டதை அவன் கவனித்தான். தான் பார்க்காதிருக்கும்போது, தன்னையே விழுங்கிவிடுவது போல அவள் பார்ப்பதை அறிந்தான். நாகராஜன் அழகன். அவனிடம் மையல் கொள்வது பெண்களுக்கு இயற்கைதானே?

ஆமாம், நிர்மலாவும் அப்படியொன்றும் அழகில் அவனுக்குக் குறைந்துபோய் விடவில்லை. சித்திரப்பாவை போன்ற அவள், கன்னிப்பருவத்தின் எழிலுடன் விளங்கினாள். தன்னை அறியாமலேயே அவளைப் பற்றி அவன் நினைக்கத் தொடங்கினான். பல இன்பக் கனவுகள் எழுந்தன அவன் உள்ளத்தில்.

ஒரு நாள், அவன் விழித்தெழுந்திருந்தபோது நிர்மலா தன் கையிலிருந்த ஏதோவொரு பொருளை மறைப்பது தெரிந்தது.

"என்ன அது நிர்மலா?" என்ற கேள்விக்கு, "ஒன்றுமில்லை" என்று குழப்பத்துடன் பதில் கூறினாள் அவள்.

"ஒன்றுமில்லாமல் ஏன் மறைக்கிறாய்? அதை இங்கே கொடு!"

வேறு வழியில்லாமல் அப்பொருளை நாகராஜனின் கையில் கொடுத்தாள் அவள். அதைப் பார்த்தவுடன் அவன் திகைப்படைந்தான். 'மணிபர்'ஸில் செருகியிருந்த தன் போட்டோ அலலவா அது? அதை வைத்துக்கொண்டு என்ன செய்கிறாள் அவள்?...... ஓஹோ அப்படியா சமாசாரம்......நாகராஜனின் உடம்பில் இன்ப உணர்ச்சி ஒன்று கிறுகிறுத்தது.

"நிர்மலா! என் போட்டோவை நீயேன் வைத்துக்கொண்டிருக்கிறாய்?" என்ற அவன் கேள்வி அவள் முகத்தைக் குங்குமமெனச் சிவக்கவைத்து விட்டது. "சரி, நானே சொல்லட்டுமா? என்னிடம் நீ ஆசைகொண்டிருக்கிறாய். என்ன சரிதானே?...... ஆமாம், என் கால் ஊனமாய் இருந்தால் பரவாயில்லையா?

"உம்...... நீங்கள் சொல்வது சரிதான் ஆனால் உங்களுக்கு என்னிடம்........."

"ஏன் இல்லாமல்? மஞ்சுளாவை மனதில்வைத்துக் கேட்கிறாயா? அவள்தான் என்னை நிராகரித்துவிட்டாளே?......இருப்பினும் என் கால்..."

"எனக்குக்கூட டாக்டர் ஆதிவராகனின் சக்தியில் நம்பிக்கை போய்விட்டது. அவரால் உங்கள் காலைக் குணப்படுத்த முடியாது என்றுதான் நானும் நினைக்கிறேன்,"

"பார்த்தாயா? என் முடிவு தவறானதல்ல என்று இப்பொழுது தெரிகிறதல்லவா?"

"ஆமாம். ஆனால் என்னால் உங்கள் காலைக் குணப்படுத்த முடியும்."

"எப்படி?"

"கேளுங்கள். மலையாளத்தில் என் தகப்பனாருக்குத் தெரிந்த நாட்டுவைத்தியர் ஒருவர் இருக்கிறார். அவரிடமிருந்து மருந்து வாங்கிப் பூசினால், ஒரு வாரத்துக்குள் குணமாகிவிடும். ஆனால் அதில் ஒரு கஷ்டம் இருக்கிறது."

"என்ன கஷ்டம்?"

"நான் அம்மருந்தை உங்கள் காலில் பூசுவது டாக்டருக்குத் தெரியக்கூடாது. அதிலும் ஒரு கஷ்டமும் இல்லை. ஏனெனில் மருந்து தண்ணீர் போன்ற ஒரு திரவம். பூசினவுடன் உடனே உலர்ந்துவிடும். நீங்கள் வாய்தவறி அவரிடம் சொல்லிவிடப்போகிறீர்களே என்றுதான் பயமாயிருக்கிறது,"

"நீ பயப்படவேண்டாம். நான் சொல்லவில்லை. உன் மருந்தால் என் கால் குணமடைந்துவிடும். ஆனால் அதன் பெருமையை மட்டும் டாக்டர் ஆதிவராகன் அடித்துக்கொண்டு போய்விடுவார்."

"எனக்கு அது அவசியமில்லை. உங்கள் கால் குணமானவுடன்........."

"ஏன் வெட்கப்படுகிறாய் நிர்மலா? கால் குணமானவுடன் நாமிருவரும் மணம் செய்துகொண்டு......"

நிர்மலா வெட்கமிகுதியால் அறைக்கு வெளியே போய்விட்டாள். அவளிடமிருந்து மலையாளத்துக்குக் கடிதம் போயிருப்பதாகவும், இரண்டொரு நாட்களில் மருந்து வந்துவிடும் என்றும் அறிந்தான் நாகராஜன்.

மலையாள மருந்து தினமும் அவன் காலில் பூசப்பட்டது. அதைப்பற்றி டாக்டர் ஆதிவராகனுக்கு ஒன்றுமே தெரியாது. யாராவது சொன்னால்தானே அவருக்குத் தெரியும்?

தன் கால் குணமடைவதை உணர்ந்தான் நாகராஜன். தானும் நிர்மலாவும் இன்ப வாழ்வு நடத்தப்போகும் நன்னாளை எதிர்நோக்கினான். ஆனால் தன் காதலைப்பற்றிப் பெற்றோர்களிடம் சொல்லவில்லை. ஏனெனில் அவர்கள் அதற்குச் சம்மதிக்கமாட்டார்கள் என்று அவனுக்குத் தெரியும். கலியாணமானபின் அவர்களுக்குத் தெரிவித்தால் அவர்கள் ஒன்றும் செய்ய முடியாதல்லவா? இந்நிலையில் நாட்கள் சில உருண்டோடின.

அவன் காலைப் பரிசோதிக்க வந்த டாக்டர் ஒரு நாள் "மிஸ்டர் நாகராஜ்! உங்கள் கால் பூரணமாகக் குணமடைந்துவிட்டது. இனிமேல் ஊனமின்றி நீங்கள் இருக்கலாம். நாளைக்கு உங்களை 'டிஸ்சார்ஜ்' செய்யப் போகிறேன்." என்று கூறினார்.

"டாக்டர்! உங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டவன். என் காலை அளித்த உங்களைக் கடவுளாகப் பாவிக்கிறேன்" என்றான் நாகராஜன்.

அன்று நிர்மலா அவனிடம், "சரி, நாளை 'டிஸ்சார்ஜ்' ஆகிவிடுவீர்கள். நாளை சாயங்காலம் உங்களுக்காக மெரினாவில் காத்துக்கொண்டிருப்பேன். கட்டாயம் வந்துவிடுங்கள்" என்று கூறினாள். அறையில் இங்குமங்கும் நடந்துபார்த்த நாகராஜனுக்கு, தன் கால் முன்போல் சிறிதும் பழுதின்றி ஆகிவிட்டது என்று தெரிந்ததும் அதன் காரணமாக நிர்மலாவை வாழ்த்தினான், தன் மனதிற்குள்ளேயே.



நாகராஜன் 'டிஸ்சார்ஜ்' ஆகிவிட்டான். அவன் வீட்டில் ஒரே சந்தோஷ மயம். தங்கள் மகன் ஒரு ஊனமுமின்றி ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்ததில் பெற்றோர்கள் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.

"ஆமாம், வருகிற தை மாதத்தில் மஞ்சுளாவை நீ கலியாணம் செய்து கொள்ளவேண்டும். என்ன?" என்று கேட்டார் அவன் தகப்பனர். "கரும்பு தின்னக் கூலி வேறேயா?" என்று ஒத்துப் பாடினுள் தாயார். "தை மாதத்தைப்பற்றி இப்பொழுது என்ன பேச்சு. அதை அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம்" என்ருன் நாகராஜன். அதன் உட்பொருளை அறியாது, "பிள்ளையாண்டான் வெட்கப் படுகிருன். சும்மா கேலி பண்ணுதேங்கோ" என்று அவனுக்குப் பரிந்துகொண்டு வந்தாள் அவன் பாட்டி.

சாயங்காலம் வந்தவுடன், தன் காரை எடுத்துக்கொண்டு 'மெரினவுக்குச் சென்ருன் நாகராஜன், நிர்மலா வந்திருக்கவில்லை. வந்துவிடுவாள் என்று சமுத்திரத்துக்கருகில் மணலில் அமர்ந்தான். சிந்தனை அவளைப்பற்றியே சென்று கொண்டிருந்தது,

திடீரென்று விறைத்து உட்கார்ந்தான் நாகராஜன் தூரத்தில் நிர்மலா தன்னை நோக்கி வருவது தெரிந்தது. அவன் மனம் இன்பவேதனையடைந்தது. நடந்து வந்துகொண்டிருந்த நிர்மலா அவனைப் பார்த்ததாகவே தெரியவில்லை. அவள் கண்கள் வேறு யாரையோ தேடிக்கொண்டிருந்தன. தூரத்தில் மணலில் உட்கார்ந்திருந்த வாலிபன் ஒருவன் அவளை நோக்கிச் சென்ருன். அவர்களுடைய பேச்சு காற்றில் மிதந்து வந்தது.

"நிர்மலா! எங்கே நீ வராமல் போய்விடப் போகிருயோ என்று பயந்தேன். சீக்கிரம் வா. காஸினேவில் சினிமா பார்த்துவிட்டு.........."

"மகேஷ்! கிணற்று ஜலத்தை வெள்ளமா கொண்டுபோய் விடப்போகிறது. ......சரி வா போகலாம்."

எதிர்பாராத இந்தச் சம்பவம் நாகராஜனுக்கு ஒரு அதிர்ச்சியை உண்டுபண்ணிற்று. அவனுடைய மூளையில் ஒரே சமயத்தில் ஆயிரம் மின்னல்கள் தாக்கியது போலும், பதினுயிரம் தேள்கள் கொட்டியது போலவும் உணர்ச்சி உண்டாயிற்று. பிறகு மெதுவாகப் போய்க் கொண்டிருந்த கடிகாரம் சரியாக நேரம் காண்பிக்க ஆரம்பிப்பதேபோல், அவனுடைய சிந்தனை குழப்பங்களிலிருந்து விடுபட்டு, சரியாக வேலை செய்தது.

"நிர்மலா!...... ஆம் அவள் ஒரு வேசிதான். அவளை அல்லவா மணம் செய்துகொள்ள நினைத்தேன். நல்ல சமயத்தில் கடவுள் கண்திறந்தார். இல்லையெனில் விலையில்லா மாணிக்கமான மஞ்சுளாவுக்குத்துரோகம் இழைத்திருப்பேன், அவளை இழந்தும் விட்டிருப்பேன். என்ன மடத்தனம். என்னை உண்மையாக நேசித்தவளுக்கு நான் சிறுமை உண்டாக்கவிருந்தேன், எவ்வளவு கேவலமாக நடத்தினேன். முதலில் அவள் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்." என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு தன் காரை நோக்கி நடந்தான். அவன் நடையில் புது வேகமிருந்தது.

தை மாதத்தில், மஞ்சுளாவுக்கும் நாகராஜனுக்கும் கலியாணம் நடந்தது. வந்த பரிசுகளைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தான் அவன். எக்ஸ்பிரஸ் டெலிவரியில் அப்பொழுதுதான் அவனுக்கு ஒரு பார்சல் வந்தது. அதைப் பிரித்துப் பார்த்தால் நீலகிறப் பட்டுப் புடவையொன்றும், அகலமான கரைபோட்ட சரிகைவேஷ்டியொன்றும் கண்ணைப் பறித்தன. அவைகளினிடையிலிருந்து ஒரு காகிதம் கீழே விழுந்தது. அதை எடுத்துப் படித்த நாகராஜன் ஆச்சரியத்தில் மூழ்கினுன்!

சென்னை

..................

அன்புள்ள சகோதரர் நாகராஜனுக்கு,

என்னை மனப்பூர்வமாக மன்னித்துவிட்டு, பிறகு மேலே படியுங்கள். தங்கள் கால் உண்மையில் குணமடைந்து வந்தபோதும், அது குணமாகாது என்றும் மஞ்சுளா உங்களை நிராகரித்துவிட்டாள் என்றும் நீங்கள் கருதினீர்கள். கார் விபத்தால், உங்களுடைய மூளை குழப்பமடைந்ததே அதற்குக் காரணம். ஆதிவராகன் சொன்னதன் பேரில். உங்கள் மனேநிலை சரியாவதற்கு அதிர்ச்சிவைத்தியமே சரி என்று தெரிந்தது. ஆகவே உங்களைக் காதலிப்பது போலவும், உங்கள் காலைக் குணப்படுத்த மலையாள மருந்தை உபயோகித்தது போலவும் நடித்தேன். உண்மையில் நான் உபயோகித்தது மருந்தே இல்லை—'டிஸ்டில்ட் வாட்டர்' தான்! நீங்களும் என் வலையில் விழுந்துவிட்டீர்கள். உங்கள் மனக்குழப்பமும் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே வந்தது. அதை முழுவதையும் நீக்கிவிட்டால் நீங்கள் முன்போல் ஆகிவிடுவீர்களென்று தெரிந்தது. என்னைக் கடற்கரையில் சந்திக்கும்படி கூறினேன். அங்கே என்னை வேற்று மனிதனுடன் கண்டவுடன், உங்களுக்கு அதிர்ச்சி உண்டாகி, மூளை சரியாக வேலை செய்யத் தொடங்கியது. மஞ்சுளாவும் பாக்கியவதி ஆனுள். உங்கள் இருவரையும் சேர்த்துவைக்க நான் செய்த உபாயமே அது. நீங்கள் கடற்கரையில் என்னுடன்பார்த்தீர்களே, அவர் வேறு யாருமில்லை. சாக்ஷாத் என் ஒன்றுவிட்ட அண்ணுதான். அவரும் நடிப்பில் பங்கெடுத்துக்கொண்டார் என்று சொல்லத் தேவையில்லை.

இத்துடன் உங்கள் இருவருக்கும் என் எளிய பரிசை அனுப்பியிருக்கிறேன்.

உங்கள் சகோதரி,
நிர்மலா.

# உயிர்த்துணை

விசுவம்

ஜட்கா வண்டி ராமலிங்கம் அந்த வட்டாரத்திலேயே பிரபலம். அவனுடைய நீலவேணி அவனை விடப் பிரபலம். எவ்வளவோ வண்டிக்காரர்கள் குதிரைகளை மாற்றிக் கொண்டேயிருப்பார்கள். நீலவேணி கை மாறவேயில்லை. ராமலிங்கத்தோடு பாசத்தால் பிணைக்கப்பட்டிருந்தது நீலவேணி. அதனாலேயே அவனுக்கு ஊதியம். அதனாலேயே அவனுக்கு வாழ்க்கை. அதுவே அவன் உயிர். இரு உயிர்களும் ஒன்றுக்கொன்று துணையாக—உயிர்த்துணையாக—ஒன்றிவிட்டன.

"ஜட்கா வண்டித் தொழிலை விட்டாலும், என் குதிரையை மட்டும் விடமாட்டேன்" என்று சொல்லிக் கொண்டிருந்தான் ராமலிங்கம்.

ராமலிங்கத்திற்கும் குதிரைக்குமிடையே பாசம் வளர வளர அவர்கள் வயதும் வளர்ந்ததே! சிறுகச்சிறுக ராமலிங்கம் உடல் வலுவிழந்தான். நீலவேணி மட்டும் சிரஞ்சீவியா? வழக்கமாக, 'காலப்'பில் பறக்கும் நீலவேணி நாளடைவில் பொடிநடை போடலாயிற்று. ஒரு நாள் சவாரிசென்ற கிராக்கிக்காரர் அவசரப் படுத்தினார். ராமலிங்கமும் வழக்கம் போல் "எடுடா வேகம் என் நீலவேணிக் குதிரையே!" என்று தட்டிவிட்டான். குதிரையும் ஆர்வங்கொண்டு பாய்ந்து செல்லப் பிரயத்தனப்பட்டது. ஆனால் மனந்தான் பறந்ததேயொழிய உடல் ஒத்துழைக்கவில்லை. மூச்சு பலமாக வந்தது. வாயில் நுரை வழிந்தது. கால்கள் பின்னின. சாவி தீர்ந்த கடிகாரம்போல் செல்லத்தான் முடிந்தது குதிரையால். ஒரு தினுசாக ஒப்புக்




கோத்ரெஜ் சோப்ஸ், லிமிடெட்.

கொண்ட சவாரியை முடிப்பதே கஷ்டமாய் விட்டது.

அன்று முதல் ராமலிங்கம் வண்டி கட்டு வதையே நிறுத்திவிட்டான், அந்தக் குதிரையைத் தொலைத்துவிட்டு வேறு மலிவான குதிரை வாங்கி மறுபடி தொழிலை நடத்தும் படி எவ்வளவோ நிர்ப்பந்தம் செய்தாள் காத்தாயி. வாடிக்கைக்காரர்களும் எவ்வளவோ வற்புறுத்தினர்கள். காத்தாயியின் நிந்தனைகளும், வாடிக்கைக்காரர்களின் நச்சும் சேர்ந்து ராமலிங்கத்தின் மனதையே பேதலிக்கச் செய்துவிட்டன.

வேறொரு குதிரை விலைக்கு வந்திருந்தது. குதிரை நன்ருகத்தானிருந்தது; மலிவுங்கூட. ராமலிங்கம் விலைபேசி முடித்துவிட்டான். மறுநாள் மீதிப்பணம் கொடுத்து விட்டுக் குதிரையைப் பிடித்துக் கொள்ள வேண்டியதுதான் பாக்கி. காத்தாயி வெகு சந்தோஷப்பட்டாள். ஆனல் ராமலிங்கம் மனம் உறுத்திற்று. நீலவேணியின் அன்புக் கனைப்பும், குழைந்து குழைந்து அது அவனைச் சுற்றி வருவதும் நினைவிற்கு வந்தன. தன் இதயத்தில் புதிய குதிரைக்கு இடமளிக்கலாமா? அப்படிச் செய்தல் நீலவேணிக்குத் துரோகமில்லையா? இரவு முற்றும் தூக்கமற்ற வேதனை—முரண். விடியற்காலம் வானம் வெளிற ராமலிங்கத்தின் மனமும் தெளிந்தது. நீலவேணியின் ஸ்தானத்துக்கு வேறு ஒரு குதிரையைக் கொண்டு வருவானு? குதிரை வாங்கும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டான்.

இத் தீர்மானத்தைக் கேட்ட காத்தாயி சீறினுள். வசை பொழிந்தாள். ராமலிங்கம் பொறுமையே உருவாய் இருந்துவிட்டான். நீலவேணிக்கும் இது தெரியுமோ என்னவோ. இல்லாவிட்டால் அதன் கண்கள் தான் அப்படி நன்றி சுரக்குமா? அன்று மாலை ஆற்று மணலில் அது என்ன குழைவு குழைந்தது! என்ன கொஞ்சு கொஞ்சிற்று.

இருந்ததை வைத்துக்கொண்டு மூன்று உயிர்கள் ஜீவித்து வந்தன. ராமலிங்கம், காத்தாயி, குதிரை. தினமும் ஆற்றங்கரையில் குதிரையோடு அவன் விளையாடுவதைப் பார்த்த பலரும் அவனுடைய பைத்தியக்காரத்தனத்திற்குக் கேலி செய்தார்கள். ஆனல் அவன் பாராட்டவில்லை. கர்ம யோகி போல் கேலியைப் பொறுத்துவந்தான்.

யுத்தம் முடிந்தும் விலைவாசிகள் மட்டும் இறங்கவில்லை. பணப் புழக்கம் குறைந்துவிட்டது. மழையில்லை. உழைப்பில்லை. நிலம் காய்ந்தது. எங்கும் உணவுப் பற்றுக்குறை. ராமலிங்கத்தையும் பற்றிக்கொண்டது வறுமை. வசை பொழிந்துகொண்டே சிறு சிறு வேலைகள் செய்து கால் வயிற்றுக் கஞ்சிக்குக் கொண்டு வருவாள் காத்தாயி. அவ்வளவு கஷ்டத்திலும் குதிரைக்கு ஒரு குறையும் இல்லாமல் பார்த்துவந்தான் ராமலிங்கம்.

காத்தாயி மட்டும் என்ன! கல்லா? இரும்பா? அவளும் படுத்துவிட்டாள். கால் வயிற்றுக் கஞ்சியிலும் மண் விழுந்தது. இரண்டு நாட்களாக வீட்டில் உணவு இல்லை. கையில் காசு இல்லை. மருந்து வேண்டும், அரிசி வேண்டும், புல் வேண்டும். என்ன செய்வான் ராமலிங்கம்! வேலை செய்ய உடலில் வலுவில்லை. ஒடிந்துபோய் உட்கார்ந்திருந்தான். இரண்டு நாட்களாய்ப் புல்தேடி வயல்காடெல்லாம் சுற்றியதில் களைப்புத் தான் மிச்சம். காய்ந்த புல்கூடக் கிடைக்க வில்லை.

காத்தாயி முணுமுணுத்துக் கொண்டே படுத்திருந்தாள். ஏதோ நினைத்துக் கொண்டவன் எழுந்து ரயில் ஸ்டேஷனை நோக்கி நடந்தான். யாரிடமாவது கடன் வாங்கலாமென்று பிரயத்தனப் பட்டான். சங்கோசம் குறுக்கிட்டது. தெரிந்தவர்களிடம் இரக்க இஷ்டப்படாமல் தெரியாத முகங்களாகப் பார்த்து யாசித்தான். ஆனல் அவர்களில் பலருக்கும் இவனைத் தெரிந்திருந்தது. பலர் இவனைக் கேலி செய்தார்கள். சிலர் இரங்கி, காலணு அரையணுக் கொடுத்தனர். ஒரு தினுசாக மாலை ஆறு மணிக்குக் கையில் நான்கு அணுச் சேர்ந்துவிட்டது, கஞ்சிக்குக் காணும்.

அரிசிகிரிசி ஏதாவது வாங்கலாம் என்று கடைத் தெருப்பக்கம் சென்ருன். பாலத்தின்மேல் எதிர்கொண்டழைப்பது போல் நின்று கொண்டிருந்தாள் புல்லுக்காரி செல்லம். "என்ன தாத்தா, ரொம்ப நாளாப் பில்லே வாங்கலீங்களே. குதிரையை வித்துப் போட்டீங்களா?" என்ருள்.

ராமலிங்கத்தின் மனதில் என்னவோ செய்தது.

"இல்லை......" என்று ஆரம்பித்தான். அவன் முகத்தில் படர்ந்திருந்த சோகச் சாயலைக் கண்ட செல்லம் "ஏன்......செத்துகித்துப் போயிடுச்சா......?" என்ருள். ராமலிங்

கத்தின் மனதில் சரிரென்றது. செல்லத்திடம் எவ்வளவு புல் வாங்கிப் போட்டிருக்கிறன் நீலவேணிக்கு! செல்லத்தின் புல் என்றல் நீலவேணிக்கு எவ்வளவு பிரியம்!

பேச்சு அதிகமில்லாமல் புல்கட்டை வாங்கி விட்டான். ஆறு அணுக்கட்டை நான்கணுவிற்கு இவனுக்காகக் கொடுத்து விட்டாள் செல்லம். சுமக்கமுடியாமல் சுமந்துகொண்டு நடந்தான் வீட்டைப் பார்க்க.

ஏமாந்த காத்தாயி இரைச்சல் போட்டாள். ஆத்திரத்தில் எழுந்து புல் கட்டை இழுத்து உதறிவிட்டாள். "இந்த எளவெடுத்த பீடை என்னிக்குச் சாவுமோ! அது செத்தாத்தான் நாம்ப பொளக்கலாம்" என்றள், தலையிலடித்துக்கொண்டு. ராமலிங்கத்தின் பொறுமை பறந்தது. அவளுடைய உடல் நிலையையும் மறந்து பளார் என்று அறைந்துவிட்டான். காத்தாயியின் வாய் அடைத்துப் போயிற்று. மளமள வென்று சிதறியிருந்த புல்லைத் திரட்டி நீலவேணியிடம் கொண்டு குவித்தான். அதன் முகத்தோடு முகம் வைத்துக் கொஞ்சநேரம் தன்னை மறந்தான். நினைவு பெற்றதும் கட்டிலையிழுத்துத் தெருவில் போட்டுப் படுத்தான்.

வயிறு குழைந்தது. தூக்கம் பிடிக்கவில்லை. உள்ளே காத்தாயியின் முனகல் வேதனை கொடுத்தது. உடலில் அணு அணுவாக வலி. இன்று ஓடிவிட்டது. நாளை ...?

அவன் தன்னைப்பற்றிக்கூட எண்ணவில்லை. தன்னை நம்பி உயிர்வாழும் வாயில்லா ஜீவன் என்ன செய்யும்? வேதனை அதிகரித்தது, வாய் வறண்டது, தண்ணீர் குடிக்கலாம் என்று எழுந்தான்—எழ முயற்சி செய்தான். முடியவில்லை. நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. ஏதோ பேச நினைத்தான். பேச்சு வெளிவரவில்லை.

எங்கோ ஒரு நாய் ஊளையிட்டது. சாக்குருவி அலறிற்று. விடியற்காலமிருக்கும்; ராமலிங்கம் கண் மூடினன்.

குதிரையின் முன் புல் போட்டது போட்டபடியே கிடந்தது. அதுவும் கண் மூடிவிட்டது.


போட்டி நெ. 34

Govt. Regd. Firm No. 342

இரண்டாவது ஆண்டு விழாவின் எங்கள் விசேஷப் பரிசு

## ரூ. 1,000 பெறுங்கள்

முழுதும் உத்திரவாதமான பரிசுகள். முடிவு தேதி 27-2-52 விடை தேதி 2-3-52

162

| | | | |
|---|---|---|---|
| | 40 | | |
| | | | |
| | | | |
| | | | |

எங்கள் ஸீல் செய்யப்பட்ட ஆபீஸ் விடைக்கு வரிசைக்கு வரிசை எண்ணிற்கு எண் முற்றிலும் சரியான எல்லா விடைக்கும் முதற் பரிசு ரூ. 750

முதல் இரண்டு வரிசைகள் சரியான விடைக்கு 2வது பரிசு ரூ. 125

முதல் வரிசை சரியான விடைக்கு 3வது பரிசு ரூ. 75

முதல் வரிசையின் முதல் எண் சரியாக உள்ளதற்கு 4வது பரிசு ரூ. 50

இந்த சதுரத்தில் 33 முதல் 48 வரை உள்ள எண்களை வலமாகவும், மேல் கீழும், இடமாகவும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினலும் 162 கூட்டுத் தொகை வரவேண்டும். 40 எண் கட்டத்தில் உள்ள இடத்திலேயே தான் இருக்கும்படி தயாரிக்கவேண்டும்.

பிரவேசக் கட்டணம் கூபன் 1-க்கு ரூ. 1—0—0க்கு இரண்டு கட்டங்கள், ரூ. 5-க்கு பன்னிரெண்டு கட்டங்கள். வெள்ளைக் காகிதத்தில் எத்தனை கூபன்கள் வேண்டுமானலும் அனுப்பலாம். கட்டணத்தைக் கிராஸ் செய்யாத போஸ்டல் ஆர்டரிலோ, மணியார்டர் மூலமோ அனுப்பி, விடைகளுடன் கூபனையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

விடைகளை 27—2—52லும் கூட அனுப்பலாம். இப்போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும், எங்கள் தீர்ப்பே முடிவானதும், சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும். எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளப் படமாட்டாது. விலாசத்தை ஆங்கிலத்திலேயே எல்லாவற்றிலும் (ம. ஆ. கூபனிலும்) எழுதவும்.

32-வது போட்டியின் சரியான விடை:—

முதல் வரிசை 38, 44, 31, 41
இரண்டாவது வரிசை 39, 33, 46, 36
மூன்ருவது வரிசை 42 32, 43, 37
நான்காவது வரிசை 35, 45, 34, 40

KISHORE PUZZLES No. (34) (C. K.) No. 5-A, Leonard St., Madras-14.

# மனப் படகு

**கோமதி சுப்ரமண்யம்**

புயல் என்னும் புஸ்தகம் அவள் கையில் சிக்கி உள்ளத்தில் பெரும்புயல் வீசிக்கொண்டிருந்தது. வாழ்க்கை என்பதே ஒரு படகுதான். அப்படகு நிம்மதியாய் நிச்சலமாய் ஓடிக்கொண்டிருக்கும்வரை வாழ்வு இன்பமயமானதுதான். ஆனால் அதில் சிறிது புயலோ சூருவளியோ வீசத் தொடங்கிவிட்டால் படகு அப்புயலில் சிக்கித் தவியாய்த் தவித்து மீண்டாலும் மீளும், ஒரே அடியாய் மூழ்கினாலும் மூழ்கிவிடும். புயல் அவள் உள்ளத்தில் பெரும் புயலாக வீசி—சில வருஷங்களுக்கு முன் அதுவும் அவள் மண வாழ்க்கையின் புதிதில் வீசி—அவள் வாழ்க்கையின் படகைக் கவிழ்க்க இருந்ததை நினைத்துப் பெருமூச்சுவிட்டாள் லலிதா.

காலைக் காபியை முடித்துவிட்டுக் கையில் புஸ்தகத்துடன் சற்று விச்ராந்தியாக உட்கார்ந்திருந்த லலிதாவுக்கு அன்று ஏனோ இல்லாத நினைவுகளெல்லாம் தோன்றி எதையெதையோ நினைத்துப் பார்க்கத் தூண்டிக் கொண்டிருந்தது. கையில் புஸ்தகத்தை எடுத்துவிட்டால் இவ்வுலக நினைவையே அடியோடு மறந்து கதையில் வரும் கதா நாயக நாயகியோடு ஐக்கியமாகிக் கற்பனையில் மூழ்கிவிடுவாள் லலிதா. காலைத் தபால்காரனின் குரல் ஒன்றைத் தவிர வேறு எவராலும் அவள் நினைவை இவ்வுலகுக்குக் கொண்டு வர முடியாது. தபால்காரனின் வருகையோடு படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, சமையலுக்குப் புகுந்துவிடுவது வழக்கம். இது அவள் அன்றாட வாழ்க்கை ஏட்டின் ஒரு பகுதி.

சரக் சரக் என்ற செருப்பின் ஓசை தபால்காரனின் வருகையைக் கட்டியம் கூறியது. தொடர்ந்து 'ஸார் தபால்' என்ற குரல். லலிதாவின் கையிலிருந்த புஸ்தகம் தானாகக் கீழே நழுவியது அதற்குப் பதிலாக, கவர் ஒன்று அவள் கரத்தில் தாவியது. வழக்கத்தையொட்டி அவளையறியாமலே அவள் கரம் கவரின் ஓரத்தைக் கிழித்தது. மஞ்சள் தடவிய அக்கடிதம் அவளை ஒரே பரவசத்தில் மூழ்கடித்துவிட்டது.

தபால் வந்து பத்து நிமிஷமாகியும் மேஜைக்கு வராத காரணம் அறிய விரும்பிய அவள் கணவன் தன் அறையினின்றும் எட்டிப் பார்த்தான். மனைவி நின்ற பரவச நிலை அவனை எழுந்துவரச் செய்தது. அச்சடித்த அங்கீலக் கடிதம் இருவரையுமே இன்பத்தில் மூழ்கடிக்கும் இன்பச் செய்தியைத் தாங்கி வந்திருந்தது. லலிதாவின் தங்கை கனகத்தின் பிள்ளைக்கு ஆண்டு நிறைவு.

"கனகம் கெட்டிக்காரிதான். உன்னை முந்திக் கொண்டுவிட்டாள் பார்!" என்று கண்ணைச் சிமிட்டிக் கேலியாகக் கூறிவிட்டுப் போய்விட்டான் கணவன் அவன் அறைக்கு. ஆனால் அவன் கூறிய வார்த்தைகள் அவள் நெஞ்சைவிட்டுப் போக மறுத்தன.

கனகம் கெட்டிக்காரிதான் என்ற வார்த்தை அவளுக்குப் பழைய சம்பவத்தைக் கிளறிவிட்டு வேடிக்கை பார்த்தது. இதில் அவள் கெட்டிக்காரத்தனம் ஒன்றுமில்லை. இருந்தும் தன் கணவன் அவளைப் போற்றுகிறான். அதுபோல்தான் அன்றும், உலகத்தில் அழகியாகப் பிறப்பதும் அழகற்றவளாகப் பிறப்பதுவும் ஆண்டவனின் படைப்புத்திறன் என்பதைச் சிந்தித்துப் பார்க்காமலே அழகியாய்ப் பிறந்ததற்காகக் கனகத்தை உயர்வாகவும் அழகற்றவளாய்ப் பிறந்த தன்னை உதாசீனமாய் மதித்ததையும் எண்ணிப் பார்த்தாள். அவள் மட்டுமென்ன, இவ்வுலகமே அப்படித்தான் நினைத்தது. ஆனால் அதை எத்தனை சாமர்த்தியமாய் சமாளித்துக்கொடுத்து அக்காவின் வாழ்வு விளக்கை ஏற்றிவைத்தாள் கனகம் என்ற எண்ணம் ஏற்பட்டபொழுது தங்கையின்மீது அளவுகடந்த பாசமும் மதிப்பும் பொங்கிப் பெருகியது. அதையடுத்துப் பல பல நினைவுச் சுழல்கள். அச்சுழல்களில் மூழ்கியவளாய், தன்னை மறந்து, கடந்தகால வாழ்க்கை ஆராய்ச்சியில் இறங்கிவிட்டது லலிதாவின் மனம்.

## 2

கனகம் பிரயாணத்திற்குத் தயாராவதைப்போல் சில துணிமணிகளைத் தன் பெட்டிக்குள் அடக்கம் செய்துகொண்டிருந்தாள். யதேச்சையாக அங்கு வந்த லலிதாவுக்கு அவள் செய்கை பெரிதும் வியப்பு மூட்டியது.

"கனகம்! எங்கே பிரயாணம்? காலேஜில் எங்காவது உல்லாச யாத்திரையா?"

எதிர்பாராமல் அக்காவின் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்த கனகம் தன் தலையைத் தாழ்த்திக்கொண்டாள். அவள் கண்களில் நீர் நிரம்பி நின்றது. தன் கலங்கிய விழிகளை அக்கா கண்டு விடப்போகிறாளே என்கிற எண்ணம் முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டாள்.

கனகத்தின் வாடிய முகம், அவள் செய்கை எல்லாம் புதிர்போலிருந்தது, லலிதாவிற்கு. இருந்திருந்து தன் ஒரே அக்காவின் கலியாணத்

தில் கலந்துகொள்ளாமல் எங்கே புறப்பட்டுவிட்டாள்...... ஏன் புறப்பட்டாள்...... பல தடங்கல்களுக்குப் பிறகு, பல வருஷங்களின் ஏமாற்றத்தின் பின்னே முடிந்திருக்கும் இவ் விவாகத்தில் அவளுக்கு விருப்பமில்லையா......

ஒருவேளை மாப்பிள்ளையாக வரப்போகிறவர் மீது...... அப்படித்தானிருக்க வேண்டும் இல்லையென்றால் திடீரெனச் சொல்லாமல் கொள்ளாமல் புறப்படக் காரணம். இந்த எண்ணம் தோன்றிய க்ஷணமே எதிரே இருப்பவள் தங்கையாகப் படவில்லை. லலிதாவின் கண்களுக்கு அவள் வாழ்க்கையை அழிக்க வந்த நஞ்சாக மாறினாள்.

பல வருஷங்களாக—பல வரன்களாக—லலிதாவின் கல்யாணம் தடைபட்டுப் போனதற்குக் காரணமே கனகம்தான். கண் நிறைந்த அழகி கனகம். செக்கச்செவேலென்று, வட்டக் கருவிழிகள் சுழல அழகுச் சுடர்விடும் அவள் வதனத்தின் முன் லலிதாவின் உருவம் நிலவொளியின் முன் சோபையிழந்து தோன்றும் மின் மினியை ஒத்திருக்கும். இதன் காரணமாகவே பெண் கேட்டுவந்த வரன்களெல்லாமே கனகத்தைக் கொடுத்தால் செய்து கொள்வதாகச் சொல்லித் தட்டிக் கழித்துவிட்டுப் போய்விடுவார்கள். வருகிறவர்கள் கனகத்தைக் காட்டித் தன்னைக் கழித்துச் சென்றாலும், லலிதாவிற்கு அதற்காகக் கோபமோ வருத்தமோ ஏற்பட்டதேயில்லை. அழகுடன் பிறந்தது அவள் குற்றமா? அல்லது அழகற்றுப் பிறந்ததுதான் தன் குற்றமா? இல்லை பார்ப்பவர்களின் கண்கள் குற்றம் என்று கூறி, பரிகாசமாகத் தள்ளிவிடுவாள். ஆனால் அவள் தாயார் அதை லேசில் ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. தான் பெற்ற பெண் இருவரில் ஒருத்தியே மற்றவளுக்கு எமனாக முளைத்திருக்கிறாளே என்கிற எண்ணம் அவள் மனதில் பதிந்து போய், கனகத்திடம் காரணமற்ற ஒரு வெறுப்பும், அதே சமயம் லலிதாவிடம் அனுதாபமும் தோன்றுவதுண்டு. அந்த வெறுப்பை மனதில் கொண்டதோடுமல்லாமல் வாய்விட்டும் சொல்லி, குறைப்பட்டிருக்கிறாள்.

வருகிற வரன்களெல்லாம் தட்டிக் கழித்துப் போய்க்கொண்டிருந்ததைப் பார்த்தால் லலிதாவின் கலியாணம் இந்த ஜன்மத்தில் நடக்காதென்றுதான் தோன்றியது. வருஷம் போகிற வேகமோ கனகத்திற்கு விவாக வயது கடந்துவிடுமோ என்று அஞ்சுகிற நிலைக்கு முற்றி விட்டது. வருகிறவர்கள் எல்லாரும் சின்னப் பெண்ணைக் கேட்டுக்கேட்டு அலுத்துப் போனார்கள். பெரியவள் கலியாணம் முடிந்த சின்னவளுக்கு என்றால் இருவரும் கன்னியாகவே நிற்க வேண்டியதுதான். லலிதா 'எனக்குக் கலியாணமே வேண்டாம். என்னைப் படிப்பில் இழுத்துவிட்டு, தங்கையின் விவாகத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். எனக்கு விவாகம் முடிந்ததான் அவளுக்கு என்றால் அவளும் பருவம் கடந்து வாடும் மலராக வேண்டியதுதான். வேண்டாம் அம்மா தங்கையின் வாழ்க்கையாவது மணமுள்ள மலராக மலரட்டும்' என்று முறையிட்டுக் கொண்டாள். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அந்த அபூர்வ யோசனை கண்டு பிடிக்கப்பட்டது. அதுவும் அக்காவின் விவாகத்தில் ஆர்வம் கொண்டு துடிக்கும் கனகத்தாலேயே கண்டு பிடிக்கப்பட்டது.

லலிதாவைப் பார்க்கப் பிள்ளைவீட்டார் வரும் போது கனகம் அடுத்த தெருவிலுள்ள உறவினர் வீட்டிற்குப் போய்விடவேண்டுமென்று.

இந்த ஏற்பாட்டின்படிதான் அன்று வரன் பார்க்கும் படலம் முடிந்து விவாகம் நிச்சயமாகியிருந்தது. இத்தனை முயற்சியெடுத்து முடித்து வைத்த கலியாணத்தில் கலந்துகொள்ளாமல் தங்கை எங்கேயோ புறப்பட்டுக் கொண்டிருந்தது வியப்பாகவும் அதே சமயம் வெறுப்பாகவுமிருந்தது.

"ஏன் கனகம் இந்தக் கலியாணத்தில் உனக்கு விருப்பமில்லையா?"

"அக்கா, இது என்ன வார்த்தை? விவாகம் தடையின்றி முடிய வேண்டுமென்பதற்காகவே இந்தப் பிரயாணம். இதுகூடத் தெரியவில்லையா உனக்கு? உன் விவாகத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்கிற ஆவல் என் உள்ளத்தை எப்படிச் சூறையாடுகிறது என்பதைத் தெரிவிக்கவேண்டுமானால் பொங்கும் என் இதயத்தைச் சற்றே கிறிவிட்டால் போதும். முடியாத ஒரு குறையினால்..."

தங்கையைக் கட்டிக்கொண்டு கண்ணீர் வடித்தாள் லலிதா.

3

எத்தனையோ முன்னேற்பாடுடன் கனகம் என்ற ஒருத்தி இருப்பதையே மறைத்து விவாகத்தை முடித்துவிட்டார்கள். இருந்தாலும் அதிலும் சிறு தவறு நேராமல் போகவில்லை.

புது மாப்பிள்ளை ஜோரில் மாடி வராந்தாவில் உலவிய மாப்பிள்ளையின் கண்களுக்குத் தனியே பூட்டிக்கிடந்த ஒரு அறை அவர் கண்களில் தட்டுப்பட்டுக் காரணம் கேட்டது. அதை அடக்கி ஆள்வதற்குள்ளாகவே துப்பறியும் நிபுணன் கண்களுக்கு உதவும் சிறு துரும்பேபோல் அவ்வறை ஜன்னல் வழியே தெரிந்த போட்டோ ஒன்று அவன் சம்சயத்தில் அடக்கமாகிவிட்டது.

இரு பெண்கள் தோளோடு தோள் உராய்ந்து நின்று எடுத்துக்கொண்ட போட்டோ. ஒரே கொடியில் இருவித புஷ்பம் பூத்திருந்ததைப் போல ஒரே உடையில் இருவித அழகு பொருந்திய பெண்மலர். சாந்தமே செயலாய்ச் சமைந்து நின்ற பெண் அவன் மனைவி லலிதா. ஆனால் மற்றவள் துறுதுறுவென்று மிதக்கும் கண்கள்,

படபடவெனப் பேசத்துடிக்கும் அப்பவள இதழ் படைத்தவள். அவ்வழகி யார்?

"ஏன் லலிதா, உன்னுடைய அந்தரங்கத் தோழிகளெல்லாம் உன் விவாகத்திற்கு வருவதில்லையா?" என்று பரிவோடு கேட்பதைப்போல் தன் உள்ளத்தே போராடும் கேள்விக்கு ஊற்று வகுத்துக் கொடுத்தான்.

புரியாததுபோல் மழுப்பினாள் லலி.

"எந்தத் தோழி?" என்ற கேள்வியின் மூலம் தன் மன அதிர்ச்சிக்கு மறைவு கட்டினாள்.

"அதோ......"

கணவனின் கை சுட்டிக்காட்டிய திசையைக் கண்டு திடுக்கிட்டாள் லலிதா.

அந்த அறை...... மாப்பிள்ளையின் கண்ணுக்கு மறைந்து வாசம்செய்யும் கனகத்தின் அறை. அந்த அறையின் சொந்தக்காரர்......... இல்லை சொந்தகாரி யார் என அடுத்துவரப்போகும் கேள்வியையும் கற்பனை பண்ணிப்பார்த்தாள் கனகம்.

அவள் எங்கிருக்கிறாள்...... அந்தக் கேள்விக்கு என்ன பதிலளிப்பது...... எப்படி அளிப்பது... அவள் உடல் ஒருதரம் குலுங்கி நின்றது. என்ன வந்தாலும் வரட்டுமென்று உண்மையை ஒப்புக் கொள்வதெனத் துணிந்துவிட்டாள்.

அவள் சொல்லச் சொல்ல அவன் உடலிலும் உள்ளத்திலும் அணு அணுவாய் மாற்றம்கண்டது. இதை அவன் விழிகள் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன.

ஐந்து நிமிஷம்... பத்து நிமிஷம்...... சிலையாய்ச் சமைந்து நின்றாள் கனகம். சிலையிலும் இறுக்கமாக மனதை மாற்றிக் கொண்டு அவ் வறையினின்றும் அகன்றான் மணமகன்.

4

அவன் பிரிந்து இரண்டு பகல் கால அளவுக்குப்பின் லலிதாவின் காலடியில் வந்து விழுந்தது ஒரு கவர். உன் கணவன் இப்படித்தான் உன்னை வீசியெறிந்துவிட்டான் என்பதற்கு உதாரணம்போல் தபால்காரன் வீசியெறிந்த கவர் அவள் காலடியில் விழுந்ததும் தன் உணர்வு பெற்றாள் லலிதா.

கவரை எடுத்தாள். பிரித்தாள். படித்ததினால் ஏற்பட்ட அதிர்ச்சி அவள் உள்ளத்தை வருங்கால அவள் வாழ்க்கையை ஒரே மூட்டமாக மூடிவிட்டது.

இரண்டே வாக்கியம் இரண்டாயிரம் பேரிடிகளுக்குச் சமமாகக் கிடந்தது அவள் முன்.

"என்னை ஏமாற்ற நினைத்தீர்கள்...... முடிவில் ஏமாந்தது யார் என்பது தெரிந்ததா......? தெரியவில்லையானால் தனிமை நிறைந்த உன் வாழ்க்கையைக் கேட்டுப்பார்; பதில் சொல்லும்."

இன்னும் என்ன எழுதவேண்டும் விரிவாக. அல்லது...... விஷமாக...... இது போதாதா அவளுக்குக் கிடைத்த தண்டனையை அறிந்து கொள்ள.

தங்கையை விவாகத்தில் கலக்கவொட்டாமல் மறைத்து வைத்தார்கள். கலகலப்பு நிறைந்த அவள் இல்லாத குறை லலியின் உள்ளத்தில் ஆற்றுப் பெருங்குறையாக இருந்தாலும் தன் வாழ்வு விளக்குப் பிரகாசிக்க வேண்டுமென்கிற ஒரே எண்ணத்தினால் பெரிதாகக் கருதி கனகம் இல்லாத குறையை மனதின் அடித்தளத்திலே புதைத்துப் பூட்டிவிட்டாள். அப்படி இருந்தும்



இன்று அவளுக்குக் காத்திருந்ததென்ன— வாழா வெட்டிப் பட்டம்.

கழுத்தில் கயிறும் மனதில் சுமையும் எஞ்சியது தான் மிச்சம். இதைவிடக் கலியாணமாகவில்லை என்ற குறையோடு கன்னியாக வாழ்ந்த வாழ்க்கை எத்தனையோ மேல் என்று பட்டது.

ஒரு தவறை மறைக்கப் பல தவறு என்பதைப் போல் நேர்ந்துவிட்ட தவறுக்குப் பரிகாரமே கிடையாதா? இக் கேள்வியைத் தாங்கிய கடிதம் சமர்ப்பித்திருந்தாள் அன்புக் கணவனின் திருப் பாத கமலங்களுக்கு......

அதற்கு— வந்த பதில் அவளைப் பயங்கரத்தில் ஆழ்த்தியது.

"குரல்வளையைத் திருகிவிட்டு அடிப்பாதத்தில் விழுந்து கதறி அழுதால் போன உயிரோ, பட்ட அவஸ்தையோ மாறிவிடுமா என்ன...... அவதிப் பட்டவனின் ஆத்திரம் பழிவாங்கத்தான் துடிக்கும். கிட்டத்தட்ட அதே நிலையில்தானிருக்கிறேன் நான். உங்கள் செய்கைக்குப் பரிகாரம் வேண்டுமா...... நான் கேட்பதைக் கொடுக்கத் தயாரானால்?......

"என் எழுத்திலிருந்தும் என் செய்கையிலிருந்தும் உன்மீது அன்பில்லையென்றோ ஆசையில்லையென்றோ கருதினால் அதற்குப் பொறுப்பாளி நானல்ல.

"நானாக உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன் என்று நினைத்திருந்தபோது நீ என் கண்களுக்கு ரதியாகத் தோன்றினாய். ஆனால் இன்று...... வஞ்சனையால் என் தலையில் சுமத்தப்பட்டவள்—என்ற நினைப்பு என் நெஞ்சத்துள் விழுந்துவிட்டபிறகு உன்னை மனப்பூர்வமாக ஏற்க மறுக்கிறது மனம். பழிக்குப் பழி வாங்கத்துடிக்கும் மனதிற்கு அன்பேது, ஆதரவேது?

"எந்தப் பெண்ணை எனக்கு மறைத்து உன்னை என் தலையில் கட்டினார்களோ அத்தண்டனைக்குப் பரிகாரமாக அதே பெண்ணை எனக்கு அளிப்பதாக வாக்களித்தால் உன்னையும் அவளையும் ஒன்றாக ஏற்றுக்கொள்வேன். இல்லையானால் முடிவு நான் எழுத வேண்டியதில்லை யென்றே நினைக்கிறேன்."

இந்த முடிவுறாத கடிதத்தைக் கண்டு பதறினாள் லலிதா. பல்லையும் பதற அடித்தாள். பதறும் நெஞ்சுடன் கதறினாள் தங்கையிடம்.

எனக்காக—என் வாழ்வுக்காக உன்னை நீ பலியிட்டுக்கொள்ளத்தான் வேண்டுமென்று தங்கையைப் பலவந்தம் செய்தாள். யோசித்து நாளை முடிவு கூறுகிறேன் அக்கா என்று அவள் ஆத்திரத்திற்கு அணைகட்டிய கனகம் கொந்தளிக்கும் தன் உள்ளத்திற்குக் கரைகட்ட முடியாமல் கரைந்திடிந்து நின்றாள்.

யோசித்தாள், யோசித்தாள்... இரவு பகலாக யோசித்தாள்... யோசனைக்கு முடிவேயில்லை.

கலங்கிய குளம் தெளிந்துதானேயாகவேண்டும். குழம்பிப் போயிருந்த அவள் மனக்குட்டைக்கும் தெளிவு கண்டுவிட்டது.

மறுநாள்—தன் கோரிக்கை நிறைவேறுமா? நிறைவேறாதா? தங்கையின் முடிவு என்ன என்பதைத் தெரிந்துகொள்ளும் ஆவலில் கனகத்தின் அறைக்குச் சென்றாள் லலிதா. அங்கே அவள் படுக்கை, துணிமணி, படிக்கும் புஸ்தகம் எல்லாம் வழக்கம்போல் இருந்தவிருந்த இடத்தில், இருக்க வேண்டிய இடத்தில் இருந்தன. ஆனால் கனகம் ......?

அதற்குள்ளாகவா எழுந்து வெளியே போயிருப்பாள். எங்கேதான் போக முடியும். வீட்டையும் தோட்டத்தையும் தானே சுற்றிச் சுற்றி வரவேண்டும். இந்த நினைப்பில் வீடு முழுவதும் சுற்றி வந்தாள். தனக்குத் துணையாக வீட்டிலுள்ளவர்களையும் சுற்றச் செய்தாள். காலை நேரத்தில் நல்ல தேகாப்பியாசம் கிடைத்ததே தவிர கனகம் கிடைக்கவில்லை.

மீண்டும் அவள் அறைக்கே வந்து சோதனையிட்டுப் பார்த்தபொழுது லலிதா விலாசமிட்ட கனகத்தின் கடிதம் கண்டுபிடிக்கப்பட்டது. படபடக்கும் நெஞ்சுடன் கடிதத்தைப் பிரித்துப் படித்த லலிதா அப்படியே செயலற்று நின்றாள்.

"அக்கா...என் போக்கு உனக்கு விசித்திரமாக இருக்கலாம். அதைவிட விசித்திரமானவை உன் மனமும் உன் கணவரின் செயலும். என்னைப் பார்க்காதபோதே என்மீதுள்ள ஆசையால் உன்னை ஒதுக்கிவிட்ட உன் கணவர் என்னையே சொந்தமாக அடைந்துவிட்ட பிறகு உன்னைப் பிரியமாய் நடத்துவாரென்று எப்படி நீ நம்ப முடியும். என்னைப் பலியிட்டு உன் வாழ்வை வளம்பெறச் செய்யலாமென்று நீ நினைக்கலாம். உண்மையாகவே உனக்கு வாழ்வு கிடைக்குமானால் அதற்காக என்னைப் பலியிட்டுக்கொள்ள நான் தயார். நீ நினைப்பது தவறு. என்னால்—என் அழகால்—உன் வாழ்வு விளக்கை அணைக்க முடியுமே தவிர ஏற்ற முடியாதென்றே எனக்குப் படுகிறது. நான் இருப்பதால் தானே இத்தனை வம்பும்...... ஆகையால்...... என்னைத் தேட வேண்டாம்......" இந்த வரிகளைப் படிக்குமுன்னதாகவே தலைசுற்றிக் கீழே சாய்ந்தாள் லலிதா.

இதைக் கேள்வியுற்று ஓடோடியும் வந்தான் லலியின் கணவன். தன் தங்கையைப் பறிகொடுக்கக் காரணமான கணவனுடன் முகம் கொடுத்துப் பேசக்கூட நடுங்கினாள் லலி. ஆனால் அவள் கணவனோ தன்னால் நேர்ந்துவிட்ட தவறுக்குப் பரிகாரமாகத் தன் விஷப்பரீட்சையின் நஷ்டத்திற்கு ஈடாக லலியின் மனம் கோணாமல் வாழ்வு நடத்துவதே தன் லக்ஷ்யம் என்கிற தீர்மானத்தில் வந்திருந்தான்

லலி அவள் கணவனுடன் செல்வதை வெறுத்தாள். அவனோ அவள் தங்கையின் கடிதத்தையே சுட்டிக்காட்டி அவள் மனதை மாற்றிவிட்டான்.

"என்னை இழந்துவிட்டதாக நினைத்து அசட்டுத்தனமாக உன் வாழ்க்கையை கெடுத்துக்கொள்ளாதே. உனக்கும் வாழ்வளித்து நானும் இன்ப வாழ்வு வாழவே உங்களைப் பிரிந்துசெல்கிறேன்... என்றாவது உன் கணவரின் மனம் மாறிவிட்டது என்பது தெரிந்தால் உங்கள் சந்தோஷ வாழ்க்கையைக் காண ஓடோடியும் வருவேன்" என்று முடித்திருந்தாள்.

என்றாவது என்ன? இன்றைக்கே என் மனம் மாறிவிட்டது என்பதைக் கனகம் எங்கிருந்தாலும் தெரியும்படியாக விளம்பரம் கொடுத்துவிடுகிறேன் என்று தன் மனமாற்றத்தைப் பத்திரிகையில் எழுதியேவிட்டான்.



காலைப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த கனகத்தின் கண்கள், தன் அக்கா—புருஷனின் மன மாற்றத்தை அறிந்து ஆனந்தபாஷ்பம் சொரிந்தன.

இவை யெல்லாம் சென்றுபோன சம்பவம். இருந்தாலும்இன்று நடந்ததைப் போல் பசுமரத்தாணியாகப் பதிந்துபோயிருந்தது அவள் மனதில்.

ஆபீஸிற்குப் புறப்பட்டு வந்த அவள் கணவன் இன்னும் அப்படியே சிலையாய்ச் சமைந்து நின்ற மனைவியைக் கண்டு திடுக்கிட்டான்.

"என்ன லலிதா, கனகம் கெட்டிக்காரி என்ற ஒரு வார்த்தை உன்னை ஒரேயடியாய்ச் சிந்தனையில் மூழ்கடித்துவிட்டதே" என்று கேலியாகச் சிரித்தான்.

"ஆம், அவள் கெட்டிக்காரிதான். அவிந்து போக இருந்த நம் வாழ்வு விளக்கைத் தூண்டி விட்டுப் பிரகாசிக்கச் செய்தது கனகத்தின் கெட்டிக்காரத்தனம் தானல்லவா?" என்ற கேள்வியை எழுப்பினாள் லலிதா......

"என்றோ செய்த தவறைச் சமயம் பார்த்துச் சுட்டிக்காட்டும் நீ மட்டும் என்ன லேசுப்பட்டவளா" என்று கணவன் கேட்டபொழுது நாணித் தலைகுனிந்தாள் லலிதா.

சற்றுமுன் அவள் உள்ளத்தில் வீசத்தொடங்கியிருந்த புயல்களெல்லாம் அடங்கி, நிச்சலனமாக ஓடத் தொடங்கியது அவள் மனப்படகு.




"லக்ஸ்
டாய்லட் சோப்
என் சருமஅழகை பாதுகாக்கிறது"

என்று கூறுகிறார் லலிதா

இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும்
சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தை
வசீகரமாகச்செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 322-X30 TM

சென்னை-600 008

# என்ன விடை?

தி. சேஷாத்திரி

'அம்மா!' என்று அழைத்தான் குழந்தை. அந்தக் குரல்? மழலைச் சொல்லில் மணி மணியாய்ப் பேசி மகிழ்வித்த குரலா அது? அதே குரலுக்கா இந்தத் தைன்யம் வந்துவிட்டது? குரல் மட்டுமென்ன உடலே அந்த நிலையில்தான் வந்து சேர்ந்திருந்தது. உடலில் ஆசையுடன் வந்தடைந்திருந்த பொலிவும் அந்த நிலையில்தான் இருந்தது.

பதினாயிரக் கணக்காகப் பாங்கில் பணம் இருந்து "செக்" கொடுத்துக் கொடுத்து, செலவழித்துவிட்டு, பத்து ரூபாய் மட்டும் இருக்கிறது என்று பாங்குக்காரர் நோட்டீஸ் கொடுத்தால் அந்தப் பணக்காரன் நிலை எப்படி இருக்கும்?

நன்கு கறுத்த மேகம் ஆட்டம் காட்டி ஓடிவிட்ட பிறகு அது இருந்த இடத்தில் வெண் மேகம் கூட்டம் போட்டால் பயிர் எப்படி இருக்கும்?

பசித்தவன் கதவைத் திறக்க, சாதத்தைப் பூனை நக்கிவிட்டுப் போயிருந்தால், அதில் கொஞ்சம் மிச்சம் விட்டுப் போயிருந்தால் கூட, பசித்தவன் மனம் எப்படி இருக்கும்?

எந்த உதாரணத்தைச் சொல்லித்தான் அந்தக் குழந்தையின் தாயின் மனோ நிலையை நான் உங்களுக்குத் திறந்து காண்பிக்க முடியும்? 'பக்' என்று இருந்தது என்று சொல்வதுண்டு. ஆனால் ஒரு கலம், ஒரு மூட்டை 'பக்' போட்டால்கூட அவள் நிலைமையை நான் விளக்க முடியாது?

பணம் போனால் கிடைக்கலாம்; மேகம் போனால் மீண்டும் வரலாம்? சாதம்கூட மீண்டும் கிடைக்கும். உயிர்போனால்?......

மோஹனா துடித்து எழுந்தாள். ஐந்து நாளாகத் தவிக்கிறாள் அவள். குழந்தையை ஜுரம் கொடியை வாட்டும் நெருப்புக் காற்று போல் கருக்குவதைப் பார்த்துக்கொண்டே இருக்கிறாள். படிப்படியாகச் சரீரம் இளைத்து, கண்கள் உள்ளேபோய் உடல் ஒடுங்கி உயிர் ஒடுங்கி வரும் இந்த வேதனையை அவள் தனியே அனுபவித்து வருகிறாள்?

அதிகக் காசுச் செலவில்லாமல் அடுத்த வீட்டுச் சீனிப் பாட்டி சொல்லிய மருந்தைக் கொடுத்துப் பார்த்துவிட்டாள். குப்புசாமி வைத்தியனிடம் கடன் சொல்லி மருந்து வாங்கிக் கொடுத்தாய்விட்டது. வியாதி அப்படி எல்லாம் போகுமா? பரீக்ஷையில் கேள்விகள் எல்லோருக்கும் படித்த பாடத்திலே தானா வருகிறது? வராது.

அவள் தனியாக இந்த வேதனையை அனுபவிக்கிறாள்! அப்படியானால் அவள் கணவன்!

சந்திக்காலம், பொறுங்கள். அழுத குழந்தையை என்ன என்று கேட்கலாம்.

'அம்மா......!'

'ஏண்டா கண்ணு!'

'அப்பா எங்கே அம்மா?'

'ஏன், கூப்பிடட்டுமா?'

'வேண்டாம் அம்மா. அப்பா பொம்மை போட்டுண்டிருக்கா, இல்லையா அம்மா!'

'ஆமாண்டி கண்ணு......'

'சரி......மேலே பேசவில்லை'

மோஹனாவின் உள்ளம் துவண்டது. கண்ணீர் பொழிய ஆரம்பித்தது, துவண்ட உள்ளத்துக்குக் கண்ணீர் என்ன மருந்தா? அவள் எழுந்து குழந்தையைப் போர்த்துவிட்டாள். நெற்றியில் கையை வைத்துப் பார்த்தாள்; பொரிந்தது!

'அல்பாயுசுதானோ என்னவோ' இல்லாவிட்டால் இவ்வளவு சமர்த்தாக ஏன் இருக்கிறது?'

அவள் திரும்பினாள்.

— 2 —

இரவு மணி ஒன்பது.

அந்தச் சிறிய வீட்டில் உள்ள ஓர் அறையில் மோஹனன் சித்திரம் தீட்டிக்கொண்டிருந்தான்.

திரையில் ஒரு பெண் உருவாகிக் கொண்டிருந்தாள். அழகிய பெண்! அவள் அழகிய பெண்! அவள் அழகைப்பற்றி எப்படிச் சொல்வது?

ஒரு அடையாளம் சொல்லலாம்.

அவசரமாகக் கணவனிடம் சேதி சொல்ல வந்த மோஹனா அப்படியே அதைப் பார்த்துக்கொண்டு நின்றாள். அப்படிக் கவர்ந்தது அந்த உருவம்.

அரைகுறையான லாந்தர் வெளிச்சத்தில் அவள் இரு மேகங்களிடையே ஏறிச் செல்லும் தேவ கன்னிகைபோலத் தோற்றமளித்தாள்.

அகன்ற ஜரிகைக் கரைகொண்ட பசும் பட்டுப் புடவைக்குள் அவள் சரீரம் அழகை மறைக்க முயலும் அந்தப் புடவையை அது செய்ய முயலும் வேலையில் தோல்வி தந்து



அது வெட்கி நழுவச் செய்துகொண்டிருந்தது. தலையில், கையில், கால்களில், இடுப்பில் பல ஆபரணங்கள்; என்னென்ன என்று யார் பார்ப்பார்கள்? அந்த முகம் அந்தத் தோற்றம், அங்கங்கே தெரியும் உடலின் பாகங்கள், போடும் சொக்குப் பொடியை மீற, மனிதன் மனதுக்குத் தெம்பு இருக்கிறதா? என்ன?

தோட்டத்தில் நிற்கிருள் அவள். முகத்தில் லஜ்ஜை படர்கிறது. கண்கள் தணிந்து நிற்கின்றன. எதிரே யாரையோ பார்த்துவிட்டன அவை. கண்ணிமைகள் கொஞ்சம் தணிந்தது நல்லதாய்ப் போயிற்று. இல்லாவிடில் படத்தைப் பார்த்தவன் பொம்மையாகவல்லவா ஆகிவிடுவான்!

மோஹனு நின்ருள். ஒருகால், கணவன் கைத் திறத்தை வியந்து நின்ருளோ? இல்லை. அவள் கேட்டாள்: இப்படியும் ஒரு பெண் இருப்பாளா?

'இருக்கிருள். இதே ஊரில் இருக்கிருள்?'

'இதே ஊரிலா......?'

"ஆமாம் சொல்லு......" என்று சொல்லியவாறே கலைஞன் தூரிகையை எடுத்து, கால்களின் கொலுசுகளுக்குப் வர்ணம் திட்ட ஆரம்பித்தான்.

அவள் சொல்ல ஆரம்பித்தாள்:

அடைந்திருந்த கண்ணீர் பொத்துக்கொண்டு கிளம்பிற்று,

'குழந்தையை டாக்டரிடம் காண்பிக்காமல் ஆகாது......'

கலைஞன் திரும்பினுன்.

மோஹனு அவன் முகத்தில் புது ஒளி ஒன்றைக் கண்டாள். பாலைவனத்தின் மேகத்தூள் போன்றது அந்த முகமாற்றம். என்ன மோஹனன் இனி குடும்பத்தில் கவலைகொள்வானு?

ஆம். அவன் கலைஞன்: கவி, எழுத்தாளன், சைத்ரீகன். நன்ருகத்தான் கலையில் வேலை செய்தான். ஆனுல் லாபம்? மோஹனுவின் நகைகள் கடைக்குச் சென்றன? வீட்டு வாடகை மூன்று மாதம் பாக்கி. குழந்தை ஐந்து ஆறு நாளாக ஜுரமாய் இருக்கிருன்.

'மோஹனு வா பார்க்கலாம் குழந்தையை' என்ருன். இருவரும் குழந்தை இருந்த அறைக்குச் சென்றனர்.

— 3 —

மறுநாள் காலை எட்டு மணி. குழந்தை அரற்றல் நின்றது. ஜுரம் தணிந்திருந்தது. அந்த அடையாளமும் நல்லதில்லை, இன்னம் நான்கைந்து நாழிகைகளுக்குள் டாக்டர் வராது போனல் குழந்தைக்கு என்ன ஆகுமோ?

'பயப்படாதே. ஜமீன்தார் நூற்றைம்பது ரூபாய் தருவதாகச் சொல்லியிருக்கிருர்......'

'நூற்றைம்பதா? நம்முடைய ஜமீன்தாரா?'

'ஏன் நம்பவில்லையா? அவருக்கு இந்த மனைவியிடம் மிகவும் ஆசை; தருவார்......'

'சரி போய்விட்டு வாருங்கள். ஆனுல்......'

'ஆனுல் என்ன? அவர் நாளைக்குள் கண்டிப்பாய் வேண்டும் என்ருர். ஒருவராலும் முடியாது என்று சொல்லிவிட்டார்கள். நான் இன்றே முடித்துவிட்டேன். கண்டிப்பாகக் கொடுப்பார்...'

'ஆம், நூற்றைம்பது இல்லாவிட்டால் நூருவது தரமாட்டாரா?'

'அசடே? என்ன சொன்னுய்? நூற்றைம்பதுக்கு ஒரு தம்படி குறைந்தால் வாங்குவேனு?'

'சரி போய் வாருங்கள், வரும்போது...'

'கண்டிப்பாய் டாக்டர் வர்மாவை அழைத்து வருகிறேன் அவ்வளவு தானே?'

மோஹனன் கிளம்பிவிட்டான்.

மோஹனு நின்று பார்த்துக்கொண்டிருந்தாள். ஆசையும் நம்பிக்கையும் கலந்து நின்று வருங் காலத்தைப் பார்ப்பதுபோல் நின்ருள் அவள். பிறகு குழந்தை எண்ணம் வர உள்ளே சென்ருள்;

— 4 —

ஜமீன்தார் ஜோகேந்திரன் அதிர்ஷ்டசாலி. அதிர்ஷ்டம் அவருடைய பெரிய சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்திலும் ஆனந்தக் களி நடனம் புரிந்துகொண்டிருந்தாள்.

அழகிய அரண்மனையில் தம் அறையில் அமர்ந்திருந்தார் அவர். அப்பொழுது தர்வான் வந்து மோஹனன் வந்துவிட்டான் என்ருன். 'உள்ளே அனுப்பு' என்ருர் ஜமீன்தார்.

மோஹனன் வந்தான், படம் பிரித்து, சுவருடன் ஒட்டி வைக்கப்பட்டது. ஜமீன்தார் கண்கள் மலர்ந்தன.

'மோஹனு! பிரமாதம்...ஆகா...!'

'ராஜா சாகேப்!...

'என்ன அப்பா! நீதான் போட்டாயா?...'

'மன்னிக்கவேண்டும். ஒரு விண்ணப்பம்!'

'என்ன! அது!'

'என்னைப் புகழவேண்டாம் என்னை அவசரமாக அனுப்பிவையுங்கள், குழந்தை படுத்துக் கொண்டிருக்கிருன்...!'

'அதற்கென்ன மோஹன், இதோ அனுப்பி விடுகிறேன்...'

ஜமீன்தார் டிராயரை இழுத்தார். ஒரு கட்டு நோட்டை எடுத்து மோஹனனிடம் கொடுத்தார்.

'நோட்டுக்கள் ஒற்றை ரூபாய் நோட்டுக்கள்...'

மோஹனன் சற்று யோசித்து எண்ண ஆரம்பித்தான். 'என்ன அப்பா எண்ணுகிருய்?' என்ருர் ஜமீன்தார்.'

'ஒன்றுமில்லை. நூற்றைம்பது இருக்குமல்லவா?'

'நூற்றைம்பதா? அவ்வளவு இருக்காது. எடுத்துக்கொண்டுபோ. இப்பொழுது இவ்வளவுதான் இருக்கிறது'

'வைத்துக்கொள்ளுங்கள் எல்லாவற்றையும் சேர்த்து வாங்கிக்கொள்கிறேன்...?'

காட்டில் திரியும் புலியைக் கூட்டிலடைக்க முயன்ருல் புலி என்ன செய்யும்?

கர்ஜித்தார் ஜமீன்தார்.

'ஏன் இவ்வளவு போதாதோ?'

சில சமயம் பேப்பர்கூடக் கையைக் கிழிக்கும்! மோஹனன் கண்கள் சிவந்தன.

'போதும் போதாது என்கிறதில்லை, பேசியது நூற்றைம்பது...'

'யார் பேசினுர்கள்? நீ கேட்டாய். தருகிறேன் பார்க்கலாம் என்றேன்.'

'அதனுல்தான் கேட்கிறேன்...'

'தரமுடியாது...' அவர் சொல்லி முடிந்ததற்கும் படம் கிழிந்ததற்கும் அதிக நேரம் வித்யாசம் இல்லை. சுக்குநூருகக் கிழிந்த படத்தைப் பார்த்து விட்டு ஜமீன்தார் முகத்தைத் தூக்கினபோது மோஹனன் அங்கே இல்லை.

— 5 —

மோஹனு குழந்தையின் முகத்தையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவள் உயிரே வெளிப்பட்டுக் குழந்தையின் உடலினுள் புகுந்து அதன் உயிர் எங்கே ஓடி ஒளிய முற்படுகிறது என்று பார்த்துக் கொண்டிருந்தது.

அவர் வந்துவிடுவார். அவருடன் டாக்டரும் வந்துவிடுவார். குழந்தை பிழைக்கலாம்.—

ஆனல் அவருக்குப் பணம் கிடைக்குமா? ஜமீன்தார் கொடுப்பாரா?...

கதவு திறந்தது.

திரும்பினுள். எதிரே மோஹனன் நின்ருன். பார்க்கச் சகிக்காத தோற்றம். பேயறைந்தாற் போல் என்பர். அது என்னவோ, பயங்கரத்துக்கு ஒரு வெற்றிச் சின்னம்!

"டாக்டர் வரவில்லை"

"டாக்டரா? பணம்?"

"ஜமீன்தார் தரவில்லை?"


# ஸ்தோத்ர ரத்னமாலா-

**ஸ்ரீரங்கம் கோடி கன்னிகாதானம் தாதாசாரியார்**

பூதேவி ஸ்தோத்ரம், லக்ஷ்மீ ஸ்தோத்ரம், கிருஷ்ண கர்ணாமிருதம், ராம கர்ணாமிருதம், கோபிகா கீதம் மற்றும் அனேக ஸ்தோத்திர பாடங்களுடன் கூடியது.

விலை ரூ. 1—2—0

கிடைக்குமிடம்:—

"காவேரி" கும்பகோணம்.

''ஜமீன்தார் சுரண்டிக் குடித்த குடிவழித் தோன்றல், கொடுப்பானா?''

''படம்?''

'அதைக் கிழித்து எறிந்துவிட்டேன்.' அவன் சொல்லிக்கொண்டே சென்றான்—

கயவன்! ஐம்பது ரூபாய் கொடுப்பானாம். அவன் பேசவில்லையாம். ஜமீன்தாரோ இல்லையோ!

மோஹனாவுக்குக் கணவன் குணம் தெரியும்.

'நீங்கள் கொடுத்த பணத்தை வாங்கிக்கொள்ளவில்லையா?'

'என்ன ஐம்பது ரூபாயையா? என்ன உளறுகிறாய்?'

ஆம், அவள் உளறத்தான் உளறினாள்.

''அப்படியானால்...''

உடல் உயிருக்குள் அடங்க, அந்த உயிர் வார்த்தைகளில் மாறிவரும் இந்தக் கேள்விக்கு என்ன விடை?





# கலை எழுந்த கதை

கே. எஸ். நாகராஜன்

தமிழ் நாட்டில் எங்கும் அமைதியும் செழிப்பும் இன்பமும் நிறைந்திருந்த காலம். ஜைன மதம் தழைத்தோங்கியிருந்தது. அப்பொழுது மத்திய இந்தியாவில் ஓர் அரசன்

ஆண்டுவந்தான். வயது முதிர்ந்த அவ்வரசனுக்கு இரு பெண்கள் இருந்தனர்; மிக்க அழகு நிறைந்தவர்கள். அவர்களுடைய புன்முறுவலுக்காகத் தங்கள் உயிரையே தியாகஞ் செய்யவும் எத்தனையோ இளவரசர்கள் தயாராயிருந்தார்கள். அம்மங்கையர் அழகு வாய்ந்தவர்களாக இருந்தது மட்டுமன்றி, சங்கீதத்திலும் நாட்டியத்திலும் மிக்க திறம் படைத்தவர்கள். இவ்வரசனின் தங்கையொருத்தி அடுத்த நாட்டில் வசித்து வந்தாள். அவளுக்கு இரண்டு பிள்ளைகள். பெரியவன் ஓவியந் தீட்டுவதில் மிகச் சமர்த்தன். அவனுடைய கலைத்திறம் வெளிநாடுகளிலும் பரவியிருந்தது. அவனுடைய தம்பி பெரிய கவிஞன்; அரசியல் நூல்களை நன்கு கற்றவன்; சிற்பத்திலும் சமர்த்தன். இச்சகோதரர்கள் இருவருமே மிக அழகு வாய்ந்தவர்கள்.

இங்ஙனமிருக்க, வயதான அரசன் நோய்வாய்ப்பட்டான். நாட்டில் மக்கள் மிக்க வருத்தமுற்றனர். ஆனால் அவன் தங்கையின் புதல்வர்களுக்கு மட்டும் உள்ளூர மகிழ்ச்சி ஏற்பட்டது. அரசன் இறந்தவுடன் அவனுடைய பெண்களைத் தாங்கள் மணந்து கொள்வதென்றும், நாட்டைப் பிரித்துக் கொள்வதென்றும் யோசிக்கத் தொடங்கினர். அரசன் இவ்விரு சிறுவர்களையும் தன்னிடம் அழைத்து, "என் பெண்களுடைய உருவங்களை அழகாக வரைந்து வர்ணந் தீட்டவேண்டும். எத்தனையாண்டுகள் சென்றாலும் அப்படங்கள் சிறிதும் கெடாமலும் வர்ணங்கள் சிறிதும் அழியாமலும் இருக்க வேண்டும். இதுவே என் கடைசி ஆசை. இதை நீங்கள்தான் நிறைவேற்றி வைக்க வேண்டும். அப்படங்கள் வரைந்து முடிந்த பின்னர் அவற்றைப் பார்த்துவிட்டுத்தான் உயிர் துறப்பேன். இக்காரியத்தைச் செய்து விட்டீர்களானால் பிறகு என் பெண்களை உங்களுக்கு மணஞ்செய்து கொடுப்பேன்" என்று கூறினான். இது கேட்ட அச்சிறுவர்களிருவரும் தெற்கு நோக்கிப் புறப்பட்டார்கள்.

வர்ண இரகசியம் அறியப் புறப்பட்ட சிறுவர்கள் பல மலைகளையும் காடுகளையும் ஆறுகளையும் கடந்து, பின்னர் ஒரு மலைநாட்டிற்குப் போய்ச்சேர்ந்தார்கள். அங்கு ஊர்களொன்றுமில்லை. ஆங்காங்கே இருந்த குகைகளில் சில ஜைன முனிவர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் மிகவும் அன்புடன் அச்சிறுவர்களை வரவேற்று உபசரித்தார்கள். சில நாட்களுக்குள் இச்சிறுவர்களது கலைத்திறனையறிந்த ஜைன முனிவர்கள் அவர்களைப் பலவாருகப் பாராட்டிப் பேசினார்கள். அவர்களுள் மூத்தவனை ஜைனர் தலைவன் அழைத்து, "இங்கு ஒரு குகையிருக்கிறது. அதில் நான் சொல்லுகிறபடி சில படங்களைத் தீட்டவேண்டும். உனக்கு வேண்டிய கருவிகள் அனைத்தையும் கொடுக்கிறோம். வர்ணக் குழம்பும் கொடுக்கிறோம். ஆனால்



உன் கண்களை இறுகக் கட்டிவிடுவோம். படங்களையெல்லாம் எழுதி முடித்ததும் உனக்கு இவ்விடத்திற்கு அருகேயுள்ள அரசனிடம் ஒரு பெரிய வேலை வாங்கித் தருகிறேன். உனக்கு வேண்டிய அளவு சன்மானமும் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லி அவனை ஒரு குகைக்குள் அனுப்பிவிட்டான். அவனுடைய இளைய சகோதரன் குகைக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.


வெண்மையாக
சலவை செய்யப்
பட்டுள்ளன
பிரகாசமாக
சலவை செய்யப்
பட்டுள்ளன
ஸன்லைட்
சோப்பில்
தான்
SUNLIGHT SOAP
துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!
S. 179-50 TM

குகையைச் சுற்றிக் கடுங்காவல் ஏற்பாடாயி ருந்தது.

இப்படி ஓராண்டு கழிந்தது. இதற்குள் வெளியிலிருந்த சிறுவன் குகையின் இரகசி யத்தைப் பற்றியும், அதற்குள் செல்லும் வழியையும் எப்படியோ அறிந்துகொண் டான். சரியான சமயம் பார்த்து உயிரை யும் மதியாது குகைக்குக் காவலிருந்த முனி வர்களை ஏமாற்றிவிட்டு, அக்குகையின் வாயிலை அடைந்தான்; உள்ளே பார்த்தான். தன் சகோதரன் இறுகக் கட்டிய கண்களு டன் படங்கள் வரைவதையும், அக்குகையின் ஒரு மூலையில் எலும்புந் தோலுமாயிருந்த ஒரு ஜைன முனிவன் பல மூலிகைகளைப் பிழிந்து வர்ணங்களைத் தயாரித்துக் கொண் டிருப்பதையும் கண்டான்; உணவுகூட இல் லாமலே இரண்டொரு நாட்கள் அங்கேயே காத்திருந்தான். உள்ளேயிருந்த முனிவன் சில மூலிகைகளைக் கொண்டுவர, குகையை விட்டு வெளியே சென்றான். அச்சமயம் பார்த்து வெளியிலிருந்த சிறுவன் குகைக் குள் புகுந்தான்; உள்ளேகிடந்த மூலிகைகளை யும் வர்ணப் பொடிகளையும் பத்திரமாக எடுத்துக் கொண்டான். தன் சகோதரனு டைய கண்களை அவிழ்த்து விட்டான். அவனை அழைத்துக் கொண்டு வெளியே ஓடிவிட்டான். வர்ண இரகசியமும் வெளிப் பட்டுவிட்டது.

யாருக்கும் தெரியாமல் முள்ளிலும் கல்லி லும் ஓடித் தங்கள் நாட்டை அடைந்தார்கள், இரு சகோதரர்களும். தலைநகரத்தின் மதிற் கதவுகள் திறந்து கிடந்தன. உள்ளே பார்த் தால் அமைதியைக் காணோம். தாங்கள் முன் னர் இருந்த நாடுதானா அது என்று சந்தே கிக்க வேண்டியிருந்தது. ஜனங்கள் அழுகை யும் ஒலமுமாய்த் தெருக்களில் ஓடிக்கொண் டிருந்தனர். சில வீடுகள் பற்றி எரிந்து கொண்டிருந்தன. இன்னுஞ் சிலவற்றில் போர் வீரர்கள் கொள்ளையடித்துக் கொண் டிருந்தனர். இவையெல்லாம், நாட்டிற் புகுந்து வெற்றிகொண்ட சாளுக்கிய சேனைக ளுடைய அட்டூழியம்.

பரபரப்புடன் இரு சகோதரர்களும் அரண்மனைக்குள் புகுந்து பார்த்தனர். கோரமான காட்சியொன்று. அந்தப்புரத் தில் ஒரு கட்டிலில் இரு அரச குமாரிகளும் ஒருவரையொருவர் அணைத்துக் கொண்ட வண்ணம் கிடப்பதைக் கண்டனர். அருகிற் சென்று உயிரற்ற அவ்வுடல்களையும் அவற் றைச் சுற்றியிருந்த இரத்த வெள்ளத்தை யும் கண்டு, இளைஞர்கள் மூர்ச்சையாயினர். பிறகு அக்கட்டிலருகே கிடந்த கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்ததைப் பார்த்தார் கள்: "எங்கள் தாயாரும், அத்தையும் சாளுக்கிய சேனையால் கொலையுண்டனர். அச் சேனைத்தலைவன் எங்களைக் கற்பழிக்க முயன்றான். மானத்தைப் பெரிதெனக் கரு திய நாங்கள் தற்கொலை புரிந்துகொண் டோம்.''

அதன்பின் உலகில் ஆசையற்றவர்களாய் வாழ்வில் நம்பிக்கையற்றவர்களாய்ப் பித் துப் பிடித்தவர்கள்போல் இளைஞர்கள் இரு வரும் தெற்குநோக்கி நடக்க ஆரம்பித்தனர். கண்ணீர்விடுவது நின்றபாடில்லை. மனம் நோவதும் நிற்கவில்லை. இவ்வாறாகப் பல மாதங்கள் நடந்து, பின்னர் தமிழ் நாட்டின் ஒரு பகுதியை அடைந்தார்கள். தாங்கள் கண்டு நுகர்ந்த அனைத்தையும் நிலைபெற்ற ஓவிய வாயிலாக வெளியிடவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு மேலிட்டது. மனித சஞ்சாரமே இல்லாத ஒரு பாறையைத் தங் கள் இருப்பிடமாகக் கொண்டு, அங்கு ஒரு கோயிலைச் செதுக்கி உருவாக்க ஆரம்பித் தார்கள். இளைய சகோதரன் கோயிலமைக் கும் வேலையை மேற்கொள்ள, முதியவன் அக்கோயிலின் சுவர்களில் ஓவியந் தீட்டும் பணியை மேற்கொண்டான்.

கோயிலும் முடிந்தது. மேற் கூரையிலும் சுவர்களிலும் தூண்களிலும் தாங்கள் கண்ட காட்சிகளையும் வாழ்ந்த வாழ்வையும், எதிர் பார்த்திருந்த இன்பத்தையும் மிக அழகாக அவர்கள் ஓவியத்தின் வாயிலாக வெளியிட் டார்கள். கோயிலின் இரண்டு முகப்புத் தூண்களிலும் தாங்கள் கண்ட, அனுபவிக்க எண்ணிய, அழகிய உருவங்களைச் சமைத்தி ருக்கிறார்கள். அவற்றின் அழகிய முகங்க ளில் ஆனந்தமும் எக்களிப்பும் சேர்ந்து விளையாடுகின்றன. உடலில் நடன பாவமும் தோன்றுகிறது. வருஷக் கணக்காகச் சிற் பியின் உள்ளத்தில் பதிந்துநின்ற பெண்க ளின் உருவங்கள் அல்லவா அவை? பெரிய தொரு நாட்டின் அரசுரிமையைப் பெற வேண்டியிருந்தும், மனத்திலே அமைதி இல் லாமல் ஏதோ நிறைவேறாத சங்கல்பங்களும் பூர்த்தியாகாத மனக் கோட்டைகளும் உள் ளக் கடலிலே கொந்தளித்துக் கொண்டிருந் தும், இவ்வளவு அற்புதமான கலைக்கோயிலை நிறுவ முடிந்ததென்றால், சிற்பக் கலையின் சிருஷ்டித் தத்துவத்தை எண்ணிப் பாருங் கள்! இக்கலைக்கோயில் புதுக்கோட்டைக் கருகிலுள்ள **சிற்றன்ன வாசல்** என்னும் இடத்தில் இன்னும் காட்சியளிக்கிறது. கலை நோக்கில்லாத மக்களால் பல வகைகளில் பழுதுபட்ட போதிலும், தமிழர்களுடைய சிற்பப் பண்பாட்டை அது அழகாக எடுத் துக் காட்டிக்கொண்டு நிற்கிறது. ●

# நேபாள யாத்திரை-3

கே. ஸ்ரீ

சென்ற கட்டுரையில் காத்மாண்டு நேவார் இராஜ்யமாகவும் மிகவும் சீர்வளம் பொருந்தியதாகவுமிருந்தது என்று குறிப்பிட்டேன். காத்மாண்டுவைக் காந்திப்பூர் என்றும் அதன் அருகிலுள்ள படா (பெரிய) காவும் பக்திபுரியாகவும், பாட்டன் என்ற இடம் லலித்புரியாகவும் இருந்தது. எப்படி இந்திய சரித்திரத்தில் அரசர்களுக்கும் சிற்றரசர்களுக்கும் இடையே மூண்ட பொறாமையும் சச்சரவுகளும் தேசத்தையே அந்நிய நாட்டாரிடம் காட்டிக்கொடுத்தன என்று சொல்லப்படுகிறதோ அதேபோல் காத்மாண்டுவின் நேவார் இராஜ்யமும் சில்லறைச் சச்சரவுகளுக்கு இலக்கு ஆகி, கடைசியில் கூர்க்கர்கள் கைவசம் மாறியது.

நேபாளம் என்றாலே காத்மாண்டுவையும் அதன் பள்ளத்தாக்கையும் மற்றும் சுற்றியுள்ள மலைப்பிரதேசங்களையும் மட்டும்தான் குறிப்பிடுகிறது என்பது நேப்பாளிகளின் நம்பிக்கை. நேபாளத்தின் சரித்திரம் கி. பி. 14ஆம் நூற்றாண்டு வரை மூடுமந்திரமாகவே இருக்கிறது. அதுவரையுள்ள சரித்திரக் குறிப்புகள் பெரும்பாலும் நம்பத்தகுந்தவையல்ல என்பது சரித்திர ஆசிரியர்களின் கருத்து, 14ஆம் நூற்றாண்டிலிருந்துதான் நேவார் சாம்ராஜ்யத்தைப் பற்றிய வரலாறுகள் தெரியவருகின்றன. நேவார்கள் தாங்கள் மலையாள நாயர்கள் சந்ததியார் என்று கூறிக்கொள்கின்றனர் என்றாலும் அவர்களின் சாமுத்திரிக லக்ஷணங்களைக் கவனித்தால் அவர்கள் புராதன ஹிமாலய சந்ததியார்கள் வம்சத்தினர்கள் என்றே சொல்லவேண்டும்.

14-ஆம் நூற்றாண்டிலேயே நேவார் இராஜ்யம் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுக் காந்திபுரி, பக்திபுரி, லலித்புரி இவைகளைத் தலைநகர்களாகக் கொண்ட சிற்றரசுகளாயின. மூன்று நூற்றாண்டுகளில் நேவார்கள் தங்களுக்கே பிரத்யேகமான கலைகளைப் பெருக்கியதுடன் மரவேலைப்பாட்டில் தங்களுக்கு நிகர் எவருமில்லை என வெகுவாக முன்னேறினார்கள். இந்த மூன்று பட்டணங்களில் உள்ள கோவில்களும் தர்பார் மண்டபங்களும் இதற்குச்சான்று கூறுகின்றன.

காத்மாண்டு பள்ளத்தாக்கில் நேவார் இராஜ்யம் கொழிப்பதைக் கண்டு அருகிலுள்ள கூர்க்கர்கள் அதன்மேல் ஒரு கண் வைத்துக்கொண்டேயிருந்தார்கள். எனினும், காத்மாண்டுவைத் தாக்கி அதைக் கைப்பற்றும் அளவுக்கு அவர்களுக்குப் போதிய தைரியம் உண்டாகவில்லை. 1742இல் பட்டத்திற்கு வந்த பிருதிவி நாராயண ஷா கூர்க்க இராஜ்யத்தை விஸ்தரிக்கவேண்டும் என்ற பேராசை கொண்டதுடன் மிகவும் அஞ்சா நெஞ்சம்படைத்த தீரனாகவும் இருந்தார். கூர்க்கர்கள் சண்டையில் பராக்கிரமசாலிகள் என்ற பெயரைப் பெரிதும் நம்பி அவர் காந்திபுரியின்மேல் முதல் தடவையாகப் படையெடுத்தார். நேவார் அரசர்களுக்குள் எவ்வளவுதான் அசூயையும் பொறாமையும் நிலவியபோதிலும், ஆபத்து என்று வந்ததும் காந்திபுரி அரசர் ஜெயப்பிரகாச மல்லர் கூர்க்கர் படையெடுப்பை எதிர்த்து அவர்களை முறியடித்து, பிருதிவி நாராயணஷாவைக் கூர்க்க ஜில்லாவுக்குத் திருப்பி விரட்டியடித்தார். பிருதிவி நாராயணஷா மறுமுறை காத்மாண்டுவை வடக்கிலிருந்து தாக்கத் திட்டமிட்டு, பள்ளத்தாக்கின் வட எல்லையை நெருங்கியபோது மறுமுறையும் ஜெயப்பிரகாச மல்லரால் முறியடிக்கப்பட்டு, அவமானத்துடன் கூர்க்க ஜில்லாவுக்குத் திரும்பினார். இருதடவைகள் தோல்வியுற்றும் பிருதிவி நாராயணஷாவிற்கு நேவார் இராஜ்யத்தைக் கைப்பற்றும் எண்ணம் குறையவில்லை. இடையே காந்திபுரி இராஜ்யத்தில் பிரபுக்களுக்கும் அரசாங்கத்தில் பெரும் பங்குகள் கொண்ட பிராமணர்களுக்கும் அபிப்பிராய பேதம் வலுத்து, இராஜ்ய விவகாரங்கள் சீர்கெட்டநிலையை அடைந்தன. இந்தச் சந்தர்ப்பத்தை வெகுவாகப் பயன்படுத்திக்கொண்டார் பிருதிவி நாராயணஷா. வருடம்தோறும் காந்திபுரியில் இந்திரயாத்திரைஎன்ற உத்ஸவம் கொண்டாடப்படுவதுண்டு. அப்போது அரசர் ஊர்வலம் சென்று பொது மைதானத்தில் தர்பார் நடத்துவது வழக்கம். ஜெயப்பிரகாச மல்லருடன் நேரடியாகச் சண்டையிடுவதைவிட அவரைச் சூழ்ச்சியால் வெல்லுவதே மேல் என்று எண்ணிய பிருதிவி நாராயண ஷா தம் சிப்பாய்களைச்



படாகாவ்வில் ஒரு காட்சி. தூரத்தில் தெரிவது ஒரு கோவில்.

சிறுசிறு கும்பல்களாகக் காந்திபுரியின் மேற்கு எல்லையான மலைத்தொடரை கடக்கச் செய்தார். காந்திபுரி இராஜ்யத்திலிருந்த சில துரோகிகள் இந்த அந்நியத் துருப்புக்களுக்கு ரகஸியமாகத் தஞ்சம் கொடுத்து உதவினார்கள். இந்திர யாத்திரை தினம் பிருதிவி நாராயண ஷாவின் தலைமையில் மாறுவேடத்திலுள்ள கூர்க்கத் துருப்புக்கள் தர்பாரில் கலந்துகொண்டனர். குறிப்பிட்ட தருணத்தில் அவர்கள் எழுந்து களேபரம் செய்து, ஜெயப்பிரகாஷ மல்லரைக் கைது செய்ய யத்தனித்தார்கள். இந்தச் சதியைச் சில விநாடிகள் முன்னரே அறிந்த ஜெயப்பிரகாஷ் பக்கத்திலிருந்த கோவிலுக்குள் புகுந்து அவருக்கு மிக நெருங்கிய ஆப்தர்களுடன் காந்திபுரியைவிட்டு வெளியேறினார். கூர்க்கர்கள் கோவிலுக்குள் நுழைவதற்கு முன் வாசற்படி பூராவும் வெடிமருந்து வைக்கப்பட்டு (அவர்கள் உள்ளே நுழைந்ததும் வெடிமருந்து தீ வைக்கப்பட்டு) வெகுபல கூர்க்கத் துருப்புக்கள் மாய்ந்தனர். இதற்குப் பழியாக, பிருதிவி நாராயாண ஷா காந்திபுரிக்கு அருகிலுள்ள ஓரிடத்தைப் பிடித்து அதிலுள்ளவர் எல்லோருடைய மூக்கையும் வெட்டினார். இது காரணமாக அந்த ஊருக்கு நாஸ் கட்டிபூர் (மூக்கறுந்த நகரம்) என்ற பெயர் வழங்கலாயிற்று.

காந்திபுரியை விட்டு வெளியேறிய ஜெயப் பிரகாஷ மல்லர் லலித்புரி அரசரையும் சேர்த்துக் கொண்டு பக்திபுரிக்கு ஓடினார். அங்கு அரசராயிருந்த அவர் சகோதரர் ரஞ்சித் மல்லருடன் பக்திபுரியைக் கூர்க்கப் படையெடுப்பிலிருந்து பாதுகாக்க ஏற்பாடுகள் செய்தார். அவர் எதிர்பார்த்தபடி பிருதிவி நாராயணஷாவும் தம் படையுடன் பக்திபுரியை அடைந்து அதைத் தாக்கினார். பெரும் போர் மூண்டது. ஜெயப்பிரகாச மல்லர் மிக்க திறமையுடன் போர் நடத்தினார். திரும்பவும் நேரடியாகச் சாதிக்கமுடியாததைப் பிருதிவி நாராயணஷா கபடமாகச் சாதித்துக்கொண்டார். ரஞ்சித் மல்லருடைய வைப்பாட்டிப் பிள்ளைகளைக் கையில் போட்டுக்கொண்டு, பக்திபுரியின் பாதுகாப்பில் மிகவும் பலஹீனமான இடத்தைத் தெரிந்துகொண்டு, அதன் மூலம் தாக்கி அந்த ஊரைக் கைப்பற்றினார். சண்டையில் கடைசிவரை தீரமாகப் போர் புரிந்த ஜெயப்பிரகாச மல்லர் படுகாயமடைந்தார். பிருதிவி நாராயண ஷா அவர் தீரத்தை மெச்சி, அவருடைய இறுதிக் கோரிக்கையைக் கேட்டார். ஜெயப்பிரகாசர் தாம் காலில் பாதரக்ஷையுடனும் தலைக்கு மேல் குடையுடனும் (அதாவது அரச மரியாதையுடன்) நேபாளத்திற்கே மிகவும் புண்ணியமான பசுபதிநாத் கோவில் பின்புறமுள்ள கட்டத்தில் பாக்மதி நதி தண்ணீர் தம் காலில் மோத, தாம் இறக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவர் கோரிக்கை அளிக்கப்பட்டது.

ரஞ்சித மல்லர் தமக்கு நேபாளத்தில் தங்கப் பிரியமில்லை என்றும் தம்மை இந்தியாவிலுள்ள காசிக்கு அனுப்பவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். பிருதிவி நாராயணஷா தாராளமாக அவர் கோரிக்கைக்கு இணங்கியதுடன் அவருக்குப் பல்லக்கு வைத்துப் பக்தபுரியைவிட்டு அனுப்பினாராம். சந்திரகிரி உச்சியைப் பல்லக்கு அடைந்ததும் பல்லக்கைவிட்டுக் கீழே இறங்கிய ரஞ்சிதமல்லர் அழகிய காந்திபுரிப் பள்ளத்தாக்கைக் கடைசிமுறையாகப் பார்த்து வயிறு எரிந்து சொன்னாராம்: "என் வைப்பாட்டிப் பிள்ளைகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு எப்படி நாடு இழந்து மனம் ஒடிந்து, நான் வெளி ஏறுகிறேனோ அதேபோல் பிருதிவிநாராயண

ஷாவின் கடைசி சந்ததி அரசரும் அவர் வைப்பாட்டி மக்களால் காட்டிக் கொடுக்கப்படவேண்டும்." (கடைசி சந்ததியார் மஹாராஜ மோஹன ஷம்ஷர் அவருக்கு முன் உள்ள ராணாக்களின் வைப்பாட்டிப் பிள்ளைகளான "C" வகுப்பு ராணாக்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு, முதலில் யதேச்சாதிகாரத்தைக் கைவிட்டு, தற்போது அரசாங்கத்திலிருந்து விலகவேண்டி வந்தது.) ரஞ்சிதமல்லரின் வைப்பாட்டிப் பிள்ளைகளைப் பிருதிவி நாராயணஷா மிகவும் கேவலமாகப் பேசி நடத்தி, அவர்களைக் கொலைசெய்ய உத்தரவிட்டாராம். காரணம் தம் சொந்தத் தந்தையைக் காட்டிக் கொடுத்த கயவர்கள் தம்மையும் காட்டிக் கொடுக்கத் தயங்கமாட்டார்கள் என்பது. அன்று தீரன் பிருதிவி நாராயண ஷா பிடித்த காந்திபுரி இராஜ்யமே நாள் அடைவில் வளர்ந்து, ராணாக்களின் மூதாதையரான பரம பராக்கிரமசாலி ஜங் பகதூர் ராணாக் காலத்தில் திடமாகத் தற்போதைய விஸ்தீரண அளவில் ஸ்தாபிக்கப்பட்டது. எப்படி ஜங் பகதூர் பட்டத்திற்கு வந்தார், எப்படிப் பிரதம மந்திரியாக இருந்த அவரும் மகாராஜா ஆனார் என்ற விவரங்களை அடுத்து வரும் கட்டுரையில் எழுதுகிறேன்.



ஒரே கல்லில் குடையப்பட்ட கிருஷ்ணன்கோவில் பாடனில் இருக்கிறது.

காத்மாண்டு பள்ளத்தாக்கிலுள்ள நேவார் இராஜ்யத்தைப் பிடித்த பிறகு நேவார் சின்னங்கள் எனக் கருதப்படும் கோவில்களையும் மண்டபங்களையும் பிருதிவி நாராயணஷா இடித்துப் பாழாக்கினார். அவர் எவ்வளவு முயன்றும் நேவார்கள் கைத்திறமையுள்ள சரித்திரச் சின்னங்கள் யாவற்றையும் இவரால் தகர்க்க முடியவில்லையென்று காந்திபுரிக்கு விஜயம் செய்யும் யாவரும் அறிந்து கொள்ளமுடியும். ஆனால் பக்திபுரியைப் பற்றியவரை பிருதிவி நாராயணஷாவின் மூர்க்கத்தனம் அங்குள்ள அற்புத சித்திர வேலைப்பாடுகளுள்ள கோவில்களையும் கட்டடங்களையும் தனியே விட்டுவைத்தது. பக்திபுரி காத்மாண்டுவிலிருந்து 7 மைல் தூரத்தில் காத்மாண்டுவைவிட உயர்ந்த சமவெளியில் அமைந்திருக்கிறது. அதன் அருகில் மஹாதேவபோக்ரி என்ற மலைத்தொடர் காண்பவர்களுக்கு அரும் விருந்தை அளிக்கிறது.

நேவார் பட்டணங்களுக்குச் சகஜமான தர்பார் பொது வெளி அரங்கம் ஒன்று இங்கும் காணப்படுகிறது. இங்கு மிகவும் யாத்திரீகர்களின் கவனத்தைக் கவரும் கதவு தங்கத் தகடுகளால் பொருத்தப்பட்டு, அதில் மிகவும் அற்புத வேலைப்பாடுகளடங்கிய சித்திரங்கள் காணப்படுகின்றன. அரங்கத்திற்கு எதிரே அரண்மனையும் அதன் பக்கத்தில் "பச்பன் ஜாலி" என்னும் பிரமாத வேலைப்பாடுகளுள்ள 55 ஜன்னல்களுடைய ஒரு பெரிய கட்டடமும் இருக்கிறது. இவைகளைக் கண்டுதான் நேபாளத்தைப் பற்றி எழுதியிருக்கும் பர்ஸீவல் லாண்டன் (Perceival Landon) மிகவும் அற்புதம் ஆச்சரியம் என்று புகழ்ந்திருக்கிறார். அரண்மனையிலிருந்து சிறிது தூரத்தில் நியத்போல தேவர் என்னும் அழகிய கல்லால் ஆன கோவில் போன்ற ஒரு கட்டடம் இருக்கிறது. இக், கட்டடம் பூபேந்திர மல்லரால் கட்டப்பட்டு உயர்ந்து உயரே செல்லும் படிக்கட்டுகளின் இரு பக்கங்களிலும் முறையே இரு ராக்ஷஸர்கள் இரு யானைகள் இரு சிங்கங்கள் இரு யாளிகள் இரு அம்மன்கள் இவைகளின் அழகிய கல் சிற்பங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அம்மன்களின் பெயர் பாக்கினி சிங்கினி என்றும் ஒன்று புலியின் அவதாரம்



காத்மாண்டுவின் ஒரே சர்வகலாசாலையும் திரிசந்திரா கல்லூரியும் ராணிபொக்ரி என்னும் இடத்தில் அமைந்திருக்கின்றன

என்றும் மற்றொன்று சிங்கத்தின் அவதாரம் என்று சொல்லுகிறார்கள். ஒவ்வொருவகைச் சிற்பத்தின் பல அளவைக் காண்பிப்பதற்காகவே இவைகளைப் பூபேந்திர மல்லன் வைக்கச் சொன்னாராம். அவர் அபிப்பிராயத்தில் யானை ராக்ஷஸனைவிட 10 மடங்கு அதிக பலம் பொருந்தியது என்றும் பின்வரும் மற்ற ஒவ்வொன்றும் முறையே மற்றவைகளைவிட, 10 மடங்குகள் அதிகம் என்றும் கருதினாராம்.

தர்பார் அரங்கத்தில் சில சிப்பாய்களைத் தவிர மற்ற எவரும் காணப்படுவதில்லை. இங்கிருந்து வீதி போகப்போக, குறுகி நீண்ட கடைத்தெரு வழியே செல்லுகிறது. மல்லர் காலத்தில் . தெருவையே செங்கற்களால் தளவரிசை செய்ததால் தற்போது குண்டும் குழியும் இருப்பதுடன் மராமத்து அவர் பிற்காலத்தில் எவரும் செய்ததாகத் தெரியவில்லை. தர்பார் அரங்கம் ஒரு கோடி என்றால் தத்தாத்ரேயர் கோவில் மற்றொரு கோடியில் இருக்கிறது. தத்தாத்ரேயரைத் திரிமூர்த்திகள் அவதாரம் என்றும் அவர் உருவம் மூன்று தலைகளுடன் ஒரே உடலில் அமைந்ததாகவும் சித்திரிப்பது வழக்கம். ஆனால் கோவிலில் மூலஸ்தானத்தில் கற்பனைக்கு மாறாக மூன்று தனித்தனி மூர்த்திகளாகவே இருக்கின்றன. கடைத்தெரு வழியே திரும்பிவரும்போது பொதுவாகக் கண்ணில் படுவது அங்கு இருக்கும் கூட்டமும் காத்மாண்டுவில் காணப்படாத அசல் மலை ஜாதியினர் புழக்கமும். கடைகளில் "ஜெய் சாரதா" "ஜெய்காளி" என்று எழுதியிருப்பதிலிருந்து இங்கே சக்தி உபாஸகர்கள் அதிகம் என்று தெரிகிறது. கடைத்தெரு முடியும் இடம் ஒரு விஸ்தாரமான திறந்தவெளி. இதில் வைத்த கண் வாங்காமல் பார்க்கக் கூடிய ஒன்பது அடுக்கு மாடிகள்கொண்ட பகவதி கோயில் இருக்கிறது. சீனப் பகோடா முறையில் கட்டப்பட்ட இந்தக் கோவில் வெகு நேர்த்தியாக இருப்பதுடன், 1934-இல் உண்டான பெரும் பூகம்பத்திற்குக்கூடச் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. காத்மாண்டுவில் உள்ளது போலவே இங்கும் பலி கொடுக்கும் வழக்கம் அதிகமாக உண்டாம். சுற்றிலும் உள்ள மலைப் பிரதேசத்திலிருந்து வரும் மலை ஜாதியினர் பண்டமாற்று முறையில் கோழி, ஆடு, மாடு முதலியவைகளை உப்பு நெருப்புப் பெட்டி மண்ணெண்ணெய்க்கு மாற்றிச் செல்லுகின்றனர்.

பக்திபுரியிலிருந்து காந்திபுரிக்குச் செல்லும் பாதை உயர்ந்த மலைத்தொடர்களின் நடுவே செல்வதால் ராஸ்தாவிலிருந்து வடக்கே தோன்றும் காட்சி மிகவும் மனோரம்மியமானது. நீண்ட மலைத்தொடர்கள் பூராவும் வெள்ளைப் பனியினால் மூடப்பட்டு மச்ச புச்சர் முதல் எவரஸ்டு சிகரம்வரை எல்லாச்சிகரங்களும் கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்கின்றன. இப்பொழுது பாட்டன் எனச் சொல்லப்படும் லலிதபுரிக்குச் செல்வோம்.

பட்காவ் என்று தற்பொழுது வழங்கும் பக்திபுரி காத்மாண்டுவிலிருந்து வெகு தூரத்தில் இருப்பதால் ஜனப் புழக்கம் குறைவாக இருப்பதுடன் இடமும் கிட்டத்தட்ட கிராமாந்தரத்தை ஒத்திருக்கிறது. ஆனால் பாடன் என்று இப்பொழுது சொல்லப்படும் லலிதபுரி காத்மாண்டுவுக்கு வெகு சமீபம். நானும் என் நண்பரான ஸ்ரீ கஸ்தூரியாவும் பேசிக்கொண்டே பாடனுக்குச் சென்றுவிட்டோம்.

பாடனுக்கு செல்லும் வழி நெடுக ஜன நடமாட்டம் இருப்பதுடன் பெரிய பெரிய மாளிகைகளும் ராஸ்தா நெடுக இருக்கின்றன. ஆங்கிலேயரின் ஒவ்வொரு வீடும் ஒரு கோட்டை என்று சிலேடையாகச் சொல்லுவதுண்டு. ஆனால் இங்கு ஒவ்வொரு ராணாவின் மாளிகையும் ஒவ்வொரு கோட்டை. சொன்னால் விளையாட்டுப்போல் இருக்கும். ஆனால் உண்மை. ஒவ்வொரு ராணாவின் வீட்டிற்கும் தஞ்சாவூர் அரண்மனை

யைச் சுற்றி இருக்கும் மதில் சுவர் உயரத்துக்குக் குறையாத சுவர்கள் இருப்பதுடன் ஏராளமான நிலத்தைச் சுற்றி வளைத்துப் போட்டிருக்கிறார்கள்.

(நடுவே, நான் முதலில் தங்கியிருந்த ஹோட்டலுக்கு ஒரு நமஸ்காரம் செய்துவிட்டுத் திருபுரேச்வர் என்ற காத்மாண்டுவின் தெற்குப் பாகத்தில் உள்ள சர்க்கார் விருந்தினரின் விடுதிக்கு வந்து விட்டேன். சுமார் ஒரு வாரம் அந்த ஐஸ் அவறயில் நடுங்கி ஒடுங்கிய எனக்கு நல்ல பங்களாவே கொடுக்கப்பட்டு, சமையற்காரன் தோட்டக்காரன் உள்பட ஆறு வேலைக்காரர்கள் கொடுக்கப்பட்டனர். இங்கே பல இந்தியர்கள் நேபாள சர்க்கார் சர்வீஸில் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் ரோடு இலாகாவின் தலைவரும் ஸிந்து மாகாண அகதியுமான ஸ்ரீ கதூரியா.)

முன்னர் சொல்லப்பட்டதுபோல் காத்மாண்டுவின் எல்லைக்கு வெளியே சென்றுவிட்டால் நல்ல ராஸ்தாக்கள் கிடையாது. காரணம் பிரபல ராணாக்களுக்குக் காத்மாண்டுவுக்கு வெளியே வேலை இல்லை. ஸ்ரீ கதூரியா சொன்னார்: "என்னை அவசரம் அவசரமாக இந்தியாவிலிருந்து வரவழைத்தார்கள், காத்மாண்டுவிலிருந்து ராக்ஸாலுக்கு ஒரு மோட்டார் ராஸ்தா அமைப்பதற்காக. ஆனால் நடப்பது என்னவென்றால் இங்கு யாவருக்கும் ராஸ்தா அமைப்பு என்றால் புதிராக இருக்கிறது. நான் பிளான் போட்டுப் போட்டுப் பைத்தியம் பிடிக்கும் நிலை வந்துவிட்டது. ஆனால் என்னை விடவும் மாட்டேன் என்கிறார்கள்."

வழியெல்லாம் கும்பல் கும்பலாகப் பெண்டிர் காத்மாண்டுவிலிருந்து பாடனை நோக்கி வந்துகொண்டிருந்தனர். ஸ்ரீ கதூரியா சொன்னார்: 'இவர்கள் எல்லாம் நேவார் ஜாதிப்பெண்கள். ராணாக்கள் தலையெடுத்து நேவார்களை ஒடுக்கிய பிறகு இவர்கள் நிலை கேவலமாகிவிட்டது. நேவார்கள் பெரும்பாலும் பிழைப்புக்கு மார்க்கம் இல்லாமல் கஷ்டப்பட்டார்கள். அப்பொழுது தான் மனித வர்க்கத்துக்கே அவமானம் என்று சொல்லக்கூடிய ஒன்று நடந்தது. ராணா ஜங்பகதூருக்குப் பின்வந்தவர்கள் தங்கள் அரண்மனையில் நேவார்ப் பெண்களுக்கு உத்தியோகம் கொடுப்பதாகச் சொன்னார்கள். கதியற்ற நேவார்ப் பெண்களும் ஒப்புக் கொண்டார்கள். அவர்கள் செய்த (அல்லது செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட) வேலை விபசாரம். ராணாக்கள் ஸ்திரீலோலர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் டஜன் கணக்கில் நேவார்ப் பெண்களைக் கெடுத்து அவர்களுக்குப் பிழைப்பிற்கு வழி செய்வதாக மார்தட்டிக் கொண்டார்கள். முதலில் நேவார்ப் பெண்கள் கூசிக் கூசியே ராணாக்கள் வீட்டிற்குச் செல்வார்கள். கடந்த ஐம்பது வருஷங்களில் இந்தத் தொழில் நடந்ததால் நேவார்ப் பெண்கள் பிறந்ததுமே இந்த இந்த ராணாவிற்கென்று பொட்டுக் கட்டிவிடுகிறார்கள். ஆகவே நேவார்களுக்கு விபசாரம் இப்பொழுது மிகவும் சகஜமாகிவிட்டது.



காத்மாண்டுவில் உள்ள "சாபிஸ்தாரா" நீர்வீழ்ச்சி

நாங்கள் பார்த்த பெண்கள் அன்றைய கடனைத் தத்தம் ராணாக்கள் வீடுகளில் கழித்துவிட்டு, தங்கள் இருப்பிடத்திற்குச் சாயங்காலம் திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்களில் சிலர் வெறிக்க வெறிக்க எங்களையே பார்த்துக்கொண்டு சென்றனர். அவர்கள் யாவரும் விரும்பினவர்கள் சொத்து என்று ஸ்ரீ கதூரியா சொன்னபொழுது எனக்கு மயிர்க்கூச்சல் உண்டாயிற்று.

பாடன் காத்மாண்டுவிலிருந்து சுமார் ஒன்றரை மைலுக்குமேல் இல்லை. மிகவும் தாழ்ந்த வீடுகள் பாடன் வந்துவிட்டது என்று அறிவிக்கின்றன. முதல் முதலில் என் கவனத்தைக் கவர்ந்தது ஒரு தண்ணீர்த் தொட்டி. அதில் தண்ணீர் ஒரு ஸ்திரீயின் கைகளிலிருந்து விழுந்து கொண்டிருந்தது. அந்த ஸ்திரீ உருவம் கடைசி ராணா பிரதமரான மோகன் ஷம்ஷெரின் தாயார் என்றும் சந்திர ஷம்ஷெரின் மனைவி என்றும் அறிந்தேன். அவர் வாழ்க்கையின் கடைசிக் கட்டத்தில் தம் உருவம் பாடனில் தண்ணீர் கொடுப்பதுபோல் வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டாராம்.

நிற்க, காத்மாண்டு பள்ளத்தாக்குப் பூராவும் இயற்கையாக வரும் மலைச் சுனைகளிலிருந்து தண்ணீர் குழாய் மூலம் கொடுக்கப்படுகிறது. தண்

ணீர் பலவித மிருகங்கள் உருவம் கொண்ட தும்பிகள் மூலம் சதா கொட்டிக்கொண்டேயிருக்கிறது. மலையருவிகள் எப்பொழுதும் வற்றுவதில்லையாதலால் தண்ணீருக்குத் தட்டேயில்லை. ஆனால் இந்த வசதியும் இல்லாமல் ஜனங்கள் தவித்த காலத்தில் தான் சந்திர ஷம்ஷெரின் மனைவி உத்தமி தவித்த நாவிற்குத் தண்ணீர் கிட்டும்படி குழாய் வசதி செய்துகொடுத்தாளாம்.

தண்ணீரைச் சர்க்கார் சுத்தம் செய்வதாகத்தான் ஐதீகம். ஆனால் செய்யப்படும் சுத்தம் எல்லாம் இதுதான். தண்ணீர் வரும் இடத்தில் குளோரின் (Chlorine) கொட்டப்படுகிறது. ஆனால் தண்ணீர் மலையிலிருந்து வருவதால் தண்ணீரில் பலவித உலோகங்கள் கலந்திருக்கின்றன. குறிப்பாக, மைக்கா (Mica) தண்ணீரில் மிகவும் கலந்திருக்கிறது. கோடையில் இந்தத் தண்ணீர் அடி வயிற்றில் உப்புசம் உண்டாக்குகிறது என்று காத்மாண்டு வாசிகள் நம்புவதால்தான் அவர்கள் மார்புக்குக்கீழ் பிரிமனை போன்ற துணியைச் சுற்றிக் கொண்டிருக்கின்றனர்.

தண்ணீர்த் தொட்டிக்கு அப்பால் நீண்ட ராஸ்தா குறுக்கிடுகிறது. இதன் வலது பக்கம் தெரிகிறதுதான் தர்பார் மண்டபம். ஆஹா! எவ்வளவு கம்பீரமான கட்டிடம். எவ்வளவு நீளத்திற் கெவ்வளவு அகலம்? கறுப்புக் கறுப்பாகத்தெரிபவைதான் நேவார்களின் பெருமைச் சின்னங்கள். மரத்தால் ஆன ஜன்னல்களில் எவ்வளவு பிரமாதமான வேலைப்பாடுகள். உள்ளே சென்றால் எவ்வளவு விசாலமான மாடங்களும் கூடங்களும்தான் கட்டினார்கள் நேவார்கள்.

எதிரே தெரியும் விசாலமான ஸ்தலம்தான் தர்பார் மைதானம். அதில் காணப்படும் ஸ்தம்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு சரித்திரக் குறிப்பு இருக்கிறது. ஸ்தம்பங்கள் தென்னிந்தியாவில் உள்ள கோவில் துவஜஸ்தம்பங்கள் போலவே இருக்கின்றன.

தர்பார் மண்டபத்தில் காணப்படும் பீடத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். ஸ்தம்பங்களுக்கு மத்தியில் காணப்படுகிறதே ஒரு ஸ்தம்பம், அது பித்தளைமேல் தங்க முலாம் பூசப்பட்ட தகடுகளால் மூடப்பட்டிருக்கிறது, அதன் உச்சியில் தெரிகிறதே ஒரு பக்ஷியின் உருவம் அதைப் பற்றிய கதையொன்று. பிருதிவி நாராயண ஷா காத்மாண்டுவைப் பிடித்த பிறகு, பாடனை ஆண்ட அரசர் ஜயப்பிரகாச மல்லருடன் பக்திபுரிக்கு ஓட நேர்ந்ததாம். அப்பொழுது தர்பார் அரங்கத்தில் கண்ணீரும் கம்பலையுமாக அவரை ஜனங்கள் சந்தித்தபொழுது அரசர் சொன்னாராம்:

"அஞ்சாதீர்கள். அதோ கம்பத்தின்மேல் தெரிகிறதே பக்ஷி அது அங்கே உட்கார்ந்திருக்கும்வரை நானும்(அதாவது என் அந்தராத்மா)இங்கு இருப்பேன். அதுவரை எனக்குள்ள மரியாதைகள் நடக்கட்டும்." அப்பொழுது அரசர் சுட்டிக்காட்டிய பக்ஷியே பின்னர் அங்கேசமைந்துவிட்டதாகஐதிகம்.

கவனிக்கப்பட்ட ஸ்தம்பத்திற்கு அடுத்தாற்போல் இருக்கும் கல்லாலான அற்புத வேலையைக் கவனியுங்கள். அதுதான் கிருஷ்ணன்கோவில். சிற்பாசாரியார் மனதில் எழுந்த வேகங்களை இதில் கொட்டிவிட்டார்கள். இவ்வளவு நுட்பமான வேலைப்பாடு கல்லில் இந்தப்பிராந்தியத்தில் வெகு அபூர்வம். கோவில் நிற்கும் இடத்தில் ஒரு பெரும் பாறை இருந்ததாம், பாடனை நிர்மாணித்தவர்கள் அதை வெட்டிப் பாழாக்கி அப்புறப்படுத்தாமல் அதைக் குடைந்து கோவிலை உருவாக்கினார்களாம்.

இதை அடுத்தாற்போல் இருக்கும் கட்டிடங்கள் இந்தப் பள்ளத்தாக்கில் இருக்கும் ஆயிரக்கணக்கான அநாமதேயக் கோவில்களில் சில. தெருக்கோடியில் உள்ள கட்டிடம் சாதாரணமானது அல்ல, அது பீமஸேனனுக்கு எழுப்பப்பட்ட கோவில். பராக்கிரமத்தையும் தைர்யத்தையும் அஞ்சலிசெய்து வணங்கும் இந்நாட்டில் ஜனங்கள் அஞ்சாநெஞ்சனும் பாண்டவர்களில் தீரனுமான பீமனுக்குக் கோவில் எழுப்பியதில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை.

பீமனின் மூலஸ்தானம் முதல் தளத்தில் இருக்கிறது. இதை அடைய மச்சுப்படிகள் கட்டப்பட்டிருக்கின்றன. சுவர்களும்சரி, படிகளும்சரி, ஒரே மொழுக்கு ஏறி மிகவும் அருவருப்பாக இருக்கிறது.

மூலஸ்தானம் இருக்கும் இடம் வெளிச்சமே இல்லை. தவிர, மூலஸ்தானத்தின்மேல் பல்லாண்டுகளாக ஏற்பட்டிருக்கும் ஸிந்தூரம் மூலஸ்தானத்தைச் சரியாகப் புலப்படாமல் செய்கிறது. கோவிலைக் கவனித்துக்கொள்ளும் அர்ச்சகர் ஒரு பெரிய அகல் ஏற்றிக்கொண்டு வந்தார். மேலும் கீழும் அகலைக் காட்டியதும் பீமனின் ரௌத்திராகாரமான உருவம் புலப்பட்டது. பார்ப்பதற்கு மிகவும் பயமாக இருந்த உருவத்தின் மடியில் கிடத்தப்பட்டிருக்கிறது மற்றொரு உருவம். கோவில் அர்ச்சகர் இது கீசகன் என்றும், பீமன் கீசகனை மடியில் கிடத்தி அவன் வயிற்றைக்கிழித்து வதம் செய்வது போன்று மூலஸ்தானம் செய்யப்பட்டது என்றார்.

பீமனின் கோவிலைவிட்டால் வேறு விசேஷமானது எதுவும் பாட்டனில் இல்லை. பக்திபுரியைப்போல் அல்லாது பாட்டன் காத்மாண்டுவின் அருகே இருப்பதாலும் வீடுகள் ஜாஸ்தியாக இருப்பதாலும் இங்கே ஜனங்கள் அதிகமாக இருக்கிறார்கள். தொழில் ஒன்று ஜனங்களுக்கு வேண்டியதால் வெகு பலர் மாடுகளை வைத்துக் கொண்டு தயிர் வியாபாரம் செய்கிறார்கள். புட்டுப்போல் தோய்க்கப்பட்டு, தனித்தனி வட்டாக்களில் இருக்கும் தயிரைப் பார்த்தாலே நாவில் ருசி உண்டாகிறது. ஆனால் இங்குள்ள ஜனங்களுக்கும் சுகாதாரமான சூழ்நிலைக்கும் வெகு தூரம், ஆகையால் தயிர்ச் சட்டிகளை கிட்டத்தில் பார்த்தால் உலகத்தில் உள்ள அழுக்கெல்லாம் அதிலே கிடப்பது தெரியும்.

நேவார்களின் முக்கிய பட்டணங்களைப்பற்றி ஒருவாறு சொல்லிமுடித்துவிட்டேன். அடுத்தபடி முக்கியமானது எது என்றால் இந்தப் புனிதபூமியான ஹிமாலயப் பிரதேசத்தில் குடிகொண்டிருப்பதாகக் கருதப்படும் ஈசனின் கோவில்கள். இவைகளில் மிகவும் முக்கியமானவை ஸ்ரீபசுபதிநாத், ஸ்வயம்புநாத், பௌத்தநாத், பாலாஜிகோவில்கள். இவை ஒவ்வொன்றிற்கும் ஒரு தனி சரித்திரமே இருக்கிறது. இக்கோவில்களின் சிறப்பைப்பற்றியும் அவைகளின் வரலாற்றையும் அடுத்த கட்டுரையில் கூறுகின்றேன். (தொடரும்)


குணத்தில் சிறந்தது
மைதீன் புகையிலை
தாம்பூலப் பிரியர்கள் மிகவும் விரும்புவது
டிரேட் மார்க்
E.S. MYDEEN & CO
இ.எஸ்.மைதீன்
TRADE MARK
KUMBAKONAM
E.S. மைதீன் & கோ
கும்பகோணம்


ஏன் உங்கள் குழந்தை நோயுற்றிருந்தது?
உங்கள் குழந்தை நோயுற்றிருப்பதின் மூலகாரணத்தைப் பற்றி நிச்சயமாக புரிந்துக் கொள்ளுங்கள். சிகிச்சைக்கு பிறகும் மறுபடி மறுபடி வருவதும், அல்லது அதற்கு கட்டுப்படாமல் நிலைத்திருப்பதுமான உபத்திரவத்தின் சிறிய அறிகுறிகள் ஈரல், குலை நோயைக் குறிப்பதாயிருக்கலாம். இவைகளை ஒரு டாக்டரால் தடுக்க முடியும்.
பசியின்மை — சோம்பல் — சிடுசிடுப்பு — மலச்சிக்கல் அல்லது வயிற்றுப்போக்கு — வாந்தி — பருத்த அல்லது உஷ்ணமான வயிறு — இடைவிடா ஜுரம் — சீத இளைப்பு.
ஜம்மியின்
லிவர்க்யூர்
ஜம்மி வெங்கடரமணய்யர் & சன்ஸ்



# சிவப்புப் பூக்கள்

வல்லிக்கண்ணன்

கொல்லிமலைக் காடுகளைச் சுற்றிவந்த நாங்கள் சிலர் திடீரென்று நின்று விட்டோம். எங்களை அப்படித் திகைத்து நிற்க வைத்தது செக்கச் சிவந்த தோற்றம்தான்.

பசுமை படிந்து கண்ணுக்குக் குளுமையாக விளங்கிய மலைப் பரப்பிலே அங்கங்கே வண்ணக் குவியல்களாய், பன்னிற மலர்கள் பூத்துத் திகழ்ந்தன. மலைமகள் மனம்போன வாக்கிலே அழகழகான மலர்களைச் சூடிக் கொலுவிருப்பது போல் மிளிர்ந்தது அக்கோலம். ஆனால் ஓர் இடத்தில் பூத்துக்கிடந்த மலர்க் குவியல்கள் மாத்திரம் காண்போர் உள்ளத்தில் அர்த்தமற்ற,தெளிவற்ற,

காரணமற்ற ஏதோ உணர்ச்சிக் குழப்பத்தை உண்டாக்குவனபோல் விளங்கின.

செக்கச் சிவந்த மலர்கள். சிவப்புக் குங்குமத்தை அள்ளித் திட்டுத் திட்டாகக் கொட்டிக் குவித்ததுபோல்—இல்லை, ரத்தத்தைத் துளி துளியாக அள்ளித் தெளித்தது போல்—கண்களை உறுத்தும் காட்சியாகவிருந்தது அத்தோற்றம்.

எனினும் அதிலே ஒரு மோகன சக்தியிருந்ததாகவே தோன்றியது. ஒருமுறை பார்த்துவிட்டுத் திரும்பினால், மறுபடியும் மறுபடியும் கண்களை அவற்றின் பக்கமே இழுக்கும் வசிய சக்தி அம்மலர்களுக்கு எங்கிருந்துதான் வந்ததோ!

நாங்கள் மலையின் பல பகுதிகளிலும் சுற்றித் திரிந்திருக்கிறோம். இத்தகைய மலர்கள் வேறு பக்கங்களில் தென்படவில்லை. இந்த இடத்தில் மட்டும் இவை அபூர்வமாக விளங்குகின்றனவே. இதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்கத்தான் வேண்டும். இவ்விதம் நாங்கள் நினைத்தோம்.

இவ் விஷயமாக யாரிடமாவது கேட்டுத் தெளிவு படுத்திக்கொள்ள வேண்டும் என்ற துடிப்பு எங்களுக்கு ஏற்பட்டது. ஆனால் யாரிடம் விசாரிப்பது? மலையடிவாரத்தில் சிறு சிறு ஊர்கள் அமைந்து மலைவாசிகள் குடியிருந்தார்கள். அவர்களிடம் கேட்கலாம். ஆனால் எல்லோருக்கும் உண்மையான காரணம் தெரிந்திருக்கும் என்பது என்ன நிச்சயம்? மலையிலே எவ்வளவோ புல் பூண்டுகள் முளைக்கும். செடி கொடிகள் நிற்கும்; அதெல்லாம் பூமிவாகுத்தானே என்று சொல்லி விட்டால்? இப்படி நாங்களே கதை போட்டுக் கதை அழித்துக்கொண்டிருந்தோம்.

நேரம் போய்க்கொண்டிருந்தது. சூரியன் மேல் திசைநோக்கி விரைந்தது. நெடுமரங்களின் இலைப் பந்தல்களினூடே கதிரோனின் ஒளிக் கோடுகள் பாய்ந்து வந்து மலையின் மேனி எங்கும் விசித்திர விசித்திரமான ஒளி நிழற் சித்திரங்கள் தீட்டிக் கிடந்தன. மரக்கிளைகளின் அடர்ந்த சூழலில் எங்கோ அமர்ந்து ஒரு குருவி தாளம் தவறாது ‘கொக்......கொக்......கொக்’ என்று இசைத்து மகிழ்ந்துகொண்டிருந்தது. கருமமே கண்ணாகிக் கல்லிலே உளி பதித்துச் சுத்தியால் அடித்து, ‘டொக்...டொக்...டொக்’ என்று கல் தச்சன் ஒலி எழுப்புவதுபோன்ற மயக்கத்தைக் கொடுத்தது அக் குருவியின் ஒலிபரப்பு. அணில்கள் சில தாவி ஓடி மகிழ்ந்து கீச்சிட்டு விளையாடிக்கொண்டிருந்தன. சிறிது தொலைவிலே மலைமுடியிலிருந்து மலையின் படர்ந்த பரப்புக்கு வீழ்ந்துகொண்டிருந்த அருவியின் ஓசை இடையறாப் பின்னணி கீதம் போல் ஒலித்தவண்ணமிருந்தது. துள்ளியும் குதித்தும் பறந்தும் களித்தும் திரிந்த பலவகைப் பறவைகளின் நானாவித ஒலிகளும் பிரித்துப் பகுக்கமுடியாத இசையலைகளின் ஒலிச் சம்மேளனமாய்க் கலந்து வியாபித்தன. இயற்கையின் காம்பீர்யமோன நிலையின் சிறப்பைக் குலைப்பனவாக இல்லாமல், அதன் மாண்புக்கு ஓர் இனிமை கூட்டுவனவாகவோ கலந்து குழம்பின எல்லாம்.

நடந்த அலுப்புத் தீரச் சிறிது நேரம் அங்கு ஓரிடத்தில் உட்கார்ந்தோம். எங்கள் பார்வையும் பேச்சும் சிவப்புப் பூக்கள் மீதே வட்டமிட்டுச் சுழன்றன.

‘இந்தப் பூக்களின் அழகிலே சொக்கி விட்டீங்களா சாமி?’ என்ற புதுக்குரல் எங்களைத் திடுக்கிட வைத்தது. கவனித்தோம்.

ஒரு கிழவன் நின்றுகொண்டிருந்தான். எங்கள் பேச்சுச் சுவாரஸ்யத்தில் நாங்கள் அவனைக் கவனிக்கவேயில்லை! அவன் எங்கிருந்துவந்தான், எப்படி, எப்பொழுது வந்தான் என்பதெதையும் நாங்கள் கவனிக்கவில்லை. அதற்காக வெட்கமடைந்தோம்.

‘சிவப்புப் பூ ஒவ்வொன்றும் ரத்தக்கட்டி மாதிரி இல்லே? ரத்தம் துளி துளியாய்ச் சிதறிக் கிடப்பது மாதிரி தான் இருக்கும், ஒவ்வொரு புல்லையும் தனித்தனியாய்க் கவனித்தால்!’

அவன் சொன்ன பிறகுதான் அந்தப் பூக்கள் கோரைப்புல் மாதிரி பட்டையான கரும்பச்சைப் புல்களிடையே பூத்துத் திகழ்வதை உணர்ந்தோம் நாங்கள். மலைப் பிரதேசம். அதனால் புல் கொஞ்சம் பெரிதாகவும் அடர்ந்தும் வளர்ந்து கிடந்தது. அவற்றைச் செதுக்கி எடுக்கவோ, வெட்டிக் குறைக்கவோ முயற்சிப்பாரில்லை. ஆகையால் காடாக மண்டிக்கிடந்தது.

‘ஆமா. இது என்ன பூ?’ என்று கேட்டார் ஒருவர்.

‘என்ன பூயின்னா! இது சிவப்புப் பூவுதான்’ என்று சொல்லிவிட்டுப் பலமாகச் சிரித்தான் அந்த மனிதன்.

அவனுக்கு வயது அதிகமாயிருக்கவேண்டும் எழுபதுக்கு மேலிருக்கும் என்று தோன்றியது அழுக்கு ஏறி மண்ணின் நிறம்பெற்றிருந்த ஒரு துணி தலையிலே முண்டாசாகக் கவிந்திருந்தது. இடுப்பிலும் அதேமாதிரி அழுக்குத்துணி. முழங்காலுக்கு மேலேயே நின்றுவிடும்படி அதைத் தூக்கி எடுத்துத் தார்ப்பாய்ச்சிக் கட்டியிருந்தான், மார்பை மறைக்கத் துணி எதுவுமில்லை. மார்பிலும் கைகளிலும், கால்களிலும் ரோமம் கரடி உடம்பில் இருப்பதுபோல் அடர்ந்து வளர்ந்திருந்தது. காதிலே தங்க உருண்டை கனமாகத் தொங்கியது. முகத்தில் மயிர் படிந்திருந்தது, அவன் க்ஷவரம் செய்து பத்துப் பதினைந்து நாட்களாகிவிட்டன என்று விளம்பரப்படுத்திக் கொண்டு. அவன் ஆறடி உயர மனிதனாக இருந்தான், அவன் கையிலே ஒரு குச்சி. ஊன்றுகோலாக உதவிய குச்சி அது. ஏதோ ஒரு மரத்திலிருந்து முறித்தெடுத்துத் தோலை உரித்து விட்ட நேரான கம்பு. இரண்டுவிரல் பருமனிருக்

கும். பெயருக்காக ஊன்றுகோலே தவிர, உண்மையில் அது கைக்கு ஒரு பூஷணம். அவ்வளவு தான்.

குழிகளுள் கிடந்து துடிக்கும் கருவண்டுகள் மாதிரி மினுமினுத்தன அவன் கண்கள். அவன் நின்ற நிலையும், சிரித்த சிரிப்பும் அவனுக்கு அந்தப் பூக்களைப்பற்றித் தெரியும், அவற்றைப்பற்றி அவன் சொல்லப்போகிருன்; யார் கேட்டாலும் கேட்காவிட்டாலும் அவனுகவே சொல்லத்தான் போகிருன் என்று அறிவித்தன.

என்றாலும் ஒரு நண்பர் கேட்டு வைத்தார். 'சிவப்புப் பூ என்பதுதான் பார்த்தாலே தெரிகிறதே! இதற்கும் ஏதாவதொரு பெயர் இல்லாமலா இருக்கும்?'

அவன் சிரித்தான். வயது அதிகமாகி விட்டதால் அடர்ந்திருக்கும் ரோமங்கள் உதிர்ந்து திரைவிழுந்து சுருங்கிய கழுகுக் கழுத்து மாதிரி தானிருந்தது அவன் கழுத்தும். 'கெக் கெக் கெக்' என்று அவன் சிரிக்கும்போது தொண்டையில் துருத்திநின்ற நரம்பு முடிச்சு மேலும் கீழுமாக ஏறி இறங்கியது வேடிக்கையாக விளங்கியது.



'கன்னிப் பூ என்றும் சொல்லுவாங்க' என்ருன் அவன்.

அவன் பார்வை எங்களைத் தாண்டி அங்கே செவ்வொளி சிதறிக் குவிந்துகிடந்த மலர்கள்மீது தாவி நின்றது. குறிப்பாக அம்மலர்களையே கவனிப்பனபோல் கருவிழிகள் தேங்கி நின்றபோதிலும், அவை கால வெளியைக் கிழித்துப் பாய்ந்து வேறு எங்கோ நிலைத்துநின்றன என்பது நன்ருகப் புரிந்தது. அவன் நெடுமூச்செறிந்துவிட்டுச் சொன்ஞன்:

'அதிசயமான பூக்கள்தான். இவை இந்த இடத்திலே மட்டுமே செழித்துக் கிடப்பதும் ஒரு அதிசயம் தான்!'

அதிசயப் பொருள்போல் நின்ற அவனையே பார்த்திருந்த எங்களில் எவருக்குமே எழுச்சி பிறக்கவில்லை, அந்த வயோதிகனின் பேச்சுக்குத் தடையாகக் கேள்விகள் கேட்கவேண்டுமென்று.

அவனுகவே பேசிக்கொண்டு போனுன்: 'எனக்கு நன்ருக ஞாபகம் இருக்கிறது. நாற்பது ஐம்பது வருஷங்களுக்கு முந்தி நடந்த விஷயம். அப்பொழுதுதான் நான் புதுசாக வேலையில் சேர்ந்திருந்தேன். அப்ப எனக்கு இருபத்துநாலு வயசு. இப்போ எனக்கு எழுபத்திரண்டு வயசாகிறது. நான் வேலையிலே சேர்ந்த மூன்ருவது வருஷத்தில்தான் அது நடந்தது. அப்படியானுல் ...ஆங்...வந்து'

குச்சி குச்சியாய் நீண்டிருந்த விரல்களைக் கூட்டித் தலையைச் சொறிந்தான் அவன்.

'சரியாக நாற்பத்தைந்து வருஷங்களாகின்றன' என்ருர் தமது கணக்கு அறிவைக் காட்டவிரும்பிய நண்பர் ஒருவர்.

'ஆமா. அதுதாங்க. அவ்வளவு வருஷமாச்சு அது நடந்து' என்று சொல்லிப் பெருமூச்சுயிர்த்தான் அவன்.

'எது நடந்து?' எங்களில் அவசரக் குடுக்கையான ஒருவர் விட்டெறிந்த கேள்வி இது.

'அதைத்தான் சொல்ல வாறேன்' என்ற கிழவன், கையில் பிடித்திருந்த கோலைக் கீழே போட்டுவிட்டு, அதனருகிலேயே உட்கார்ந்தான். நன்ருகச் சம்மணமிட்டு அமர்ந்துவிடவில்லை. முழங்கால்களை மடக்கிக் கைகளால் வளைத்துப் பிடித்து, மோவாய் கால் முட்டுகளில் படிக்திருக்கும்படியாகக் குந்திஞன் அவன். முதுகு வளைய, முதுகெலும்பின் ஒன்றிரண்டு முடிச்சுகள் சருமத்தைப் பிய்த்துக்கொண்டு வெளிப்படத் தயாராகிவிட்டதுபோல் துருத்தி நிற்க, அவன் உட்கார்ந்திருந்த கோலம் வயது முதிர்ந்து நன்கு வளர்ந்திருந்த பெரிய குரங்கு ஒன்றைத்தான் ஞாபகப்படுத்தியது.

அவசியமில்லாமலே அவன் 'கெக் கெக் கெக்' கென்று சிரித்துக்கொண்டான். தொண்டையைக் கனைத்துச் செருமிச் சரிப்படுத்திவிட்டுப் பேசத் தொடங்கினுன்:

"மலையிலே காட்டு லாக்காவிலே காவல்கார உத்தியோகம் எனக்கு. இப்ப இல்லை, முன்பு. இப்ப எனக்குப் பென்ஷன் வருது. காடுகளிலேயே செடி கொடி மரங்களிடையே வாழ்ந்து வளர்ந்து பழகிப்போய்விட்டது. அதனுலே கீழேபோய் ஊரிலே வீடு எடுத்து வாழணுங்கிற ஆசையே எனக்கு இல்லை. எனக்கென்ன பெண்டாட்டியா பிள்ளையா? ஒண்ணுமில்லை. மழையிலே நனைஞ்சு வெயிலிலே காய்ஞ்சு வைரம் பாய்ந்துபோன இந்த ஒற்றைக்கட்டை எங்கே யிருந்தாலென்ன? ஆகையினலே இங்கேயே பக்கத்திலே குடிசை கட்டி வசிக்கிறேன். மலைப் பிராந்தியத்திலே பத்துப் பதினைந்து குடிசைகள் சேர்ந்தால் ஒரு

ஊரு ஆகிப்போகிறது. கானப்பாடி, குறிஞ்சிப் பாடி என்று ஏதோ ஒரு பெயரை வைத்துக் கொள்கிறாங்க.

மலைமேலே மூங்கில்கள் காடாக வளர்ந்து கிடக்குதா? சந்தன மரங்களும் நிறையவே உண்டு. இன்னும் பலவித மரஞ்செடிகள், கிழங்குகள் எல்லாம் இருக்கு. பூக்களுக்குத்தான் பஞ்சமே யில்லையே. நீங்க கூடப் பாத்திருப்பீர்களே, இங்கே ரோசாச் செடிகள் வனமாகப் பூத்துக் கிடக்கலே?...''

அவன் பேச்சை நிறுத்திவிட்டு எங்களை நோக்கினான்.

''ஆமாம். நிறையத்தானிருக்கு. பூக்கள் பெரிசு பெரிசாகவும் இருக்கு. ஆனால் மலைமேலுள்ள பூக்களுக்கு, கீழே ஊர்களின் நந்தவனங்களில் மலரும் புஷ்பங்களிலுள்ள இனிய மணம் இல்லையே!'' என்றேன்.

அவன் தனது வழக்கமான சிரிப்பைச் சிதறித் தலையசைத்தான். ''வாஸ்தவம். இங்கே ரோசாப்பூ கூட அரளி மாதிரி—பெரிய தினுசு அடுக்கு அரளிப் பூ மாதிரி—தானிருக்கு. நிறம்தான் உண்டு. அதனாலே என்ன! இங்கே மலையூர்களில் உள்ளவர்களுக்குப் புஷ்பங்களின் மதிப்பும் தெரியாது. காசு மதிப்பும் தெரியாது. இங்குள்ள ரோஜாப்பூக்களைக் கூடை கூடையாகப் பறித்துக்கொண்டுபோய் கீழே ஒரு அணாவுக்கும் இரண்டணாவுக்கும்—பொரி கடலைக்கும் வேர்க்கடலைக்கும் கூட—விற்றுவிட்டு வந்துவிடுவார்கள். சந்தனக் கட்டைகளையும் மூங்கில்களையும் கூட மதிப்புத் தெரியாமல், கொள்ளைமலிவாகக் கொடுத்துவிட்டு வருவார்கள். முன்னாடிதான் இந்த அநியாயம் ரொம்ப ஜாஸ்தி. வரவர அவர்களுக்கும் உலக அனுபவம் ஏற்பட்டுவிட்டது. காட்டு லாக்காவினரும் கட்டுத் திட்டப்படுத்திப் போட்டார்கள்...கெக் கெக்கெக்! அது சரி. நான் சொல்லவந்த விஷயம் வேறே இல்லையா!'' என்றான்.

''ஆமாம். நானே அதை ஞாபகபடுத்தலாமா என்று எண்ணினேன்'' என்றார் தோழர் அவசரம்.

அந்தக் கிழவன் சிரித்தான், வாயினுள் நாக்கைச் சுழற்றி, எச்சிலைக் கூட்டித் தரையிலே உமிழ்ந்துவிட்டு உற்சாகமாக ஆரம்பித்தான்;

''ஆஹ், அந்த நாட்களிலே! காலம் ரொம்ப அருமையாக ஓடியது. நானும் வாட்டசாட்டமாக, கோயில் காளைமாதிரி இருந்தேனா? கட்டுப்பாடு இல்லாத வாழ்க்கை. இஷ்டம்போல் தின்ன அருமையான பழவகைகள். இயற்கையோடு இயற்கையாக ஒத்துப்போன வாழ்வு. ரொம்ப அருமையாகத்தானிருந்தது. அடிக்கடி நான் சுற்றிக் கொண்டேயிருப்பேன். மரத் தொகுதிகள், பூம் புதர்கள், அருவியோரம், செடிகளிடையே—இப்படி, தமாஷாக வாயினால் சீட்டியடித்துக் கொண்டே சுற்றியலைவேன். 'தங்க ரத்தினமே, பொன்னான ரத்தினமே!' 'ஏ டோமா' மெட்டுகளிலே குஷாலாப் பாட்டுப்பாடி மகிழ்வதும் வழக்கம்தான், துள்ளலும் துடிப்பும் நிறைந்த அணில் பிள்ளை மாதிரி குதிபோட்டுத் திரியும் நான் ஓர் இடத்திலேமட்டும் பூனைபோல பதுங்கிப் பதுங்கி நடப்பேன். மரங்களின் பின்னாலே பம்மி நின்று கவனிப்பேன். ரொம்ப அருமையாக இருக்குமய்யா. நாடகம்கூடத் தோற்றது போ என்று தோன்றும்! அது இந்த இடம்தான். உங்களுக்கு என்னவென்று புரியுதா?''

தனது ரகசியத்தில் தானே ஆழ்ந்து வெற்றிச் சிரிப்புச்சிந்திய கிழவன் உறுதியாக அறிவித்தான்: ''புரியாது. அது எப்படிப் புரியும்? நீங்க நினைக்கவே முடியாது. இந்த மலங்காட்டிலே அப்படியொரு அனுபவம் அடிக்கடி நடக்க முடியும்—நடந்திருக்கும்—என்று யாருமே நினைக்க முடியாது.''

நீண்ட ரோமங்கள் நெளிந்து கிடந்த புருவங்கள் எல்லைகட்டி நிற்க, ஆழ்ந்த குட்டைபோல் குழிந்திருந்த கண்களினுள் மினுமினுக்கும் கருமணிகளிலே தனியொளி மின்ன, செம்மலர்களைச் சுற்றிநின்ற பூம்புதர்களை, நிமிர்ந்துநின்ற மரங்களை, காற்றில் அலைபடும் எருக்கம் பஞ்சுபோல் சிதறிக் கிடந்த ஒன்றிரண்டு மேகங்கள் படிந்த நீல நெடுவானை நோக்கினான் அவன், பழங்கால இன்பச் சம்பவங்களின் இனிய நினைவுகள் அவன் உள்ளத்தில் ஓர் குளுமையும் கிளுகிளுப்பும் புகுத்தினவோ என்னவோ? சற்று நேரம் மோனத்துள் ஆழ்ந்திருந்தான் அவன்.

தனி மோன இன்ப நிலையைத் தானே கலைத்து விட்டுத் தொடங்கினான் அவன்: ''இங்கே அடிக்கடி இரண்டு பேர் சந்தித்துப் பேசி விளையாடி மகிழ்வார்கள். ஒரு யுவனும் யுவதியும்......''

''ஓ, காதல் விஷயமா! சரிதான். இங்கே எதிர்பார்க்க முடியாத கதை தான்'' என்று உற்சாகமாகக் கூவி, நிமிர்ந்து உட்கார்ந்தார்கள் ஒன்றிரண்டு பேர்.

கிழவன் பேச்சை நிறுத்தவில்லை.

''இரண்டு பேரும் மலைவாசிகள் தான். ஆனால் வெவ்வேறு ஊர். அவர்கள் ஊர்க்காரர்களுக்கும் வீட்டுப் பெரியவர்களுக்கும் தெரியாமல் சந்தித்து மகிழ்ந்தார்கள் என்று தெரிந்தது. கள்ளத்தனமான கூடல் என்பதனால் அதிலே களிப்பு அதிகமிருந்தது, அருமையான சூழ்நிலையில்லையா! அவர்கள் கவலையற்ற சிட்டுக்குருவிகள் மாதிரி, துள்ளித் திரியும் இன்ப மைனாக்கள்மாதிரி, தங்கள் உலகத்தில் தாங்களாகவே ஆகிவிடும் அணிற்பிள்ளைகள்போல் பொழுது போக்கினார்கள். அவர்கள் வருவதும் பொழுது போகிறவிதமும் அவர்களது பிரக்ஞையில் இரவே யிராது. ஆகா; என்ன கொஞ்சுதல்கள்; என்ன குழைவுகள்,

என்ன கூவல்கள்! எவ்வளவு உற்சாகம், எவ்வளவு கும்மாளம், எவ்வளவு கூத்தடிப்பு! அவர்கள் இந்த உலகத்தையே மறந்துவிட்டார்கள்—தங்களையே மறந்துவிட்டார்கள்—பிறரால் உணரமுடியாத அற்புத உலகம் எங்கோ சிறகடித்து மிதக்கும் சிங்காரச் சிறு பிறவிகள் போலாகிவிட்டார்கள் என்றே தோன்றும் அவ்விருவரையும் மறைந்திருந்து கவனிக்கும்போது!

அவர்கள் சந்திக்கும் வேளைகளுக்குத் திட்டமான கணக்குக் கிடையாது. அதிகாலையில், நடுப்பகலில், மாலையில், வெள்ளி நிலா கொலுவிருக்கும் மோகன இரவுகளில் சிலசமயம்—இப்படி எப்பவாவது, சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சந்திப்பார்கள். பூக்கள் அவர்களின் விளையாட்டுப் பொருள்கள். செடிகள் மரங்கள் எல்லாமே அவர்களது தோழர் தோழிகள்.

அவன் புஷ்பங்களைக் கொய்து கொய்து அவளை அர்ச்சிப்பான். அவள் கூந்தலில் சூட்டுவான். சரம் சரமாகக் கட்டி அவளது கழுத்து, புஜங்கள், தலை எங்கும் சுற்றி அழகுபடுத்தி மகிழ்வான். அவளும் பலவண்ண மலர்களை மாலையாக்கி அவனுக்கு அணிந்து கண்டு களிப்பாள். மலர்களை நிறைய நிறையப் பறித்து அள்ளி அள்ளிச் சிதறுவார்கள்; பரஸ்பரம் மலர்கொண்டு குளிப்பாட்டிக் கலகலவெனச் சிரிப்பார்கள். என்ன சிரிப்பு அது! எவ்வளவு இனியது! பொங்கி நுரை பூத்துக் கொப்புளித்துப் புரண்டோடும் நீரோடையின் கலகலப்புப் போல் ஒலிக்கும் சில வேளை. பாய்ந்து புரண்டு வீழ்ந்து அலைமோதும் அருவியின் ஒலித் தெறிப்பு போல் சிதறும் சிலசமயம். கனி தின்று களித்து மன நிறைவுபெற்ற அணிற்பிள்ளையின் தனியொலிக் கவிதைபோல் அவள் சிரிப்பொலி பரப்புவாள். ஆர்த்து விம்மிப் புரளும் சலங்கையொலிக் கூட்டம் போன்ற கனத்த நாத அலைகளைக் கலக்கவிடுவான் அவன்...

அவன் பேசப்பேச எனது வியப்பு அதிகரித்தது. அந்த வயோதிகன் இப்படிப் பேச எங்கே கற்றுக்கொண்டான்? காதல் மனித உள்ளத்தையே காவிய ஊற்றுக்கண்ணாக மாற்றிவிடும் சக்தி பெற்றிருக்கிறது போலும்! காதல் என்கிற நினைப்பிற்கே மோகன சக்தி உண்டுபோலும்! மனித உள்ளத்தில் உறங்கிக் கிடக்கும் கலையுணர்வை, கவித்துவ சக்திகளையெல்லாம் விழிப்புற்று விகசிக்க வைக்கும் எழிற் பெண் உஷை போலும் இக்காதல் எனும் மாயாசக்தி! இவ்வாறு எண்ணினேன் நான்,

''மறக்க முடியாத இன்பப் பிறவிகள் அவர்கள், அவள் பூப்போன்றவள். அவனே அவளைத் தொட்டுத் தொட்டு மகிழ்ந்து அவளுக்கும் மகிழ்வூட்டிய இளங்காற்று!...''

அந்த வயோதிகன் மறுபடியும் நெடிய பெருமூச்செறிந்தான்.

''ஊம். இந்த உலகத்திலே இன்பம் நிலையானதல்ல என்று சொல்வது உண்மைதான். ஆனந்தமான அனுபவங்கள் எல்லாம் அனுபவிக்கப்படுகிறபோது, இவைதான் உண்மை; இவை நிலைத்து நிற்கும் என்ற மயக்கத்தை நமக்குத் தருகின்றன. ஆனால் வாழ்வின் போக்கு நமக்கு ஏமாற்றம்தான் அளிக்கிறது. வேதனையும் மனக்கசப்பும்தான் விளைவுகளாகின்றன.

அவர்களின் இன்பமும் அதே கதியைத்தான் அடைந்தது. வசந்தகாலத்தின் இளவெயிலில் வனப்புச் சிறகடித்து ஒன்றையொன்று துரத்திக் களித்து உல்லாசப் பொழுதுபோக்கும் வண்ணப் பூச்சிகள்போல் வாழ்ந்த அவனும் அவளும் காலவரம்பற்று, தங்கு தடைகளின்றி, மனோகரமான வாழ்வு வாழலாம் என்று நம்பித்தானேயிருப்பார்கள்! அவர்களது இன்பமெல்லாம் நீர்க்குமிழி போல் விம்மி வெடித்துவிடும் என்று கனவாவது கண்டிருக்கமுடியுமா? அதிலும் அவர்கள் ஆனந்த வாழ்வின் முதல் படியிலேதானே காலடி எடுத்து வைத்திருக்கிறார்கள்? அது சோகமானமுடிவு ஐயா; பயங்கரமான முடிவு. அப்படி நடக்கும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாதுதான்.''

எங்கள் ஆவலைத் தூண்ட விரும்பியவன்போல் அவன் சிறிது தடுமாறிப் பேச்சை நிறுத்தினான். பிறகு அவனாகவே தொடர்ந்தான்.

''அவனுக்கு வேறு கிராமம்; அவள் வேறொரு சிற்றூரைச் சேர்ந்தவள் என்று சொன்னேன் அல்லவா? இரண்டு கிராமத்தினருக்கும் பகை உண்டு என்றும், முக்கியமாக அவன் குடும்பத்திற்கும் அவள் குடும்பத்திற்கும் தீராப் பகையென்றும் பின்னர் எனக்குத் தெரிந்தது. அவன் பெயர் நாகன், அவள் பெயர் செல்லி. இந்த விஷயம்கூட எனக்குப் பிறகுதான் தெரியவந்தது.

குடும்பப் பகையும் ஊர்ப்பகையும் இருந்ததனால்தான் அவனும் அவளும் கள்ளத்தனமாகச் சந்தித்திருக்கிறார்கள். அவன் வில்லும் அம்பும் வைத்து வேட்டையாடுவதற்காக நெடுகிலும் சுற்றுவது வழக்கம். காட்டுப்பன்றி, முள்ளெலி பழந்தின்னி வௌவால், முயல்குட்டி இப்படி எவ்வளவோ இல்லையா பிடிப்பதற்கு! அவள் விறகு முறிக்க, கிழங்குகள் சேகரிக்க என்று திரிவாள். இருவருக்கும் சந்திப்பு ஏற்பட்டு எப்படியோ தொடர்பு உண்டாகி உறவு வளர்ந்து வந்தது. அவர்கள் உறவு நன்கு கனிந்து முழு அழகுடன் விளங்கியபோதுதான் நான் அவர்களைப் பார்க்க நேர்ந்தது. முதல் முறையாகப் பார்த்ததிலிருந்து அடிக்கடி அவர்களைக் கண்காணித்து வந்தேன்.

அந்தச் சம்பவம் நிகழும்போது எனக்குத் தெரியாது. கொஞ்சநேரம் சென்ற பிறகுதான் தெரியும்.

அன்று அந்த இடத்தில் அதிகாலையில் சந்திக்க வேண்டும்; மலை உச்சிக்கு—அருவி பிறக்கிற



# பால், அநேகமாக ஒரு பூரண உணவு

மற்றெந்த உணவைக்காட்டிலும் பாலில் உணவு சத்துக்கள் மிகவும் ஜாஸ்தியாக இருக்கின்றன. இக்காரணத்தால், கிடைக்கும்பொழுது ஒன்று அல்லது இரண்டு கிளாஸ் பால் சாப்பிடுவது வயது வந்தவர்களுக்கு மிகவும் பயன் தரும். ஆனால் குழந்தைகளுக்கும், தேக மெலிவுற்றவர்களுக்கும், கிழவர்களுக்கும் இது மிகவும் முக்கியமானது. சாதாரணமாக, ஆதர்ச தினசரி உணவு, கீழ்கண்ட வகைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உணவு பொருள்கள் அடங்கிய ''சமநிலை'' உணவுதான்: (1) விடமின்கள்: பால், பழம், பச்சைக்காய்கறிகள், வேகவைத்த காய்கறிகள், ஈரல், (2) தாதுப் பொருள்கள்: பால், முட்டை, பாலேடு, மீன், பசலைக்கீரை, இதர பச்சை இலைக்கறிகள், கொட்டைகள், (3) புரதசத்துக்கள்: பால், முட்டை, இறைச்சி, பருப்புவகைகள், மீன், கொட்டைகள், (4) மாவுசத்துக்கள்: எல்லாவிததானியங்கள், அரிசி, உருளைக்கிழங்கு, வாழைப்பழம். ஐந்தாவது வகையான கொழுப்பிற்கு: சிறந்த கொழுப்புகளில் ஒன்றாகிய டால்டா சுத்தமானது, ஊட்டமளிக்கக்கூடியது, எல்லாவித சமையலுக்கும் உகந்தது. சீல்வைத்த டின்களில் சுத்தமாகவும், புதிதாகவும் உங்களுக்கு கிடைக்கின்றது.




*மரக்கறி உணவு அதிக ஊட்டமளிக்குமா?*

*இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!*

## டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

*தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1*

HVM. 152-172 TM



குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

# டோங்ரேயின் பாலாம்ருதம்



K. T. டோங்கரே அண் கோ., பம்பாய்-4.



# இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

மதராஸ்

ஸர். A. ராமஸ்வாமி முதலியார்,
K. C. S. I., D. C. L. (Oxon)
சேர்மன்

| | |
|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 18,75,000 |
| ரிஸர்வ் நிதி | ரூ. 10,75,000 |

சென்னையிலுள்ள ஆபீஸ்கள் :

நேதாஜி ஸுபாஷ் சந்திரபோஸ் ரோட், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, தியாகராயநகர் & பெரியமெட்.

தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கிய நகரங்களிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

இடத்திற்கே—போகவேண்டும்; நிறைய வேட்டையும் கிடைக்கும். ஆனந்தமாகவும் இருக்கும் என்று அவர்கள் திட்டமிட்டிருந்திருக்கிறார்கள். அப்பொழுது தேய்பிறைக் காலம், பின்னிரவு நிலவு. விடிவதற்குக் கொஞ்ச நேரம் முன்புவரைகூட நிலவு பளிச்சென அடித்துக்கொண்டிருந்தது.

அதுமாதிரி சமயங்களில் ராத்திரி இரண்டு மூன்று மணி யிருக்கும்போது காலை ஐந்து ஐந்தரை மணியாகி விட்டதுபோல் தோணுதே என்று எண்ணத் தூண்டும். வைகறை நேரத்திலே 'விடிய இன்னும் ரொம்ப நேரம் இருக்கும் போல் தெரியுதே. நிலவு என்னமா இருக்குது!' என்ற மயக்கத்தை எழுப்பும். பால் நிலவிலே அவ்வித வசியசக்தி இருக்கிறது.

அன்றும் அப்படித்தான் இருந்தது. விடியப் போகிறது என்ற எண்ணம் நாகனுக்கு அன்புக்குரியவளைச் சந்திக்கப் போகிறோம்; அவளைக் காக்க வைக்கக் கூடாது என்ற துடிப்பு வேறு. சீக்கிரம் போகவேண்டும் என்ற பதட்டத்தில் அவன் வேகவேகமாக வந்தான். வில்லும் அம்பும் எடுத்துக்கொண்டுதான். இந்த இடத்தை நெருங்குவதற்குள் அவன் மயக்கம் தீர்ந்துவிட்டது. காலையிலே துயில் நீத்துக் கலகலப்பு ஏற்படுத்தும் பறவை யினங்களில் ஒன்றுகூட விழிக்கவில்லை. குளிர் காற்றுத்தான் ஊசு ஊசு என்று வீசிக்கொண்டிருந்தது பனி லேசாக விழுந்தது. இன்னும் ரொம்ப நேரம் கிடக்கும் போலிருக்கிறதே என்று நினைத்தான். என்ன செய்வது; செல்லி வந்திருக்கமாட்டாள்; அவள் வரும்வரை காத்திருக்கலாமா, இப்படி இந்தப் பக்கமெல்லாம் சுற்றலாமா என்று தயங்கி நின்றான். சிறு சலசலப்பு அவன் கவனத்தைக் கவர்ந்தது. அதோ அந்தப் புதர் அருகே கறுப்பாக ஏதோ நின்று அசைவதாக அவனுக்குப் பட்டது. பன்றியாக இருக்கலாம் என்று நினைத்தான். உர் உர் என்று பன்றி உறுமல் மாதிரி ஒலி எழவும், அவன் வில்லில் அம்பைத் தொடுத்து எறிந்து விட்டான். யோசிக்க வில்லை. நிதானிக்கவில்லை. கண்ணை இப்படி மூடி முழித்து இமைக்கிறதுக்குள்ளே நடந்த காரியம் அது. அன்றைக்கு நாசகாரச் சனியன் அவன் பிடரியில் நின்று அவனை ஆட்டி வைத்திருந்திருக்கிறான்!

'ஐயோ நாகா' என்று ஒரு அலறல். மார்பைக் கையால் பிடித்துக்கொண்டு எழுந்து நிற்க முயன்று முடியாமல் அதோ அந்தப் புல் தரையிலே சாய்ந்துவிட்டாள் செல்லி. ஆமாம். அவளே தான். அந்தப் பைத்தியக்காரப் பெண் அவனுக்கு முன்னாடியே அங்கு வந்திருக்கிறது. நிலவைக் கண்டு அதுவும் ஏமாந்துவிட்டது. அவன் வரவில்லை என்றதும் அந்த இடத்தில் புல்லில் படுத்துக் கிடந்திருக்கிறது. அவன் வருவது தெரிந்ததும் அவளுக்கு விளையாட்டுப் புத்தி தலையெடுத்து விட்டது. நாசகாலத்தின் விபரீத புத்திதான். வேறே என்ன? அவனைப் பயங்காட்டிப் பூச்சாண்டி பிடிக்க நினைத்ததோ என்னமோ! கைகளை



யும் கால்களையும் மடக்கி, நாலுகால் பிராணி மாதிரி நின்றுகொண்டு, பன்றியாக நடிக்க முயன்றிருக்கிறாள். பலனை அனுபவித்தாள்.

'என் செல்லி!' என்று அலறினான் அவன். மரங்களை முட்டிமோதி எங்கும் எதிரொலித்தது அந்த அலறல்.

நிலவொளியினால் மயங்கியவர்களில் நானும் ஒருவன். தூக்கம் கலைந்ததும் என் மனதில் என்னவோ பாரம் கவிந்துவிட்டது, ஏதோ கேடு காலம் ஏற்படப் போகிறது என்று எனக்குத் தோன்றியது, 'விடியத் தான் போகிறதே, அலைந்து திரியலாம்' என்று சுற்றிச் சுற்றி வந்தேன். விடியவில்லை தீனக்குரலும் ஏக்க அலறலும் என்னை இங்கே இழுத்துவந்தன. பார்த்தேன். அவள் அவன் மடியிலே கிடந்தாள். ரத்தம் குபுகுபு வென்று பொங்கிவழிந்து புல்பரப்பு பூராவையும் நனைத்திருந்தது. அவன் அவள்மீது விழுந்து புரண்டு ஓலமிட்டுக் கொண்டிருந்தான்.

நான் அருகே போய் என்ன விஷயமென்று விசாரித்தேன். முதலில் திடுக்கிட்டு மிரண்ட அவன் என்னை இனம் கண்டுகொண்டதும், நடந்த கதையைச் சொன்னான். விக்கலுக்கும் விம்மலுக்குமிடையே வேதனைக் குரலோடு தங்கள் இன்பத்தின் சோக முடிவைப்பற்றிச் சொன்னான்.

எனக்கும் இதய வேதனை ஏற்பட்டது. அவர்களது இன்பச் சிறு குறும்புகளை எல்லாம் கண்டு களித்திருந்த எனக்கு அந்தப் பெண்ணின் முடிவு ஏகப்பட்ட வருத்தம் அளித்தது. கண்களில் நீர் கட்டியது.

அவன் செய்திருப்பது கொலை; வேண்டுமென்று செய்யாவிட்டாலும் அது கொலைதான். இதை நான் ரிப்போர்ட்டு செய்யவேண்டும். சட்டப்படி நடவடிக்கைகள் தொடங்கக் காலதாமதம் ஏற்படலாம். அதற்குள் அவளைச் சேர்ந்தவர்கள் இவனைச் சும்மாவா விடுவார்கள்? வெட்டிப் பொங்கவிட்டுவிட மாட்டார்களா? இப்படியெல்லாம் எண்ணங்கள் ஓடின என் மனதில். எனக்குச் செயல் எதுவுமே ஓடவில்லை.

மறுபடியும் ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது எனக்கு. அவன் அவள் இருதயத்தை ருசிபார்த்த அம்பை எடுத்துத் தன் நெஞ்சிலே ஆழக் குத்திக்கொண்டான். பல்லைக் கடித்து பல்லால் உதட்டைக் கடித்துக்கொண்டு, அழுத்தி உள்ளே அம்பின் கூர்நுனியை இறக்கிவிட்டான் அவன். களகளவென்று ரத்தம் பொங்கிப் பாய்ந்து வடிந்தது. அவனும் சாய்ந்தான். அவளை அன்போடு அணைத்தபடி அவளருகிலேயே சாய்ந்தான். இருவரது ரத்தமும் ஒன்றாய்க் கலந்தது.

என் உள்ளம் நடுங்கியது. உடல் நடுங்கியது. கைகால்கள் எல்லாம் நடுங்க, நாக்குழற 'ஓ ஏய்!' என்று கத்திக்கொண்டு நின்றேனே தவிர, என்னை நானே சமாளித்து ஒன்றும் செய்ய இயலவில்லை, அதற்குள் அவன் கதையும் முடிந்துவிட்டது,

அப்புறம் ஊரார்கள் வந்தது போனதெல்லாம் முக்கியமல்ல. நான் சொல்லப்போவதை நீங்கள் நம்புவீர்களோ என்னவோ. நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் எனக்குக் கவலையில்லை. இது நான் கண்ணால் கண்டது. உண்மையாக நடந்தது. எனக்கு இந்தச் சிவப்புப் பூக்கள்தான் சாட்சி. புல்லும் புதரும் மரங்களும் சாட்சிகள்தான்!

அவனும் அவளும் இறந்ததற்குப் பிறகு பல தினங்கள்வரை நான் இந்த இடத்திற்கு வரவேயில்லை. திடீரென்று ஒரு நாள் ஆசை என்னை உந்தியது. இங்கு வந்துபார்த்தேன். ரத்தம் கட்டி கட்டியாய் உறைந்து கிடப்பது போலிருந்தது. இருக்க முடியாதே; இரண்டு மூன்று தடவை பெரு மழை பிடித்து விளாசியதே என்ற சந்தேகம் எனக்கு, அருகில் வந்து கவனித்தால், பூக்கள்! ரத்தத் துளிகள் மாதிரி பூக்கள்! சிவப்புப் பூக்கள் அதற்குமுன் இங்கு கிடையவே கிடையாது. இந்த இனத்துப் புல் அதுவரை புஷ்பித்து நின்றது கூடக் கிடையாது, மலையிலேயே வாழ்ந்த எனக்குத் தெரியாதா என்ன! கவலையற்று வாழ்ந்த அன்பு உருவங்களின் புனித ரத்தத்திலே பூத்த புது மலர்கள் அவை என்று என் உள்ளம் சொல்லிற்று.

நான் மறுநாள் வந்து பார்த்தேன். மீண்டும் மீண்டும் வந்து கவனித்தேன். இம்மலர்க் குலம் அழிந்துவிடவில்லை. தினந்தோறும் புதுப்புதுப் பூக்கள். பளபளக்கும் சிவப்புக் கல்லுகள்போல் கவர்ச்சி நிறைந்த புஷ்பங்கள். இந்த இனத்துப் புல் கருகிப் பட்டுப்போகவில்லை. வருஷா வருஷம் வளர்ந்து வாழ்கிறது. நீங்களும்தான் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே. இந்தச் சிவப்புப் புஷ்பங்களிலே தனியானதொரு வசீகரம் இருப்பதாக நீங்கள் உணரவில்லையா என்ன?"

அவன் பேசுவதை நிறுத்திவிட்டு எங்களைக் கவனித்தான். நாங்கள் தலையசைத்தோம். இவ்வுண்மையைத் தான் நாங்கள் முதலிலேயே உணர்ந்திருந்தோமே!

அவன் சொன்னான்: "இதில் மற்றுமொரு விசேஷம், இந்த ரகச் சிவப்புப் பூக்கள் புஷ்பிக்கிற புல்வகை இம்மலை நெடுக வேறெங்குத் தேடினாலும் தென்படுவதில்லை. இந்த ஓர் இடத்தில்தானிருக்கிறது சில செடிகள் சில பருவங்களில் மட்டும் தானே பூத்து விளங்கும்? இவை அப்படியில்லை. வருஷம் பூராவும் மலர்ந்து விளங்குகின்றன."

அவன் எழுந்து நின்று கைகளைத் தலைக்குமேல் உயர்த்தி விரல்களைக் கோத்து, உடலை நீட்டி நிமிர்த்தி நெளித்துச் சோம்பல் முறித்துக் கொட்டாவி விட்டான். பிறகு குனிந்து ஊன்றுகோலை எடுத்து நிமிர்ந்து நின்றான்.

மேற்குத் திசையில் இறங்கிக்கொண்டிருந்த சூரியனின் ஒளி அவன் நிழலை மிக நீண்டதாகத் தீட்டியது தரையிலே.

"சாமிமார்களே, நீங்கள் புறப்படவில்லையா? நேரமாகிவிட்டதே. நிலாக் காலம்தான். என்றாலும் இரவு வருவதற்குள் மலையை விட்டு இறங்கி அடிவாரத்தை அடைவதுதான் நல்லது" என்று சொல்லிவிட்டு, வந்ததுபோலவே போனான் அந்த மனிதன். அவனுக்கு யாரும் வரவேற்புக் கூறவில்லை; அவன் பிரிவுரை சொல்லி நடக்கவுமில்லை.

மாலைநேரச் சூரியனின் மஞ்சள் ஒளி மரங்களூடே, செடிகளின் முடிகள் மேலே, புல் தரைமீது, புஷ்பங்கள் பேரில் எல்லாம் படிந்து பரவியது.

நாங்களும் கிளம்பத் தயாரானோம். எங்கள் கண்கள் அங்கு மலிந்து கிடந்த சிவப்புப் பூக்கள் மீதே நிலைத்து நின்றன. அம் மலர்களின் வசீகரம் அப்படி!

மழைக்காலத்தில் பசும்புல் வெளிகளில் மலிந்து காணப்படுமே, செக்கச் சிவந்த சிறு ஜந்துக்கள்—உருண்டையாய், பட்டுப்போல் மென்மையும், வெல்வெட்போல் பளபளப்பும் பெற்ற பூச்சிகள்—'பட்டுப்பூச்சி. பட்டுப்பூச்சி' என்று சிறுவர்களின் உற்சாகத்தைத் தூண்டும் பொருள்களாக விளங்குமே!—அவை போல் மினுமினுத்தன சிவப்புப் பூக்கள்.

'அவன் சொன்னது உண்மையாக இருக்குமா?' என்று சந்தேகக் குரல் எழுப்பினார் ஒருவர்.

'உண்மையோ பொய்யோ. சொல்ல நினைத்ததை அழகாகச் சொல்வதற்குக் கற்றுக் கொண்டிருக்கிறான்' என்றேன் நான்.

நாங்கள் நடந்தோம், அந்தப் புஷ்பங்களைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே நடந்தோம்,







# பெட்ரோலியம்

அ. வேணுகோபாலன்

உலகத்தில் ஜனத்தொகை அதிகமுள்ள நாடுகளுள் இந்தியாவும் ஒன்றாகும். இத்தொகைக்கேற்ப, போக்குவரவு சாதனங்களாக உபயோகப்படுவது ரயில், மோட்டார் போன்ற வாகனாதிகள் தான். கிராமாந்தரப் பக்கங்களிலும், பட்டணங்களிலும் அதிகமாக உபயோகப்படுவது மோட்டார்வகைகள் தான். இவைகளை ஓட்டப் பெட்ரோல் இன்றியமையாதது. எனவே, போக்குவரவு சாதனங்கள் சுலபமாகக் கிடைக்கவேண்டுமானால் பெட்ரோல் அத்தியாவசியம்; இதன்றி, தற்காலத்தில் விமானங்களின் உபயோகமும் அதிகரித்துக்கொண்டே செல்வதால், உலகத்திலேயே இப்போது பெட்ரோலின் தேவை அதிகரித்திருக்கிறது.

பெட்ரோலென்றாலென்னவென்று அறியாமலிருந்த மனித வர்க்கம், இன்று பெட்ரோலில்லாவிட்டால் உலகமேயில்லையென்று கூறுமளவிற்கு இதன் உபயோகம் அதிகரித்திருப்பதிலிருந்தே இதன் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளலாம்.

மோட்டார் வண்டிகளிலுள்ள இயந்திரங்கள் வேலைசெய்ய, பெட்ரோல் உபயோகமாகிறதென்னும் விஷயம் அனைவரும் அறிந்ததே. ஆனால், இது எப்படி இயந்திரங்களை இயக்குகிறது என்னும் விஷயம் அநேகருக்குத் தெரியாது. இவ்வியந்திரங்கள் வேலைசெய்ய, பெட்ரோல் ஆவியையும், காற்றையும் கலந்து, அதனை இறுக்கி மின்பொறியினால் பற்ற வைக்கிறார்கள். அப்போதுதான் இயந்திரங்கள் வேலை செய்கின்றன. இவைகளுக்கு அதிர்ச்சிவேண்டும். ஆகவே, 'டெட்ரா ஈதிலைடு'வை பெட்ரோலுடன் சேர்த்து அதிர்ச்சியையுண்டுபண்ணுகிறார்கள். விமான உபயோகத்திற்கு இந்த அதிர்ச்சி வேண்டியதில்லை; எனவே, இதனுபயோகத்திற்கு 'டெட்ரா ஈதிலைடு'வைச் சேர்க்கமாட்டார்கள். பெட்ரோல் என்கிறோமே பெட்ரோலென்றாலென்ன?

பெட்ரோல் என்பது ஒருவகை எண்ணெய். இவ்வார்த்தை 'பெட்ர ஓலியம்' என்னும் இருவார்த்தைகளிலிருந்து பிறந்தாகக் கூறுகிறார்கள். லத்தீன் மொழியில் பெட்ர (Petra) என்னும் வார்த்தைக்கு 'பாறை' என்பது பொருள்; கிரேக்க பாஷையில் ஓலியம் (Oleum) என்பதற்கு எண்ணெய் என்பது பொருள். இவ்விரு வார்த்தைகளும் சேர்ந்தே பெட்ரோலியம் (Petroleum=பாறை எண்ணெய்) என்னும் பெயராகியிருக்கிறதாகக் கூறப்படுகிறது. இது பாறைகளினடியில் தேங்கியிருப்பதினால் பாறை எண்ணெய் என்றும் குறிப்பிடுகிறார்கள்.

படம்;-பெட்ரோல் வினியோகிக்கும் 'பர்மாஷெல்' கம்பெனியின் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பம்பாய் தலைமை ஆபீஸ்

பெட்ரோலியமென்னும் கலவையில் கிடைக்கும் ஒரு பகுதிதான் பெட்ரோல் (Petrol). ஆயிரமாயிரம் வருடங்களுக்கு முன்பு செடி, கொடி போன்ற தாவரங்கள் மண்ணில் புதைந்து வெப்பத்தினாலும், அழுத்தத்தினாலும் நிலக்கரியாகக் கிடைக்கிறது. இதைப் போன்றே பூமிக்கடியில் புதைந்துள்ள பற்பல பொருள்கள் பெட்ரோலியமென்னும் திரவமாக மாறுகிறது.

இக்கலவையைச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே மக்கள் வேறுபல விதங்களில் உபயோகித்திருப்பதாகச் சான்றுகள் கிடைத்துள்ளன. 17-ஆம் நூற்றாண்டில் ருமேனிய மக்கள் வண்டிகளுக்குக் கிரீஸாகவும் 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவில் வார்னிஷ் செய்ய மருந்தாகவும் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள்; மற்றும் எகிப்தியர் இறந்துபோனவர்களுடைய உடலைப் பாதுகாக்கப் பூசும் எண்ணெயாகவும், ஜெர்மானியர் விளக்கெரிக்கவும் உபயோகித்திருக்கிறார்கள்; பிற்காலத்தில் அமெரிக்கர் இக்கலவையைப் பற்பல வேலைகளுக்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள். நாளடைவில் இத்திரவத்திற்கு (பெட்ரோலியம்) உபயோகமதிகரித்ததால், அமெரிக்கர்களுக்கு வேண்டிய அளவு பெட்ரோலியம் கிடைக்காததால் இதை எப்படிப் பெறுவது என்று யோசிக்கலானார்கள்

நாம் கரியைப் பெறுவதற்கு என்ன செய்கிறோம்? மரக்கட்டைகளைக் கொளுத்தி, எரியவிட்ட பிறகு கரியைப் பெறுகிறோம். இதைப் போலவே, பூமி, வெப்பத்தினால் தனக்குள் கோடிக்கணக்கான வருடங்களாகப் புதைந்து கிடக்கும் தாவரங்களை நிலக்கரியாக மாற்றுகிறது.

இதைப் போன்றே பூமியினடியில் புதைந்திருந்த ஜீவப் பொருள்கள் (Marine Organisms) அழுத்தத்தினாலும், பூமியின் உஷ்ணத்தினாலும் திரவமாக மாறியிருக்கிறதென்றும், இது அழுத்தத்தினாலும், உஷ்ணத்தினாலும் ஆவியாக மாறி வெளிவர வசதியின்றிப் பூமியின் கெட்டியான பாகங்களில் தேங்கிவிடுவதாக அறிந்தனர் ஆராய்ச்சியாளர்கள். எனவே, அடியில் தேங்கிக் கிடக்கும் இத்திரவத்தை வெளியேற்றப் பல வழிகளில் முயன்றனர். இவைகளுள் ஒரு வழிதான் குழாய் முறை. சந்தேகமாயிருக்குமிடங்களில் பூமியைத் துளைத்து நீண்ட குழாய்களை அதனுள் செலுத்துவார்கள். அங்கு எண்ணெயிருந்தால் குழாய் மூலம் பீரிட்டு வரும். பிறகு, இங்கிருக்கும் எண்ணெயையெடுக்க வேண்டியதைச் செய்வார்கள்.

இம்முறை விஞ்ஞான முன்னேற்றத்தினால் விளைந்த நன்மை. இதற்கு முன்பு வெடிமுறையில் பெட்ரோலியமிருக்குமிடத்தைக் கண்டுபிடித்து வந்தனர். இது ஆபத்தான வேலை. பெட்ரோலியம் கிடைக்கும் என்று நினைக்குமிடத்தில் குழிதோண்டி வெடி மருந்துவைத்து வெடி வைப்பார்கள். இதனைச் சுற்றி அதிர்ச்சியை அளக்கும் கருவிகளைப் பொருத்தி விடுவார்கள். வெடி மருந்துக்கு நெருப்பு வைத்தால் அது வெடிக்கும். அப்போது அதன் அதிர்ச்சி பூமிக்குள் செல்லும்; உள்ளே செல்லும் அதிர்ச்சி, அங்குப் பெட்ரோலியமிருந்தால் அதன்மேல் மோதுண்டு திரும்பும்; இந்த அதிர்ச்சி அலைகள் உள்ளே சென்று எவ்வளவு நேரத்தில், எவ்வளவு பலத்துடன் திரும்பி வருகின்றதென அதிர்ச்சியை அளக்கும் இயந்திரத்தினாலறிந்து அந்த இடத்தில் எண்ணெய் கிடைக்குமா, கிடைக்காதாவெனக் கண்டுபிடிப்பார்கள்.

இப்படிக் கிடைக்கும் திரவத்தைச் சுத்தி செய்ய வேண்டும். ஏனெனில், புதிதாக எடுக்கும் பெட்ரோலியத்தில் பலவித ரசாயனப் பொருள்கள் கலந்திருக்கும். சில வாயுவாகவும், சில திரவமாகவுமிருக்கும். வாயு நிலையிலுள்ளது திரவ நிலையிலுள்ளவற்றோடு கலந்திருக்கும். ஆகவே, இதைக் காய்ச்சி வடிகட்டுவார்கள்.

சுத்தி செய்யாத பெட்ரோலிய திரவம் பழுப்பு நிறத்துடன் கலங்கலாகவும் துர்நாற்றத்துடனிருக்கும். இதைப் போக்க நாற்றத்தையும், நிறத்தையும் நீக்கித் தனித்தனி எண்ணெயாகப் பிரிப்பார்கள்.

இத்திரவத்தைப் பிரிக்க, நன்றாக அழுத்தி வைத்துக் குழாய்கள் மூலமாகக் காய்ச்ச அனுப்புவார்கள். அங்கு இத்திரவம் சூடேறும் இந்த இடத்தில் ஒரு கோபுர வழியாக இத்திரவத்தை வெளிப்படுத்துவார்கள்; அழுத்தமாக வரும் திரவம் திடீரென வெளிப்படுவதால் சூட்டினால் ஆவியாகயிருக்கும் திரவம் மேலே போகும்.

ஆவியாகாமலிருக்கும் திரவத்தைப் பிரிக்க கீழேயிருந்து நீராவியை விடுவார்கள். இதனால் லேசான நீர்ச்சத்து (Hydrogen) தனியாகப் பிரிக்கப்பட்டு ஆவியாக வேறு வழியாக மேலே போகும்.

இவ்வாறு பெட்ரோலியத்துடன் கலந்துள்ள பல ரசாயனப் பொருள்களை வெவ்வேறு இடங்களில் பிரித்துக் குளிரவைத்து

அதன்மூலம் அநேக உபபொருள்களைத் தயாரிக்கிருர்கள். எரி எண்ணெய், பிசுக்கு எண்ணெய், மெழுகு, ஆஸ்பால்ட் மற்றும் செயற்கை ரப்பர், பிளாஸ்டிக் போன்றவைகளெல்லாம் இவ்வாறு தயாரிக்கப்பெறுவதுதான்,

சாதாரணமாக 10,00,00 காலன் பெட்ரோலியத்தைச் சுத்தி செய்தால்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெட்ரோல் | 4,000 | காலனும் |
| 2. | கரி எண்ணெய் | 34,040 | " |
| 3. | மற்ற கலப்பினங்கள் | 5,560 | " |
| 4. | மண்ணெண்ணெய் | 4,160 | " |
| 5. | ஆஸ்பால்ட் | 2,380 | " |
| 6. | ஆவி (Steam) | 2 056 | " |
| 7. | பிசுக்கு எண்ணெய் | 1,800 | " |
| 8. | மெழுகு | 96 | " |

சுத்தம் செய்யாத பெட்ரோலியத்தைச் சூடேற்றினல், சூட்டுக்குத் தக்கபடி பலவித திரவமாக மாறுகிறது.

30°—60° வரை=பெட்ரோலியம்
32°—100° வரை=விமான பெட்ரோல்
35°—210° வரை=மோட்டார் பெட்ரோல்
175°—285° வரை=மண்ணெண்ணெய்

இவ்வாறு பலவிதங்களில் உபபொருள்கள் உற்பத்தி செய்வதினல்தான் பெட்ரோலின் விலை குறைவாயிருக்கிறது; இல்லாவிடில் இதன் விலை இன்னும் அதிகமாயிருக்கும்.



யுனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள மாபெரும் பெட்ரோல் தூய்மைப் பொறிகள்

இப்போது உலகத்தின் பெட்ரோல் உற்பத்தி சராசரி 88,200 கோடி காலனாக இருக்கிறது. இதில்,

| | |
|---|---|
| ருமேனியாவில் | 0.8 சதமும், |
| கொலம்பியாவில் | 1.0 சதமும், |
| மெக்சிகோவில் | 1.2 சதமும், |
| இந்தோனேஷியாவில் | 1.8 சதமும், |
| வெனிசுலாவில் | 11.0 சதமும், |
| ரஷியாவில் | 11.5 சதமும், |
| மத்திய கிழக்கில் | 30.6 சதமும், |
| ஐ. அமெரிக்காவில் | 40.0 சதமும்' |

உற்பத்தியாகிறது. இந்தியாவில், நமக்கு வேண்டிய பெட்ரோலில் 7 சதந்தான் உற்பத்தியாகிறது! அமெரிக்கா, ஈரான் போன்ற இடங்களிலிருந்து சுமார் 23 லட்சம் டன், ஏறக்குறைய 90 கோடி ரூ. செலவில் வரவழைக்கிறோம். அமெரிக்காவைத் தவிர வேறு நாடுகளிலிருந்து பெட்ரோல் கிடைப்பது அந்நாடுகளின் ராஜீய காரணங்களினல் குறைந்துகொண்டே வருகிறது இப்போது.

இந்தியாவிலும் பெட்ரோலியம் இருக்கிறது. ஆனல் போதிய ஆராய்ச்சியின்மையால் அது கிடைக்குமிடத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. தற்போது அஸ்ஸாமிலுள்ள திக்பாயில் 2½ சதுரமைல் பரப்பில் சுமார் 9 கோடி காலன் (அல்லது 19½ லட்சம் பாரல்) எண்ணெய் எடுக்கிருர்கள். இங்கு, சுமார் 4 ஆயிரத்திலிருந்து 5 ஆயிரம் நபர்கள்வரை வேலை செய்கிருர்கள். 1947இல் 652 லட்சம். காலன் பெட்ரோல் கிடைத்தது 1947 ஆகஸ்ட் முதல் 1948 ஜூலை முடிய 116.3 லட்சம் காலன் மண்ணெண்ணெயும், 134 லட்சம் காலன் பெட்ரோலும் எடுத்தனர். இப்போது சராசரி மாதத்திற்கு 10 லட்சம் காலன் பெட்ரோலும், 9 லட்சம் காலன் மண்ணெண்ணெயும் கிடைக்கிறது.

பிரிக்கப்படாத இந்தியாவில், பஞ்சாபில் (அட்டாக்) பெட்ரோலியம் கிடைத்துக்கொண்டிருந்தது; இப்போது அது பாகிஸ்தானிற்குச் சேர்ந்து விட்டது. தற்போது, கிழக்கு பஞ்சாப், திரபுரா, கட்ச், கத்தியவார் முதலான இடங்களில் ஆராய்ச்சி செய்துவருகிருர்கள். ஆராய்ந்தயிடங்களுள் கத்தியவார், ராஜபுதன, ஹிமாசல பிரதேசம்

முதலான இடங்களில் இல்லையெனத் தெரிய வருகிறது.

பெட்ரோலைச் செயற்கை முறையிலும் நிலக்கரியிலிருந்து பெறமுடியும். இதற்கு இரு முறைகளுள்ளன. 1930-ஆம் வருடத்தில் ஜெர்மானியர்கள் தான் இம்முறையைக் கண்டு பிடித்தார்கள். முதல் முறைக்கு அப்ஜன சேர்க்கை (Hydrogenations) என்றும் இரண்டாம் முறைக்கு டிராபஷ் முறை (Fischer-Trophsch Process) என்றும் பெயர். இந்தியாவில் வேண்டிய நிலக்கரியிருப்பதால் இம்முறைகளின் மூலம் பெட்ரோலைத் தயாரிக்கவியலும். இம்முறையில் பெட்ரோலைத் தயாரிக்கப் பீகாரில் ஒரு ஆராய்ச்சிச்சாலையை நிறுவி ஒரு லட்சம் டன் பெட்ரோலும், 75 ஆயிரம் டன் விமான பெட்ரோலும் உற்பத்தி செய்வதெனத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

இதன்றி, இயந்திரங்களுக்கு உபயோகிக்க சாராய பெட்ரோல் (பவர் சாராயம்) உற்பத்தியை யதிகரிக்கவும் திட்டமிட்டுள்ளார்கள். இதை மோட்டார்களுக்கு 80: 20 என்ற அளவில் உபயோகிக்கலாம். 1951 முடிய பவர் சாராயம் (சாராய பெட்ரோல்) உற்பத்தியளவு 40 லட்சம் என்று திட்டம் போடப்பட்டிருந்தது; இதன் முடிவு இன்னும் தெரியவில்லை.

ஐரோப்பிய நாடுகளில் அநேக செடிகளிலிருந்து பவர் சாராயத்தைத் தயாரிக்கிறார்கள். நம் நாட்டில் அதைப்போன்ற செடிகளில்லை. ஆனால் கரும்புச் சக்கையிலிருந்து இதை உற்பத்தி செய்கிறார்கள். 1946ல் சுமார் 10 லட்சம் காலன் பவர் சாராயமும் 1948ல் 35 லட்சம் காலன்களும் உற்பத்தியாயின. ஐக்கிய மாகாணம் ஹைதராபாத், பீகார், பம்பாய், மைசூர் முதலிய விடங்களில் இந்தப் பாக்டரிகளிருக்கின்றன. கரும்புச்சக்கை அதிகமாகக்கிடைப்பதால் இதன்மூலம் இன்னும் சாராயப் பெட்ரோலை உற்பத்தி செய்ய இன்னும் 20 தொழிற்சாலைகளையமைப்பதென முடிவாகியுள்ளது.

இவ்வாறு உற்பத்தியதிகரிப்பதன் மூலம் அன்னிய நாடுகளுக்குக் கொடுக்கும் பணம் நிற்பதோடு, நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு குறைத்து நாட்டின் செல்வத்தை அதிகரிக்க முடியும். இப்படிப்பட்ட திட்டங்களை நாம் ஆதரிக்கத்தான் வேண்டும்.




எமது முதல்தரமான

சொந்தத் தயாரிப்புகள்!!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன!

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும்!

கே. சுவமிநாதன் & கம்பெனி

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.

No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.

No. 8/44, ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.

தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.



# சீக்கிரமாக மலிவாக

## வேலையை முடிக்க



**மண்வாரிகள்:**
மூன்றுவித தினுசுகளில் பக்குவப்படுத்தப்பட்ட மரப்பிடிகள் பொருத்தப்பட்டவை. சீரான அமைப்புள்ளதால் வேலை செய்ய இலகுவாக இருக்கின்றன. ஆழமான அலகு வாய்ந்திருப்பதால் அதிகமான சாமான்களை தூக்க முடிகிறது.



**சுத்திகள்:**
செம்மட்டிகள் பலவித பரிமாணங்களில், மேலும் கல் உடைக்கும் சுத்திகள், ஆணி அடிக்கும் சுத்திகள், சாவி திறக்கும் சுத்திகளும் கிடைக்கின்றன. விசேஷமாக உஷ்ணமளிக்கப்பட்ட எஃகிலிருந்து தயாரிக்கப்பட்டவை.



**கோடாரிகள், செம்மட்டிகள்:**
நான்குவித அடிப்படையான தினுசுகளில், ரஸ்தாக்களிலும், சுரங்கங்களிலும் வேலை செய்பவர்களால் விரும்பப்படுகின்றன. விசேஷமாக உறுதியாக்கப்பட்ட, கூராக வெட்டும் முனைகள் வேலையை இலகுவாக்குகின்றன.

*உறுதியான, நீடித்துழைக்கும்*

# டாடா அக்ரிகோ

## கருவிகளை

## உபயோகியுங்கள்

தி டாடா அயரன் & ஸ்டீல் கம்பனி லிட்.
ஸேல்ஸ் ஆபீஸ்; 23-B, நேதாஜி சுபாஷ் ரோட், கல்கத்தா.
பிரான்சுகள் : பம்பாய், மதருஸ், நாக்பூர், அஹமதாபாத், கான்பூர், ஸெகிந்திராபாத், விஜயநகரம் கன்டோன்மென்ட், ஜலந்தர் கன்டோன்மென்ட்.

# சர்தார் கே. எம். பணிக்கர்

கே. ஸ்ரீ

காவலம் மாதவ பணிக்கர் (அதுதான் அவருடைய முழுப் பெயர்) எவ்வளவு அசாதாரண ஆசாமியாக உருவத்தில் தோன்றுகிறாரோ, திறமையிலும், ஆற்றலிலும் அதே அசாதாரணத்தை அவர் பெற்றிருக்கிறார். அப்படியில்லாவிட்டால் மற்றச் சர்தாருடைய புகழுரையும் சிபாரிசும் அவருக்குக் கிட்டியிருக்குமா? பல வருஷங்கள் சமஸ்தானங்களில் பலவிதமாகப் பணி செய்தவர், ஆகையால் அவருடைய சேவை சர்க்காருக்கு வேண்டும் என்று சர்தார் படேல் கருதினாராம்.

இந்தியாவின் ஸ்தானிகப் படையில் இன்று முதல் ஸ்தானம் பெற்றிருக்கிறார் சர்தார் பணிக்கர். உலக அரங்கில் இந்திய சர்க்கார் தரப்பில் தம் சாமர்த்தியத்தால் புகழும் பெயரும் ஸ்ரீ பி. என். ராவ் பெற்றார் என்றால் மிகவும் நிரடலானதேசத்தில் ஸ்தானிகராக இருந்து அதன் போக்கையும் கொள்கையையும் நன்கு உணர்ந்து, மிகவும் ஆபத்தான சமயங்களில் சர்வதேச சபைக்குச் சீனாவின் அபிப்பிராயங்களைக் கொரியா யுத்தம் சம்பந்தமாக உணர்த்தி ஆசியாவின் நந்தா விளக்காக இருந்துவருகிறார் ஸ்ரீ பணிக்கர். ஒரு பணிக்கர் இல்லாமல் மட்டும் இருந்தால் ஸ்ரீ மக் ஆர்தர் சைன—கொரியா எல்லையைத்தாண்டி யுத்தம் நடத்த யத்தனித்தபொழுது ஒரு ஆசிய யுத்தமே மூண்டு உலக யுத்தமே ஆரம்பத்திருக்கலாம். காரணம், சீனாவின் மனதை அறிய அன்னிய நாட்டாருக்கு, முக்கியமாக ஆங்கில அமெரிக்க நாடுகளுக்கு, வசதி இல்லை.

சர்தார் பணிக்கர் 1895-ஆம் ஆண்டில் பிறந்தார். சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் படித்து, சீமையில் மேல் படிப்புப் படித்து முடித்தபிறகு 1919ஆம் ஆண்டில் அலிகார் சர்வகலாசாலையில் சரித்திர ஆசிரியராக அமர்ந்து வேலை பார்த்தார். 1922இலிருந்து 1925 வரை ஸ்வராஜ்யா பேபரில் பத்திராதிபராக இருந்தார். 1927-இல் காஷ்மீர மன்னருக்கு அந்தரங்க காரியதரிசியானார். 1930இல் அவ்வேலையை விட்டுவிட்டு இந்திய சமஸ்தான மன்னர்கள் ஸ்தாபனத்துக்கு உதவி டைரக்டராக அமர்ந்து வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்ற சமஸ்தான மன்னர்கள் கோஷ்டிக்குக்காரியதரிசியாக இருந்தார். 1931-இல் சமஸ்தான மன்னர் சங்கத்துக்கு நிரந்தர காரியதரிசியானார். பணிக்கர் நீண்ட காலம் தொடர்ந்து வேலை பார்த்தது பாடியாலா சமஸ்தானத்தில் அந்நிய விவகார மந்திரியாக 1933 முதல் 1939 வரை வேலை பார்த்தபொழுது. பாடியாலா சமஸ்தானத்து வேலையைத் துறந்தபின்னர் ஸ்ரீ பணிக்கர் 1943இல் பிக்கானீர் சமஸ்தானத்துக்குப் பிரதம மந்திரியானார். அப்பதவியை அவர் 1948 வரை வகித்து அவ் வருஷமே சீனாவிற்கு ஸ்தானிகராக இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டார்.

சர்தார் பணிக்கர் சரித்திரத்தில் புலி என்று பெயர் வாங்கியவர். ஆகையால் எந்தப் பிரச்னையையும் சரித்திர பூர்வமாக ஆலோசிப்பவர் என்ற பெயர் அவருக்கு உண்டு. இந்தியாவின் மூன்று முக்கிய சமஸ்தானங்களில் பொறுப்புள்ள ஸ்தானங்களில் இருந்திருப்பதால் சமஸ்தானச் சிக்கல்கள், பூசல்கள், வியவகாரங்கள் எல்லாம் அவருக்கு அத்துபடி. சமஸ்தான வியவகாரங்களில் சிக்கல்கள் ஏற்பட்ட பொழுதெல்லாம் அவைகளை உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்கி உதவியிருக்கிறார் ஸ்ரீ பணிக்கர். ஸ்ரீ பணிக்கருக்கும் மற்றச் சமஸ்தான வியவகார நிபுணர்களுக்கும் என்ன வித்தியாசம் என்றால் ஸ்ரீ பணிக்கர் சிறந்த தேசபக்தர், ஆகையால் அவருடைய சமஸ்தானப் பழக்கம் அவரைத் தேசத்துக்கு உள்ள கடமையை மறக்கச் செய்யவில்லை. அதற்குப் பதிலாக ஸ்ரீ பணிக்கர் சமயம் வந்தபொழுதெல்லாம் சமஸ்தானங்களுக்கும் இந்திய சர்க்காருக்கும் இடையே நல்ல உறவை ஸ்தாபிக்க முயன்றதுடன் சமஸ்தான மன்னர்களைத் தங்கள் கடமையை உணரும்படியும் செய்திருக்கிறார்.

ஸ்ரீ பணிக்கர் தோற்றத்தில் அசாதாரணமாக இருக்கிறார் என்றேன் அல்லவா? அது

அவருடைய முகவாய்க்கட்டைத் தாடியால் ஏற்பட்டதாகும், அவரை முன்பின் பார்த்திராதவர்கள் அவர் சீன தேசத்துத் தத்துவ சாஸ்திரி என்றே எண்ணுவார்கள்.

ஸ்ரீ பணிக்கர் எவ்வளவுக்கு எவ்வளவு மேதாவியோ அவ்வளவுக்கவ்வளவு தாழ்மையும் குளிர்ந்த சுபாவமும் உடையவர்; தாம் பெரிய அந்தஸ்து படைத்தவர் என்ற கர்வமோ அல்லது மமதையோ அவருக்குக் கிடையாது. இந்தக் குணம் இந்திய சர்க்காரில் உள்ள பல உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்குக் கிடையாது.

ஸ்தானிகர் என்றால் ஸ்ரீ பணிக்கரைப் போல் இருக்கவேண்டும். தம் தேசத்தின் மதிப்பை உயர்த்தியும் அதன் சர்க்காரின் கொள்கைகளை நன்கு உணர்த்தியும் வருவதுடன் தாம் இருக்கும் தேசத்தின் சர்க்காரை மற்றத் தேசத்தினர் நன்கு அறிய உதவி செய்தார்.

ஸ்ரீ பணிக்கர் முக்கியமாக ஓயாமல் வற்புறுத்தும் விஷயம் சைனு கம்யூனிஸ்ட் நாடு அல்ல என்பது. சீன சர்க்கார் ஒரு கூட்டுச் சர்க்கார், அதில் கம்யூனிஸ்ட் கக்ஷிக்குப் பலத்த செல்வாக்கு உண்டு, கூட்டுச் சர்க்காரின் ஏகோபித்த நோக்கம் பொதுவுடைமையின் முக்கிய கொள்கைகளைச் சர்க்கார் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்பது தான். சரிதான், ஆனால் சர்க்கார் கொள்கைகளைக் குறைகூறவோ கண்டிக்கவோ முடியுமா? அதற்கு மக்களுக்குச் சுதந்திரம் உண்டா? சர்தார் பணிக்கர் சொன்னர்: சர்க்காரை நடத்தும் பல கக்ஷிகளுக்கு இந்த உரிமை உண்டு. ஆனல் பொதுமக்கள்களுக்குச் சர்க்காரால் நிறுவப்படும் திட்டங்களை எதிர்க்க உரிமை இடையாது. காரணம் சியாங்-காய்-ஷேக்கின் சர்க்கார் சென்ற சில வருஷங்களில் நடத்திய அராஜகத்தை ஒழித்துப் புதுச் சைனவை நிறுவவேண்டும் என்றால் தான்தோன்றி உரிமைகளை ஜனங்களுக்குக் கொடுக்கக் கூடாது. இவ்வாறு செய்ததால்தான் இரண்டு வருஷங்களில் மதிப்பற்ற சைன நாணயச் செலவாணி முறையை ஒழித்து, சைன டாலருக்கு உயிர்ப்பிச்சை கொடுக்க முடிந்தது. "பஞ்சம் பஞ்சம்" என்ற குரலைச் சீனவிலிருந்து அறவே அகற்றி, "இந்தியாவே! அரிசி வேண்டுமா?" என்று கேட்கிறார்கள் சீனர்கள். இரண்டு வருஷங்களுக்கு முன் புழுவிலும் கேவலமாக மதிக்கப்பட்ட சீனவை, சர்வ வல்லமையுள்ள அமெரிக்காவும் கண்டு அஞ்சும் நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் சீன சர்க்கார் என்றால் கூட்டுச் சர்க்காரின் சாதனைகளுக்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும் என்று கேட்கிறார் ஸ்ரீ பணிக்கர்.

சீனவில் கம்யூனிஸ்ட் சித்தாந்தம் ஒரு குறிப்பிட்ட அளவுவரைதான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நிலப் பிரச்னையைக் கம்யூனிஸ்டுகள் தீர்த்திருக்கிறார்கள். தலைமுறை தலைமுறையாக, தன் நிலம் என்று இல்லாமல் உழைத்து ஓடாகிய உழவனுக்கு 3/5 ஏகர் நிலம் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு கிஸான் குடும்பத்திலும் சராசரி ஐந்துபேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மூன்று ஏகர் வேண்டும் என்பதுதான் நிலச்சீர்திருத்தத்தின் அடிப்படைக் கொள்கை. முக்கிய தொழிற்சாலைகளைச் சர்க்கார் தங்கள்வசம் கொண்டுவந்தார்களே ஒழிய, தனிப்பட்ட நபர்களுக்கு வர்த்தகம் செய்யும் உரிமையை ஊர்ஜிதம் செய்திருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் பரிபாஷையில், (சைனவில்) உழைப்பாளிகளுக்குப் பெரும்பாலும், முதலாளிகளுக்கும் குட்டி முதலாளிகளுக்கும் சிறிதும் தேசத்தில் இடம் உண்டு, என்பது புதுச்சைனவில் நடைமுதலில் உள்ள அரசியல் அமைப்பின் சாரம்.

இதை விளக்கி யாவரும் அறியச் செய்தால் உலகில் "கம்யூனிஸ்ட் சைனு" பூச்சாண்டி ஒழிந்துவிடும். இதற்குத்தான் பாடு படுகிறார் ஸ்ரீ பணிக்கர். ஆனல் அமெரிக்கர்கள் போடும் பிரசாரக் கூச்சலில் சைனவைப் பற்றிய இந்திய சர்க்காரின் உண்மை ஸ்வரூபவர்ணனை எப்படி உலகத்தார் காதில் விழும்? அது விழாமல் இருக்கவே அமெரிக்கர்கள் பாடுபடுகிறார்கள்.

உலக வியவகாரங்களில் சைனவின் போக்கு, தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற அவாவே. உலக நாடுகளில் வல்லரசுகளான ஆங்கில—அமெரிக்கர்கள் சீனவை ஒடுக்கி ஒழிக்க ஏற்பாடு செய்கிறார்கள். ஆகவே தனக்கு ஆசிய நாடுகளின் நல்லெண்ணம் வேண்டும் என்பதைச் சீனர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு மற்ற எந்த ஆசிய நாட்டையும் ஆக்கிரமிக்க வேண்டும் என்ற அபிலாஷை கிடையாது. அவர்கள் வேண்டுவதெல்லாம் சிநேகித சுதந்திர ஆசியா நாடுகளே என்கிறார் ஸ்ரீ பணிக்கர்.

# கூற்றுவனின் கலங்கள்-3

நா. கி. நாகராஜன்



படம் 1.—எந்திரத் துப்பாக்கி
த—தரிப்பு
நீ உ—நீர் உறை
நீ. தொ—நீர்த் தொட்டி

மகாபாரத நாளிலிருந்து போர்க்களமாகப் பெயர் பெற்ற குருக்ஷேத்திரத்தில் 1526-ஆம் ஆண்டில் பாபர் என்ற ஆப்கானிய நாடோடிக்கும், டில்லி சுல்தானன இப்ரஹிம் லோடிக்கும் கடும்போர் நடந்தது. ஒரு லட்சம் வீரர்களையும் பல நூறு யானைகளையும்கொண்ட சுல்தானின் சேனை பத்திலொருபங்கே இருந்த ஆப்கானிய சேனையால் எளிதில் முறியடிக்கப்பட்டது. இந்த வெற்றியே நம் நாட்டில் முகலாய சாம்ராஜ்யத்தைத் தோற்றுவித்தது. பாபரின் படைத்திறனும், அவர் பயனுக்கிய பீரங்கிகளுமே இந்த வெற்றிக்குக் காரணமாகும். அதுவரை நம் நாட்டில் எவரும் காணுத இப்படைக்கலம் சுல்தானின் சேனையில் நாசத்தைவிடப் பீதியை அதிகமாக விளைத்து அதை நிலைகுலையச் செய்தது. போர்க்கலையின் வரலாற்றிலே புதிதாகக் கையாளப்படும் எப்படைக்கலமும் முதலில் பயத்தினலேயே எதிரிகளை முறியடிக்கிறது.

உலக நாகரிகத்திற்கு இன்றியமையாதவையெனக் கருதப்படும் பல பொருள்களைக் கண்டுபிடித்து உலகுக்கிந்த பெருமை அண்மைவரை பிற்போக்கு நாடென் மதிக்கப்பட்ட சீனுவைச் சேரும். காகிதம், பட்டு, பீங்கான் முதலிய பல பொருள்களுடன் வெடிமருந்தையும் சீனர்கள் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னரே கண்டுபிடித்தனர். ஆகையால் இதைப் போரில் பயனுக்கும் முறையும் நெடுங்காலமாகவே அங்கு வழக்கத்தில் இருந்தது. ஆனல் ஐரோப்பாவில் பீரங்கிகள் இடைக்காலத்தில்தான் வழக்கத்திற்கு வந்தன. அதற்குமுன் வேறு வகைப் போர் எந்திரங்கள் பயனுகி வந்தன. எந்திரவில்லைக்கொண்டு கற்களையும், தீப்பந்தங்களையும் கோட்டைக்குள் வீசும் முறை வழக்கத்திலிருந்தது. பதினன்காம் நூற்ருண்டின் இறுதிவரை ஐரோப்பாவில் வெடிமருந்துகள் பயனுகியதாகத் தெரியவில்லை.

அதன் பின்னரே பீரங்கிகள் தோன்றின. அகலமான உலோகக் குழாய்க்குள் வெடிமருந்தைத் திணித்து அதற்குள் கனமான உலோகக் குண்டைப் போட்டுப் பந்தத்தினல் அதைப் பற்றவைப்பது அக்காலத்திய முறை. எரியும் வெடிமருந்து ஏராளமான வாயுக்களை வெளிவிடுகிறது. இதனல் குழாயில் அதிகமான அழுத்தம் தோன்றும். இதனல் குண்டு மிகுதியான விசையுடன் குழாயைவிட்டு நீங்கி, முன்னேறுகிறது. பழங்காலத்திய பீரங்கிகள் தொல்லைபிடித்த கருவிகள். பகைவனை நாசமாக்கக் குண்டை எறிவதைவிட்டு, வெடிமருந்து பின்பக்கமாக வெடித்து, சுடுவோரையே அழிப்பதும், சரியான சமயத்தில் வேலைசெய்ய மறுப்பதும் அவற்றிற்கு மிகவும் பிடித்தமான செயல்கள்! இவற்றின் குறியும், வீச்சும் திருத்தமற்றவை (ஒரு படைக்கலம் எறியும் குண்டு செல்லும் தூரம் அதன் வீச்சு எனப்படும்). ஆயினும் கோட்டைகளைத் தகர்க்கவும், கடலிலிருந்து துறைமுகங்களைத் தகர்க்கவும் இந்தப் பீரங்கிகள் மிக அவசியமாக இருந்தன.



படம் 2.—எந்திரத் துப்பாக்கியின் அமைப்பு
த—தரிப்பு
பி. வி—பின்னுதைப்பு வில்லு
கு—குண்டு
அ. கு—அடுத்த குண்டு



பழைய எந்திரத் துப்பாக்கி—அமெரிக்கத் துருப்புக்கள் வடகொரியரிடமிருந்து கைப்பற்றியது

அக்காலத்திய துப்பாக்கிகளும் இதே வகையில் இயங்கின. வெடிமருந்தைப் பற்ற வைத்துக் குண்டை எறியும்போது ஏராளமான புகை தோன்றி மீண்டும் ஒருமுறை இலக்கை நோக்கிச் சுட இயலாமற் செய்யும். வெளியேறும் குண்டு காற்றின் உராய்வினாலும், இயக்கத்தினாலும் தனது பாதையிலிருந்து பிறழ்ந்து தாறுமாறாகச் செல்லும். ஆகையால் இதைக்கொண்டு குறி பார்ப்பது மிகக் கடினம். ஆனால் படிப்படியாக வந்து சில சீர்திருத்தங்களால் தற்காலத்தில் துப்பாக்கியுடன் இதையொத்த வேறு படைக்கலங்களும் எளிதில் இயங்கி அதிகமான திருத்தம்கொண்டு விளங்குகின்றன. துப்பாக்கிக் குண்டு குழாயைவிட்டு நீங்குமுன் அதற்கு ஒரு சுழற்சியை அளித்துவிட்டால் அதன் போக்கு நிலையாக நிற்கும் என்று கண்டுபிடிக்கப்பட்டது. பம்பரம் சுழன்று கொண்டே இருக்கும்வரை கீழே சாயாது நிற்கிறதல்லவா? இப்பண்பு எல்லாச் சுழலும் பொருள்களுக்கும் உண்டு. துப்பாக்கிக் குண்டில் சுருளானதொரு தவாளிப்பை வெட்டி, குண்டு அதில் நழுவிவருமாறு செய்தால் வெடிமருந்து குண்டை முன்னே தள்ளும்போது அது வேகமாகச் சுழன்று கொண்டே வெளிவருகிறது. இதனால் அது நெடுந்தொலைவுவரை தன் பாதையிலிருந்து விலகாமல் செல்லும். இந்த ஒரு சீர்திருத்தத்தினாலேயே துப்பாக்கிகளின் திருத்தம் பன்மடங்கு அதிகமாகியது.

குழாயின் வாயிலிருந்து மருந்தைத் திணித்து அதற்குள் குண்டைப்போட்டுச் சுடும் வழக்கமும் தற்போது மாறிவிட்டது. குழாயின் அடியிலிருக்கும் ஒரு தாழ்ப்பாளைத் திறந்து அதில் குண்டைப் போட்டு மூடித் துப்பாக்கியானது சுடப்படுகிறது. புகையுடன் வெடிக்கும் வெடிமருந்திற்குப் பதிலாகப் புகையே இல்லாமல் அளவற்ற திறமையுடன் வெடிக்கும் வெடிமருந்துகள் வழக்கத்திற்கு வந்துள்ளன. வெடிமருந்தும், ரவையும் ஒரே உறையில் போடப்பட்ட குண்டுகளும் துப்பாக்கி சுடுவதை எளிதாக்கிவிட்டன. மிகப் பெரிய பீரங்கிகளைத் தவிர வேறெல்லா ஆயுதங்களிலும் குண்டும் அதைச் செலுத்தும் வெடிமருந்தும் ஒரே கலத்தில் அமைக்கப்படுகின்றன. வெடிமருந்தைப் பற்றவைக்க எளிதில் வெடிக்கும் வேறொரு பொருளொன்று குண்டில் இருக்கும். துப்பாக்கியின் தரிப்பைப் (Trigger) பிடித்து இழுக்கும்போது இப்பொருளுக்கு அதிர்ச்சி விளைந்து இது வெடிமருந்தைப் பற்றவைக்கிறது. முதன் முதல் பயனாகிய துப்பாக்கிகளைக் கொண்டு சில நூறு அடி தொலைவு வரையில்தான் குறி தவறாமல் சுடமுடியும். ஆனால் தற்காலத் துப்பாக்கிகளைக்கொண்டோ நான்கு மைல் தொலைவிலுள்ள ஒரு சிறு பலகையைக் குறி தவறாமற் சுடலாம்!

துப்பாக்கிவகைகளில் ஒன்று சுமார் நூறாண்டுகளுக்கு முன்னர் தோன்றித் தற்காலப் போர்முறையையே மாற்றி அமைத்துவிட்டது. எந்திரத் துப்பாக்கி (Machine Gun) என்ற ஆயுதம் 1870ஆம் ஆண்டிலேயே தோன்றினாலும் முதலாம் உலகப் போருக்கு முன்னர்தான் திருத்தியமைக்கப்பட்டுத் தற்கால வடிவைப்பெற்றது. போரில் விமானத்திற்கு அடுத்தபடியாக மிக அதிகமான சேதத்தை விளைவிக்கும் படைக்கலம் இதுதான். இது பல குண்டுகளை ஒன்றன்பின் ஒன்றாக ஒன்று அல்லது இரண்டுமைல் தொலைவுவரை செலுத்தும் திறனுள்ளது. இது இருவகைகளில் இயங்கக்கூடும். குண்டானது துப்பாக்கி முனையைவிட்டு வெளியேறும் தருணத்தில் அதன் விசையினால் துப்பாக்கி பின்னால் உந்தப்படுகிறது. இது பின்னுதைப்பு (Recoil) எனப்படும். இவ்விளைவு கனமான குண்டுகளை வீசும் பீரங்கிகளில் அதிகம். பீரங்கிகளையும், துப்பாக்கிகளையும் வேகமாகச் சுடுவதை இவ்விளைவு தடை செய்கிறது. ஆனால் எந்திரத் துப்பாக்கியோ இந்த விளைவைத் தனது இயக்கத்திற்கே பயனாக்கிக் கொள்கிறது. குண்டு வெளியேறும்போது நிகழும் பின்னுதைப்பினால் சில நெம்புகோல்கள் இயங்கி, தாழ்ப்பாள் திறந்து, வெடித்து குண்டின் உறை வெளியேவந்து, அடுத்த குண்டு அந்த இடத்திற்குவந்து சுடத் தயாராக அமைகிறது. துப்பாக்கிக் குழாயில் வெடிமருந்தினால் தோன்றும் வாயுக்களில் ஒரு பகுதியைக்கொண்டே

Photos by courtesy of United States Inofrmation Service.

இந்த இயக்கத்தை நிகழ்த்துவதும் உண்டு. முற்றிலும் தானாக இயங்கும் துப்பாக்கிகளில் சுடுவோன் அதன் தரிப்பை அழுத்திவைத்துக்கொண்டு துப்பாக்கியை இலக்கை நோக்கித் திருப்பிவைத்துக்கொண்டால் போதும். அது தானாகவே இயங்கிப் பல குண்டுகளை மழைபோல் பொழியும். அண்மையில் வெளிவந்திருக்கும் அமெரிக்க எந்திரத் துப்பாக்கி மூன்று விநாடிகளுக்குள் சுமார் முப்பது குண்டுகளைச் சுடுகிறது.

இவ்வளவு வேகமாக இயங்கும் துப்பாக்கியில் ஏராளமான வெப்பம் தோன்றுவது இயற்கையே. ஆகையால் இந்த வெப்பத்தை அகற்றி அதைக் குளிர்விக்க வேண்டியது அவசியமாகிறது. இதற்காக, துப்பாக்கியில் ஒரு குளிர்ந்த நீர்த்தொட்டி இருக்கும். அதிலிருந்துவரும் நீர் துப்பாக்கிக் குழாயைச் சுற்றிலும் உள்ள உறையில் ஓடி அதைக் குளிர்விக்கும். காற்றினால் குளிர்விக்கப்படும் துப்பாக்கிகளும் உண்டு. இவ்வளவு செய்தும் வெப்பத்தைப் பூரணமாக அகற்றமுடிவதில்லை. துப்பாக்கியைச் சில நிமிட நேரம் சுட்டபின் அதற்கு ஓய்வு கொடுக்கவேண்டும். இல்லையேல் குழாயானது சூடேறி இளகிவிடும்.

எந்திரத் துப்பாக்கிகளில் பலவகையுண்டு. இவற்றுள் மிக இலேசானவற்றை ஒருவன்



திறனுள்ள அமெரிக்க எந்திரத் துப்பாக்கி—
கொரியப் போர்முனையில்

இடுப்பில் தூக்கிவைத்துக் கொண்டு சுடலாம். மிகக் கனமான துப்பாக்கிகள் வண்டிகளின்மேல் தூக்கிச் செல்லப்படுகின்றன. போர் விமானங்களிலும், நீர்மூழ்கிகளிலும் டாங்கிகளிலும எந்திரத் துப்பாக்கிகள் அமைக்கப்படுகின்றன. விமானங்களிலுள்ள துப்பாக்கிகள் விநாடிக்கு இருபது முறை சுடும். இவற்றில் ஒரு விசேஷமுண்டு. விமானத்தின் மூக்கில் அமைக்கப்படும் எந்திரத் துப்பாக்கியைச் சுடும்போது மூக்கிலுள்ள சுழலியின் (Propeller) சிறகுகளில் குண்டு


# MEHTA'S SPECIALITIES

*Well-known for their efficacy and Medicinal values*

1 *SUNDARI ELIXIR*

For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*

A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*

Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJ*

A great Blood Purifier & Digestive & Potential Tonic.

**K. S. MEHTA & CO.**

250, China Bazaar, MADRAS.

கள் பட்டு அவை சேதமடையாமலிருக்குமாறு சுழலியின் சுழற்சியும் குண்டுகளின் வெளியேற்றமும் சரிப்படுத்தப்படுகின்றன.

விமானத்தைச் சுட்டுவீழ்த்தும் விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் எந்திரத் துப்பாக்கியின் அமைப்பையே ஒத்தவை. இவற்றின் குழாய் மிக நீளமாக இருக்கும். ஆகையால் குழாயிலிருந்து வெளிவரும் குண்டு அதிக வேகமுள்ளதாக இருக்கும். இத்துப்பாக்கிகள் சண்டைக்கப்பல்களிலும், மோட்டார்களால் இழுத்துச்செல்ல ஏற்றவாறு சிறு வண்டிகளின்மேலும், உயர்ந்த மேடைகளின் மேலும் அமைக்கப்படுகின்றன. நிலையாக ஒரே இடத்தில் அமைக்கப்படும் துப்பாக்கிகள் மிகப் பெரியவை. இவற்றின் குழாயின் விட்டம் சுமார் 5" வரை (அதாவது நடுத்தரமான பீரங்கியின் அளவு) இருக்கும். பீரங்கியை எத்திசையிலும், எந்த உயரத்திலும் எளிதில் திருப்பிவைக்க ஏற்றவாறு இது அமைக்கப்படுகிறது. விமானத்தின் உயரம், இருப்பிடம் முதலியவைகளை விரைவில் கணக்கிட்டுக்காட்டும் சாதனங்களும், தொலைநோக்கியும் (Telescope), துழாவும் விளக்கு (Searchlight), ரேடார்போன்ற சாதனங்களும் பீரங்கியுடன் இணைக்கப்பட்டு அத்துடன் சேர்ந்து இயங்கும். இவற்றின் உதவியால் விமானத்தின் இருப்பிடத்திற்கு ஏற்றவாறு குண்டின் திரி இயங்கும் நேரத்தையும், அது செல்லவேண்டிய திசையையும் சரிப்படுத்தலாம்.

விமான எதிர்ப்புப் பீரங்கியின் குண்டுகள் நேர்கோட்டில் சென்று இலக்கை அடையும். அவை குறிப்பிட்ட உயரத்தை அடைந்தவுடன் அதன் திரி இயங்கி அது வெடிக்கும். அப்போது குண்டில் நிறைந்திருக்கும் எஃகுக் குண்டுகள் நாற்புறமும் சிதறிச் சுமார் நூறு கஜம் வரையிலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் சேதம் விளைவிக்கும். ஆகையால் இந்தத் தொலைவில் விமானம் இருந்தால் அது சேதமடையும். தனிப்பட்ட அமைப்புள்ள இக்குண்டு ஷிராப்னெல் (Shrapnel) எனப்படும். ஆனால் தற்காலத்தில் இக்குண்டு விமான எதிர்ப்பும் பீரங்கிகளில் பயனுவதில்லை. திறமையுள்ள வெடிமருந்தைக் கொண்ட சாதாரணக் குண்டுகள் இப்போது பயனுகின்றன. இவை வெடித்துக் கூரிய சுக்கல்களை நாற்புறமும் சிதறிச் சேதம் விளைவிக்கின்றன. போரின் முடிவில் பயனுகிய விமான எதிர்ப்புப் பீரங்கிகள் 60000 அடி உயரத்தில் பறக்கும் விமானத்தையும் கூடச் சுட்டு வீழ்த்துமளவு திறமையும், திருத்தமும் உள்ளவைகளாக இருந்தன. ஆகையால் எதிரி விமானங்களுக்கு இவைகள் முதன்மையான பகைவர்களாக விளங்குவதில் வியப்பில்லை. (தொடரும்)





# ஜண்டு பாலாமிருதம்

வலுவற்ற குழந்தைகளுக்கும், மெலிந்த தேகிகட்கும் மேலான ஔஷதம். தேகத்திற்குப் புஷ்டியைத் தரும். தளர்ந்த நரம்புகளுக்கு வலுவைத் தரும். 4 அவுன்ஸ் புட்டி 1-4-0

கீழ்க் கண்ட ஏஜண்டுகளிடம் கிடைக்கும்.

கோயம்புத்தூர்: டி. எஸ். வி அண்டு சன்ஸ், மில்ரோட்.
சேலம்: தி. ஸிடிமெடிகல் ஸ்டோர்ஸ், கடைத்தெருவு.
உதக்மண்டலம்: ஸேட் சிவலால் நாத்மல் அண்டு கோ.
திருப்பூர்: ஆர். எஸ். வாஸன் அண்டு கோ.
ஈரோடு: மெடிகல் எம்போரியம்.
கரூர்: மோஹன் ஸ்டோர்ஸ், திண்டுக்கல் ரோடு.
ராமநாதபுரம்: ராஜன் மெடிகல் ஹால்
திருநெல்வேலி ஜங்ஷன்: ஜயலக்ஷ்மி மெடிகல் ஸ்டோர்ஸ்,

வியாபார நிபந்தனைகளுக்கும், மற்ற விபரங்களுக்கும் கீழேகண்ட விலாசத்திற்கு எழுதவும்,

சென்னை ராஜதானி ஏஜண்டுகள்:

## தாமோதர் அண்டு கோ,

113, நயனியப்பநாயக்கன் தெரு சென்னை, 3.

# இளமைத் தேன்

**நா. சீ. வரதராசன்**

உள்ளக் குளத்தினிலே
  ஒயிலாயுடல் மினுக்கி,
மெள்ளக்கிளர்ந்[illegible] நறும்
  மென்மணமும் வீசியெனைக்
கிள்ளிக் கிளுகிளுப்பைக்
  கிளப்பிவிடும் தேமலராம்
வெள்ளைப் பருவமலர்!
  விந்தை இளமைமலர்! [1]

ஊறும் அதன் மதுவை
  உண்டு மகிழ் மாந்துதற்கே
கூறும் பல பலவும்!
  கொஞ்சி, இதழ் முணுமுணுக்கும்!
வேறும் பல வழியில்
  விந்தை செயும் சிந்தனையும்
மீறும்! வெறிபிடித்தே
  மெல்லிளமைத் தேனருந்தும்! [2]

போதை கொடுத்துவிடும்
  பொக்கெனவே தேன் சுவையும்!
வீதிப் பொலிவினிலும்,
  வெளியுலகக் காட்சியிலும்
சேதிக் குவியல்களாய்ச்
  சேகரித்துச் சிந்தனையும்
ஊதிக் குதுகலிக்கும்!
  ஒய்யெனவே கூச்சலிடும்! [3]

காதல், வனிதையரின்
  கண்ணழகுக் காட்சி, உளம்
மோதல், சிலுசிலுக்கும்
  மோகனப் பொன் புன்னகைகள்,
கூதல் தூது செலல்,
  கொஞ்சுமிளந் தென்றலிவை
யாதும் அதற்கினிக்கும்!
  ஆர்ப்பரிக்கும் வாழ்வளிக்கும்! [4]

இன்பம் நிறைந்ததுவாய்
  இவ்வுலகம் தோற்றமிடும்!
அன்பும் பரிமளிக்கும்-
  அடியெடுக்கும் பாதையெலாம்!
என்பும் குளிர் மடுக்கும்!
  இதயமதும் விம்மியெழும்!
துன்பத் திருள் ஒடுங்கும்
  துள்ளி வரும் சிந்தனையில்! [5]

காலம் பரபரக்கும்!
  கடுகி விரைந்தோடிவிடும்!
காலைக் குமுதமெனக்
  கண் மறைத்துக் கூம்பி, உள
வேலை தவழ் இளமை
  வெண் மலரும் வாடிவிடும்!
சாலும் மதுத்திவலை
  சட்டெனவே வற்றிவிடும்! [6]

வெறியும் அடங்கிவிடும்!
  வேதனையும் விஞ்சிவிடும்!
குறியும் குணமுமெலாம்
  குள்ள உருக்கொண்டு, இறை
நெறியின் வழித்தடத்தே
  நீண்ட நடை போட்டுவிடும்!
செறிவில் அடங்கிவிடும்
  சிந்தனையும் சின்னதுவாய்! [7]

துள்ளித் திரிந்ததெல்லாம்
  துச்சமெனத் தோன்றிவிடும்!
அள்ளும் அழகுகளிங்(கு)
  அழிவுக் குகைகளெனக்
கொள்ளும் உளத்திலிலே
  கும்மிருட்டுத் தோன்றிவிடும்!
உள்ளும் மது நினைந்தே
  உருக்குலையும் சிந்தனையும்! [8]

# விடுதலை

(கே. வி. கே.)

ரம்மியமான காட்சிகளுக்குக் அங்கே குறைவேயில்லை. பஞ்சம் தலைவிரித்தாடும் இந்நாளிலும்கூடப் பசுமைதான் கண்ணுக்கெட்டிய தூரம் வரை காணப்பட்டது. தூரத்தில் தோன்றிய குன்றுகளும், வானளாவ நின்ற விருக்ஷங்களும், சலசலத்து ஓடிய சிற்றாறும் அம்மாலை வெய்யிலில் அற்புதமாகவே இருந்தன. பட்டண வாழ்க்கையில் அலுப்புற்று ஓய்வுக்காக அங்குச் சென்றிருந்த எனக்கு வேறென்ன வேண்டும்!

ஆற்றங்கரையினோரமாகவே வெகு தூரம் சென்றுவிட்டு வந்துகொண்டிருந்த என் காதுகளில் கணீரெனக் காற்றில் மிதந்துவந்த கோவில் மணியின் இன்ப நாதம் ஒலிக்கவே கோவிலைநோக்கித் திரும்பினேன்.

பல்லவ காலத்தில் கட்டப்பட்டிருந்த அவ்வாலயம் கற்கோட்டை போன்றுதான் இருந்தது. விதானத்தின் உட்புறங்கங்களில் தீட்டப்பட்டிருந்த வர்ண ஜாலச் சித்திரங்களும் கல்தூண்களில் செதுக்கி விட்டிருந்த ஜீவ சிற்பங்களும் அவைகளைச் சமைத்தவனின் கைவன்மையைக் கதையாகக் கூறின. பிராகாரத்தின் சுவர்களிலெல்லாம் பலபட வரைந்திருந்த அழியாச் சித்திர தேவதைகள் சிவபிரானின் திருவிளையாடல்களைப் புராணமாகப் படித்துக் காட்டின.

என்னை மறந்தவனாய் அக் கல் உளி மங்கன்களின் அழியாச் சிருஷ்டிகளில் லயித்தவாறே நின்றிருந்தேன். அடாடா! இத்தனை கலைஞர்களும், கலைவளர்த்த அரசர்களும் வாழ்ந்த இப்பொன்னாட்டில்தான் இன்றும் இருக்கிறோமா...! அவ்வளவுக்குப் பெருமை ஒருபுறம் பொங்கினாலும், அதே அளவுக்குத் துக்கமும் பீறிட்டுக்கொண்டு தானே வருகிறது!

மறுபடியும் மணியோசை கேட்டு சுயஉணர்வு பெற்றவனாய், பெருமூச்சுடன் மெல்லப்பிராகாரத்தைச் சுற்றி அலங்கார மண்டபத்தை அடைந்தேன். ஆயிரம் தீபங்களால் ஜோதிமயமாக்கப்பட்டிருந்த பீடத்தில் அலங்கார சொரூபியாகக் கம்பீரத்துடன் வீற்றிருந்தார் சொக்கநாதப் பெருமான். பக்தகோடிகளின் மங்கல ஸ்துதிகளினூடே தீபதூப ஆராதனைகள் ஆயின. விபூதிப் பிரஸாதம் பெற்ற மக்கள் திரும்பிப் புறப்பட்டுச் செல்ல வாரம்பித்தனர். கண்குளிர ஐயனைத் தரிசித்துவிட்ட நிறைந்த உள்ளத்துடன் கர்ப்பக் கிருகத்தைச் சுற்றிக்கொண்டு திரும்பும் போதுதான் அங்கு அவளைக் கண்டேன்.

அவள் விதவை. வயது ஐம்பதுக்கு மேற்பட்டுத்தான் காணப்பட்டது. வற்றி உலர்ந்திருந்த அவள் சரீரத்தைப் போர்த்திக்கொண்டிருந்த எளிய ஆடை காற்றில் மெல்ல அசைந்ததுகூட அவள் அங்கம் நடுங்குவதைப்போலத்தான் தோற்றுவித்தது. சிகை நரைத்து குழிந்த கண்களுடன், குவித்த தன் கரங்களை மார்புடன் பதித்தவளாய் சொக்கேசனின் பீடத்தின்கீழ் அமர்ந்து அவ் விக்கிரகத்தையே உற்று நோக்கிக்கொண்டிடிருந்தாள். கீற்றுகள் படிந்திருந்த அவ் வதனத்தில் தேங்கி நின்ற ஆழ்ந்த சோகமும் ஏக்கத்தின் அமைதியும் மனத்தை நெகிழ்விப்பதாய் இருந்தன. வறண்டிருந்த அவள் உதடுகள் ஏதோ அட்சரங்களை முணுமுணுத்தவாறு அசைந்துகொண்டிருந்தன. பஞ்சடைந்திருந்த கண்களின் மூலைகளில் இரு துளி நீர் தேங்கியபடியே நின்றது.

அசைவற்று நின்று அவளையே சற்றுநேரம் உற்று நோக்கிக்கொண்டிருந்த நான் மெல்லத் திரும்பினேன். இதற்குள்ளாகவே எல்லோரும் போய்விட்டிருந்தனர். எஞ்சி இருந்த ஓரிரு அர்ச்சகர்களும் புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தனர்.

ஆனால் அம்மாதுமட்டும் அங்கேயே அமர்ந்திருந்தாள். மறுபடியும் அவளைத் திரும்பிப் பார்த்த நான் ஆழ்ந்த சிந்தனையினூடேதான் வெளியே வந்தேன். பாவம்! இம் முதிர்ந்த வயதில் அவள் என்ன விதத்தில் அல்லலுற்று இறைவனிடம் மீட்சியை யாசிக்கிறாளோ...!

* *

அதற்கு மூன்றாம்நாள் மாலை வெளியே உலாவச் சென்றிருந்தவன் ஊர்க்கோடியிலிருந்த அந்த மணல் மேட்டின்மேல் நின்றபடியே, மலைச் சிகரங்களுக்கு மத்தியில் புதைந்துகொண்டிருந்த கதிரவனை ரஸித்துக்கொண்டிருந்தேன். சட்டெனப் பின்னாலிருந்து சங்கின் ஒலி எழவே சற்று அசிரத்தையுடனே திரும்பிப் பார்த்தேன்.

ஆம்! சவம்தான் வந்துகொண்டிருந்தது. அமைதியும், திருப்தியும் நிறைந்த இக்கிராமத்தில்கூடக் காலனின் அடிச்சுவடுகள் தோன்றத்தானே செய்கின்றன,

ஆடம்பரம் ஏதுமின்றி, சந்தடியில்லாமலேயே அதைத் தூக்கிக் கொண்டு வந்தனர். முன்புறம் தாங்கிவந்த இருவரில் ஒருவனின் இடக் கரத்தில்

சங்கும் காணப்பட்டது. அழுபவர்கூட அற்றவனாய், இறந்தும் ஏழைப் பழியுடன் செல்லும் அந்த அப்பாவி யார் என்பதை உற்றுக் கவனித்தேன். கிழிந்திருந்த ஒரு மெல்லிய வஸ்திரம் அவன் தேகத்தை மூடியிருந்தாலும் அத்துணியை ஊடுருவித்தான் தோற்றமளித்தது அந்த 'எலும்புக்கூடு'. திறந்திருந்த அவன் முகம் வற்றி வெளுத்திருந்தாலும் நான் நினைத்தபடி முதுமையின் சின்னம் இன்னும் படியவில்லை. வாலிப வயதிலேயே வாழ்வைத் துறந்து மடிய விட்ட அவன் விதியைச் சலிப்புடன் நொந்தவாறே திரும்பியவன் சட்டென அசந்து நின்றேன்.

துவண்டு தள்ளாடிய நடையுடன் முகத்தில் கண்ணீர் சோர, பிளந்துவிடும் தன் இருதயத்தை மார்புடன் சேர்த்து அழுத்திக் கொண்டிருந்த கரங்களை முன் நீட்டக்கூடச் சக்தியின்றிப் புலம்பியபடியே சவத்தின்முன் வந்துகொண்டிருந்தாள் —கோவிலில் நான் கண்ட அம்முதிய மாது. அவளைவிடச் சற்று வயதான வேறொரு ஸ்திரீ அவளைத் தாங்கிக் கொண்டிருந்தாள் ஏதோ சில ஆறுதல் வார்த்தைகளைக் கூறிக்கொண்டே:

நான் நின்றுகொண்டிருந்த இடத்திற்குக் கொஞ்சம் அண்மையிலேயே அச்சவம் இறக்கப்பட்டது. தூக்கிக்கொண்டு வந்தவர்கள் ஆங்கோர் குழி தோண்டினர். சிறிது நேரத்திலே ஆகவேண்டிய சடங்குகளும் நடந்தன. வந்தவர்களில் ஒருவரான கோவில் அர்ச்சகர் மட்டும் ஏதோ இரண்டு மந்திரங்களைக் கடமைக்காக உச்சரித்தார். அவ்விதவைத் தாயின் "மகனே" என்ற ஹீனஸ்வர அழுகையினூடே அச்சவம் குழியில் இறக்கப்பட்டது. இருவர் மூவராய்ச் சேர்ந்து தாங்கிய வண்ணம் இறக்கப்பட்ட அச் சடலத்தின் ஒரு பக்கம் பிடி அச்சமயம் தளரவே அது குழியின் ஒரு மூலையில் மோதுண்டதைக்கண்ட அத்தாய், தன் இருதயத்திலே அந்த அடிபட்டுவிட்டதைப் போல் துடிதுடித்துப் புலம்பியதைப் பார்த்த எனக்குக் கண்கலங்காமல் போகவில்லை. ஐயோ! தாய்ப் பாசத்திற்கு எல்லையே இல்லையா! வாழ்க்கைமோதலையே கடந்துவிட்ட அச்சடலம், உணர்ச்சிக்குப் புறம்பானது என்பது அத் தாய் உள்ளத்துக்கு எட்டவே எட்டாதா...!



சட்டெனச் சுயஉணர்வு அடைந்த நான், அங்கு நின்று இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த என்னையே வெறுத்துக் கொண்டேன். தணலில் பட்ட புழுவைப்போல் துடிக்கும் அத்தாயின்சோக உள்ளத்திற்கு நான் அநீதி இழைத்துவிட்டதாகவே எண்ணி அவ்விடத்தைவிட்டு மெல்ல அகல ஆரம்பித்தேன் சத்திரத்தை நோக்கி.

சிந்தனைக் கொந்தளிப்பின் சிதறிய மனத்துடனேயே அன்றிரவு தூங்கினேன். பல காலத்திற்கு முன் மறைந்து சென்றுவிட்டிருந்த என் அன்னையின் உருவம் என் கண் முன்னுலேயே நின்றுகொண்டிருந்தது. அன்பின் ஆழி அல்லவா அவள்! தாய் குழந்தையைப் பெறும்போது பாலைப் பெறுகிருள்; அப்பாலை ஊட்டும்போது பாசத்தையும் அல்லவா ஊட்டிவிடுகிருள்!

மறுநாள் காலை கோவில்பக்கம் சென்றபோது முதல்நாள் மாலை அவ் விதவைத் தாயைத் தாங்

கிக்கொண்டு சென்ற அம் முதிய ஸ்திரீயைக் காணும்படி நேரிட்டது. மண்டபத்தின் ஓர் மூலையில் அமர்ந்திருந்த அவள் என்னைப் பார்த்ததும் சற்று மரியாதையுடன் எழுந்து ஒதுங்கி நின்றாள். அனுதாபத்தினால் தூண்டப்பட்டவனாய் அவளை நெருங்கிப் பேச்சுக் கொடுத்ததில், சேயை இழந்த அத் தாயைப் பற்றிய தகவல்கள் தெரியவந்தன.

"அவள்—அத்தாய்—இவ்வூர் வாசிதானும். முப்பது நாற்பது வருஷங்களாக அக் கிராமத்திலேயே வாழ்ந்திருந்தவள். சிறிய வயதிலே பெற்றோர்களை இழந்திருந்தாலும், சிறந்த கட்டழகியாய் இருந்ததில் தக்க கணவன் கிடைக்கப் பெற்று இன்பத்துடன் வாழ்க்கை நடத்திவந்தாள். அவள் கணவன் அவள்மீது உயிரையே வைத்திருந்தான். கண்ணியமும் அன்பும் பொங்கிய அத் தம்பதிகள் இரட்டைப் பட்சிகளைப் போல் சிறப்புடன் வாழ்ந்தது அக் கிராமத்தாருக்கே வியப்பை அளித்தது. பரோபகாரத்திலேயே வாழ்வைக் கழித்த அவர்களின் வாழ்வை மேலும் ஒளிர்விக்கப் பிறந்தான், இப்போது இறந்துவிட்ட அம்மகன் சோமேசன்,

அவ்விளம் தம்பதிகளின் பெருமைக்கு எல்லையே இல்லாமல் இருந்தது அப்போது. குலக் கொழுந்தாகிய சோமேசன் இக்கிராமத்தின் கொழுந்தாகவே வளர்ந்து வந்தான். அன்பிலும் நேர்மையிலும் தன் பெற்றோர்களுக்குப் பின் வாங்காதவனாய் அறிவுச் சுடராய்ப் பிரகாசித்தான்.

சோமேசனுக்குப் பத்து வயதாகும் போது தான் வளம் பொருந்தியிருந்த அக் குடும்பத்தின் மேல் முதல் இடி விழுந்தது. எங்கிருந்தோ வந்த வைசூரி நோய் சோமேசனின் தகப்பனை ஒரே நொடியில் கொண்டுபோய் விட்டது. அப்பப்பா! அப்போது அவ்விளம் தாய் துடித்துப் புரண்டு அழுததை இன்னும் அவர்களால் மறக்க முடியவில்லை.

வருஷங்கள் எப்படியோ சென்றன. அவளுக்குச் சோமேசன்தான் உலகமாய் இருந்தான். சிரிப்பும் குதூகலமும் நிறைந்திருந்த அவள் வாழ்வு அடக்கமும் அமைதியும் நிறைந்ததாய் விட்டது. கணவனை இழந்தது முதல் நாள் தவறாமல் சொக்கநாதப் பெருமானின் ஆலயத்திற்குப் போகத் தலைப்பட்டவள் அங்கேயே தன் வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிட்டாள் என்றுகூடக் கூறலாம். உயர்ந்து வளர்ந்திருந்த அவள் மகன் சோமேசன் தினமும் அவள் தோளைப் பற்றிய வண்ணம் அவளைக் கோவிலுக்கு அழைத்துச் செல்வது ஒன்றில்தான் அவள் இன்பமெல்லாம் இருந்ததுபோலும். ஆண் சிங்கமாய் இருந்த அவனுக்கும்தான், தாயின் சேவையில் எவ்வளவு பெருமை.



ஆனால் நாம் எண்ணுகிறபடியெல்லாம் யாவும் நடந்துவிட்டால்தான் தேவலையே! மனச்சாட்சிக்குப் பயந்து நடப்பவர்களுக்கு ஏற்படும் சோதனைகள் அத்தாய்க்கும் ஏற்படாமல் போகவில்லை!

வெளியே சென்றிருந்த சோமேசன் ஓர் தினம் திரும்பவில்லை. மறுநாள் அவனை எதிர்பார்த்தாள் அவள். ஆனால் பிரயோஜனப்படவில்லை. ஒவ்வொரு தினமாக ஒரு வாரம் சென்றது. அப்போதும் அவனைப் பற்றித் தகவல் இல்லை. கன்றைப் பிரிந்த பசுப்போல் அத்தாய் உள்ளம் பதைத்தாள். எங்கெங்கோ சென்று விசாரித்ததில் ஒருவாறு உண்மையை ஊகிக்க முடிந்தது, ரப்பர் தோட்டத்தில் வேலை செய்வதற்கு ஆள்பிடிக்க அயல் தேசத்திலிருந்து வந்திருந்த சில கங்காணிகள் நயவஞ்சகமாக அவனைக் கடத்திச் சென்றிருக்கலாம் எனத் தோன்றியது.

"அவள் வாழ்வில் மங்கிப் பிரகாசித்த சிறிய ஒளியும் அவிந்து விட்டதாகவே பட்டது அவ்விதவைத் தாய்க்கு. துன்பமும் வயோதிகமும், நோயுமே அவள் பிறப்புரிமைகளாய்விட்டன. கிராமத்தார் ஏதோ தங்களால் இயன்ற உதவியைச் செய்து, முள் நிறைந்த அவள் பாதையை ஒரு சிறிதாவது செப்பனிட முயன்றனர், அவள் தங்கியிருந்த குடிசையும் அதைச் சேர்ந்த தோட்டமும்தான் அவளுக்கு ஜீவிய ஆதாரங்கள்."

"வருஷங்கள் என்னவோ ஓடிக்கொண்டுதான் இருந்தன. சொக்கநாதனின் பாதமே துணையென்றிருந்த அவள் ஆத்மத் துடிப்புக்கு ஆதாரம் அளித்து வந்தது ஒரு சிறிய நம்பிக்கைதான். எப்படியாவது தன் எஞ்சிய வாழ்நாளுக்குள் சோமேசனைத் திரும்பப் பெற்றுவிடலாம் என்ற திட உறுதி அவளிடம் எப்படியோ ஏற்பட்டிருந்தது. யாராவது அவளிடம் பேச்சுக்கொடுத்தாலும் அவள் அதையேதான் கூறுவாள்."

"என் மகன் நிச்சயம் திரும்புவான் ஒருநாள்"

அக் கிராமத்து ஜனங்கள் இதை நம்பினார்களோ என்னவோ, ஆனால் அதை மறுத்து யாரும் ஒன்றும் கூறியதில்லை.

மூப்பும், பலஹீனமும் உடலை அழுத்த, தள்ளாடி வாழ்நாளைக் கழித்துவந்த அவள் கனவு பலிக்காமல் போகவில்லை, பல வருஷங்களுக்குப் பிறகு.

ஒருநாள் சோமேசன் திரும்பியே வந்துவிட்டான். தோட்டத்தில் அவள் ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தாள் அப்போது. மகனைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தவள் நீண்ட பெருமூச்சுடன் தலை நிமிர்ந்து பார்த்தபோது, தோட்டக் கதவினருகே நின்றுகொண்டிருந்தான் அவன். 'சோமேசன்' என்பதற்குப் பதில் 'சோமேசனின் எலும்புக் கூடு' என்றுதான் அவனைக் கூற வேண்டும்! உருவமே அடியோடு மாறிவிட்டு குழிவிழுந்த கண்களும், நோயுற்றிருந்த சரீரத்துடனும் அவன் வந்தான். காளையாக இருந்த அவன் கங்காணிகளுக்குப் பலியாய்விட்டு அடையாளம் தெரியாமல் மாறியிருந்தாலும், அத் தாய் அவனைப் பார்த்தவுடனேயே சட்டென நிமிர்ந்து நின்றாள். மங்கிப் பஞ்சடைந்திருந்த அவள் கண்கள் ஒரு கணம் பிரகாசித்தன. கரங்கள் விரிந்து நிற்க, வாய் "மகனே" என்று நீண்ட பொருமலுடன் உச்சரித்தது.

தள்ளாடியபடியே ஓடிவந்த அவன், அவள் கரங்களில் புதைந்தான். "அம்மா" என்ற அலறல் தோட்டம் பூராவும் எதிரொலித்தது.

குடிசையினுள் அவனைப் படுக்கவைத்து அவன் பக்கத்திலேயே அவள் அமர்ந்துவிட்டாள். இராப்பகலாக அவனுக்காக அவள் பட்டபாடு கூறத்தரமன்று. தன் சரீரத்தையும், ஆத்மாவையும் அவனுக்கே அர்ப்பணித்து விட்டாள். குரூரமான உலகத்திலிருந்து வந்திருந்த அவன் கண்களில் புற உலகைக் காட்டாமல் அவனுக்குத் தானே உலகமாய் விளங்கினாள். எளிய உணவை நாவுக்கு உகந்ததாய்ப் பல விதங்களில் பக்குவப்படுத்தி அளித்தாள். சதாகாலமும் அவனருகிலேயே இருந்து, அடிபட்ட குஞ்சைச் சுற்றிவரும் தாய்ப் பறவைபோல் அவனைப் பாதுகாத்தாள். தனக்குத் தெரிந்த சகல வைத்தியங்களும் செய்து அவன் உயிரை மீட்க அவள் மன்றாடியது அக் கடவுளுக்குத்தான் தெரியும்.

"தாய்ப்பாசம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்! ஆனால் அதன் எல்லையை இவள் விஷயத்தில்தான் கண்டேன், ஐயா...!" என்று எனக்குக் கதை கூறிக்கொண்டுவந்த ஸ்திரீ அங்கலாய்த்தபோது என் உடல் புல்லரித்தது.

சோமேசனும் அவள் கரத்தில் குழந்தையாகவே மாறிவிட்டான். ஒரு கணமேனும் அவள் தன்னைவிட்டுப் பிரிவதை அவன் சகிக்கவில்லை. அவள் இங்கு அங்கு எழுந்து சென்றாலும், ஒளி குன்றியிருந்த அவன் கண்கள் அவளையே தொடர்ந்தன.

ஆயினும் விதி அவளுக்குக் குறுக்கேதான் நின்றது. தாயை அடைந்துவிடவேண்டும் என்ற எண்ணத்துடனேயே தன் உயிரை இத்தனை காலம் பற்றியிருந்தவன்போல் சோமேசன் பதினைந்து தினங்களுக்குள்ளாகவே இம்மண்ணுலகை நீத்தான். அவனுடைய சோகச் சமாதியாய் அவள் நின்றுவிட்டாள்...!" என்று கூறி நிறுத்திய அந்த ஸ்திரீ தன் கண்களின் ஓரத்தில் தேங்கிநின்ற நீரை விரலால் நீக்கித் தெறித்தாள்.

நீண்ட பெருமூச்சுடன் அவளை ஏறிட்டுப் பார்த்த நான் ஒன்றும் பேசவில்லை. வேதனையினால் அங்கு நிற்கக்கூட முடியாதபடி என் அங்கம் துவண்டது. கொஞ்சம் பணத்தை

எடுத்து அவளிடம் அளித்தவாறே "அம்மா! புத்திர சோகத்தில் தவிக்கும் அவ்வனைக்கு இது ஆறுதலளிக்காது; ஆனால் அவசியமாயிருக்கலாம்!'' என்று மட்டும் கூறிவிட்டு விசையுடன் திரும்பினேன்.

சத்திரத்தை அடைந்த எனக்கு வெகுநேரம் அமைதிகொள்ளவேயில்லை. துன்பம் யாவருக்கும் பொதுவாயிருந்தாலும், இவ் விதவைத் தாய் விஷயத்தில்மட்டுமே பிரத்தியேகமாக மிதமிஞ்சி அது அளிக்கப்பட்டதாகவே என் மனத்தில் பட்டது. கண்கண்ட தெய்வமாக அக் கிராமத்தார் போற்றிவந்த அச் சொக்கநாதப்பெருமான், அவள்மீது கருணையற்றவராகவே மாறி, அநீதி இழைத்துவிட்டாரா என்ன! சீ! என்ன வாழ்விது! செல்வம் படைத்தவர்களுக்குத் துன்பம் ஏற்பட்டால், சிறிது நாளிலேயே அச் செல்வத்தின் பாதுகாப்பில் அவர்கள் துன்பத்தை மறந்து ஆறுதல் பெற்றுவிடுகின்றனர். வாலிபத்தில் கஷ்டங்கள் நேர்ந்தாலும், பொங்கி எழும் புத்துணர்ச்சியில் அவை மறைந்துவிடுகின்றன வெகு சீக்கிரத்தில். ஆனால் இவ்விரண்டுமில்லாமல், வறுமையினாலும், முதுமையினாலும் வருந்தி உற்றார் உறவினர் அற்று, தனிமையில் தவிக்கும் ஒரு விதவை இடைவிடாத துன்பமும், உள்ளத் துடிப்பும் அடைவதோடு தனக்கென்றிருந்த ஒரே மகனையும் இழப்பதென்றால், அதற்கு என்ன விளக்கம் கூறமுடியும்!

அத் தாயைச் சென்று பார்த்து ஆறுதல் கூற வேண்டும் என்று எத்தனையோதரம் நினைந்த எனக்கு ஏனோ துணிவு ஏற்படவில்லை. அவள் சோகத்திற்கு முன் என்னுடைய ஆறுதல் வார்த்தை எம்மாத்திரம்! அன்பிலும் பரிபாலிப்பிலும் சிறந்திருந்த அக் கிராமத்தாரிடமே அப் பணியை விட்டுவிட்டு, அன்றிரவே ஊருக்குப் புறப்பட்டுவிட்டேன்.

* * *

இரண்டாண்டுகளுக்குப் பின் ஒரு சமயம் அக் கிராமத்திற்கு நான் சென்றிருந்தபோது, அன்று கோயிலில் என்னுடன் பேசிய அம் மூதிய ஸ்திரீயைத் தற்செயலாய்ச் சந்திக்க நேரிடவே, அவ்விதவைத் தாயைப்பற்றி விசாரித்தேன். என்னை வெறித்து நோக்கிய அவள் ஒருவாறு அடையாளம் புரிந்துகொண்டு, "ஐயா! மகனைப் பறிகொடுத்த அத்தாய் இரண்டொரு மாதத்திலேயே அவனைப் பின்பற்றிப் போய்விட்டாள் பேதை...!'' என்று கூறியபோது எனக்குச் சற்று ஆறுதலாகவேயிருந்தது! ஆம்! வறுமையிலும், பிணியிலும், மூப்பிலும், துன்பத்திலும், ஆதரவின்றி, தேற்றுவாரற்று அவதியுறும் அவள் ஆத்மா விடுதலை அடைந்துவிட்டதல்லவா...! ●




இனும்! இனும்!! இனும்!!!

எமது நெ. 501 கறுப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான மயிரும் மைக் கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும் சுருண்டதாகவும், வளரச்செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. 1—15—0; 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—0—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட்வாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனும். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

**AMRIT PHARMACY (c. k. )**

**JULLUNDUR CITY.**

# அன்பு மனமும் மணமும்

எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

ஆண்டவனுக்கு ஆண்டாள் அனுதினமும் மலர்மாலை தொடுப்பாள், அதனை எம்பெருமானுக்கு அனுப்புமுன்னம், அது அழகாயுளதா, என்றறிய அதனைத் தானே அணிந்துகொள்வாள்; உடனே நிலைக்கண்ணாடியின் முன்னே நின்று நோக்குவாள்; பின்பே அதனைத் தனது தந்தையினிடம் சேர்ப்பிப்பாள்.

மாதவனுக்குத் தொடுத்த மலர்மாலையை அத்தேவி அணிந்து அழகு பார்ப்பதை ஒருநாள் ஆழ்வார் பார்த்துவிட்டார்; பார்த்துவிடவே, இது பரந்தாமனுக்கு அருகதையன்று, என்றெண்ணி, அம்மாலையை ஏற்றுக் கொள்ளவில்லை; பின்பு, தாமே ஒரு மாலை தொடுத்து, அதனை மாலவனுக்குப் பயபக்தி விசுவாசத்துடன சாத்தித் தொழுதார்.

தொழுதுமென்ன? மாயவனோ, "இதில் அன்பு மணம் கமழவில்லையே!" என்று கூறியதாக ஒரு கதை உண்டு. மலர் மாலைக்கு வாசனை நீர் தெளிப்பதேபோல், ஆண்டாளம்மை தனது அன்பு நீரைத் தெளித்தல் வழக்கம். அந்த அன்பின் ஆழத்தையும் மணத்தையும் ஆண்டவனே அறியக்கூடும். பிறரறிதல் எங்ஙனம்?

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டின் இறுதி. பம்பாயிலே காங்கிரஸ் மகாசபை நடந்தது. அதற்கு மோகனதாஸ் காந்தி போயிருந்தார்; சபர்மதி ஆசிரமத் தொண்டர்களும் உடன் சென்றிருந்தனர். அவர்கள் எல்லாருமாக அங்குள்ள மார்வாரி வித்யாலயத்தில் தங்கியிருந்தார்கள்.

ஒருநாள் மாலை அம்மோகனன் வெளியே செல்ல நேர்ந்தது. செல்லுமுன், தமது மேஜைமீதிருந்த புத்தகம், காகிதம், கடிதம் அனைத்தையும் அவர் ஒழுங்குசெய்தார்; அவற்றைத் தனித்தனியே அடுக்கிவைத்து நேர்மையுடன் இருக்கின்றனவா, என்று உற்று நோக்கினார்.

அயலேயிருந்த அன்பர் அதுகண்டு வியந்தார்; மேஜைமீதுள்ள பொருள்களை அடுக்கிவைப்பதில் இவ்வளவு அக்கறையா, என்று அதிசயித்தார்; பின்னர் "ஆம்! காணிக்கு ஒத்தது கோடிக்கு! பொருள்களை அழகாக அடுக்கிவைப்பதில் உள்ள அக்கறையைக்கொண்டு, அவரது வாழ்விலும் அழகுடன் ஒழுங்கையும் காணலாம், என்று அறிவுகொண்டார்.

காந்தி மகானை ஏற்றிச்செல்ல வெளியே வாகனம் காத்து நின்றது. நேரமாகிறதே என்று வண்டியோட்டி முணுமுணுத்தான். அச்சமயம் அம் மகான் ஏதோ ஒன்றை வெகு கவலையுடன் தேடிக்கொண்டிருந்தார், அது அகப்படவில்லை. கவலை தேங்கிய முகத்துடன் அதனைத் தேடுவதை அவர் நிறுத்தவேயில்லை. அவரது நிலைகண்டு, அருகேயிருந்த அவ்வன்பரும் கவலை மிகுந்தார்.

மிகுந்ததும், "எதனைத் தேடுகிறீர்கள்? விலைபெற்ற பொருளா என்ன? அது யாது?" என்று அந்த அன்பர் வினவினார். தேடுவதை நிறுத்தாமலேயே, "எனது பென்சில்!" என்றார் மகாத்மா. "சிறிய பென்சிலுக்கா இவ்வளவு கவலை! இவ்வளவு தேடுகை;" என்று அந்த அன்பர் தம் மனத்தூடே நினைத்தார்; அலட்சியமும் கொண்டார்.

அத்துடன் அவர் நிற்கவில்லை; "சிறிய பென்சிலுக்குப் பதிலாக இதோ பெரிய பென்சில்! இதனை எடுத்துக் கொள்ளுங்கள்! அச் சிறிய பென்சிலை அப்பால் தேடிக் கொள்ளலாம். நேரமாகிறது. வண்டி காத்திருக்கிறது. நீங்கள் திரும்பி வருமுன், அதனைத் தேடிவைக்கிறேன்" என்றார்.

காந்தி மகானோ அப்பெரிய பென்சிலை வாங்கிக் கொள்ளவில்லை. "எனது சிறிய பென்சிலே வேண்டும்" என்று கூறினார். இது கேட்டதும் அந்த அன்பர் சற்றுத் திகைத்தார்; பின்பு மனத்தூடே நகைத்தார்; ஏதேதோ எண்ணினார். முகத் தோற்றத்தைக் கொண்டு மனத்தின் நிகழ்வை மதித்தறிந்த மகாத்மா மொழிவார்:

"அன்ப! உமக்கு விஷயம் தெரியாது! சிறிய பென்சிலுக்காக இவ்வளவு கவலையா,

என்று நீர் நினைத்தல் சரியன்று. அப்பென்சில் சிறியதாயினும். ஒரு விதத்திலே மிகப் பெரியது! அது ஓர் அன்பளிப்பு! சென்னை நகரிலே ஸ்ரீ எ. நடேசனது சின்னக்குழந்தை எனக்கு முழு மனதுடன் அதனை அளித்தான். தனது செல்வமென எண்ணியிருந்ததை எனக்குச் செல்வமாகக் கொடுத்தான் அச்சிறுவன்? அத்தகைய பென்சிலை நான் இழக்கலாமோ? அதனை நான் எடுத்து எழுதும் பொழுது, அச்சிறுவனது அன்பு மணங் கமழ்வதை நான் அறிவேன். அன்பளிப்பான பொருளினிடம் நான் அலட்சியமாக இருக்க முடியுமோ? அதனை நான் இழக்க ஒண்ணாது அதனைத் தேடியடைந்து தீரவேண்டும்!"

அது கேட்ட அன்பர் என்ன பதில் சொல்வார்? தமது அறியாமையை உணர்ந்தார்; உடனே காந்திமகானுடன் சேர்ந்து, தேட முயன்றார். முடிவிலே அச் சிறிய பென்சில் அகப்பட்டது. அகப்பட்டதும் காந்தியின் முகமும் மனமும் மலர்ந்தன.

அப்பென்சில் ஒரு விரல் நீளங்கூட இராது. ஆனாலும், அதனையளித்த சிறுவனை அந்த அன்பர் தமது மனத்தே உருவகப்படுத்திக் கொண்டு, அவனது ஆர்வத்தையும் மகாத்மாவின் அன்புணர்ச்சியையும் வியந்தவண்ணம் இறும்பூது அடைந்தார். அவர் பெயர் காகா கலீல்கர்.'

* * *

அந்த அன்பரும் மகாதேவ தேசாய் என்பாரும் சேர்ந்து, முன்னம் ஒரு சமயம் காந்தியுடன் கதர் யாத்திரை போயினர். தமிழகத்தில் அந்த யாத்திரை முடிந்ததும், ஆந்திர நாட்டினுக்கு அம்மூவரும் சென்றனர். அதிகாலை முதல் இரவு நெடுநேரம் வரையில் கதர்ப் பேச்சு, கதர் முயற்சி, கதர்க் காட்சி! ஊடே ஊடே பல இடங்களில் காந்தியின் பிரசங்கம்! ஜனக் கூட்டமோ சொல்லிமுடியாது. மக்களின் உற்சாகமும் அப்படியே.

ஒருநாள் மூவரும் ஸ்ரீகாகுளம் சேர்ந்தனர். பகலெல்லாம் ஓய்ச்சல் ஒழிவின்றி யாத்திரை வேலை! இரவிலே பத்து மணிக்குமேல் நூற்றல் போட்டி! பாம்புரி போன்ற மெல்லிய ஆடைக்குப் பேர்போனது ஸ்ரீகாகுளம். அத்தகைய ஆடைக்குரிய நூலை நூற்போர் மாதரே! அதிலும் வயது சென்ற தள்ளாத கிழவியர்!

அக்கிழவிகளே நூற்புப் போட்டியில் முன் நிற்போர்! ஆதலின் அப்போட்டியில் பிரசன்னமாயிருக்க மகாத்மா ஒப்பினார், போட்டி துவங்க இரவு மணி பதினொன்று ஆகிவிட்டது; பகலெல்லாம் அலைந்த களைப்பு! கலீல்கரும் தேசாயும் அப்போட்டிக்குப் போகாமல், காந்திக்கும் சொல்லாமல் உறங்கப் போய்விட்டனர்.

இரவு ஒரு மணிக்கு அப்போட்டியிலிருந்து காந்தி மகான் திரும்பினார். இருவரும் உறங்கியிருப்பதைக் கண்டார்; அலுப்பினால் அம்மகானும் படுத்தயர்ந்தார். விடியற்காலை நாலு மணிக்கு அவ்விருவரும் கண்விழித்து வாய்பூசி, முகங் கழுவி, பிரார்த்தனைக்கு வந்தனர்.

வந்ததும், "இரவிலே படுக்கப் போகுமுன் பிரார்த்தனை செய்தீர்களா," என்று காந்தி மகான் கேட்டார். "அலுப்பு தாங்கமுடியவில்லை, அயர்ந்துவிட்டேன்," என்றார் கலில்கர்! தேசாயோ, 'நானும் படுக்கையிலே அமர்ந்து கண் மூடினேன. உடனே பிரார்த்தனை செய்யவில்லையே என்று அறிந்தேன். ஆண்டவனைத் தொழுதேன். ஆனால் கலில்கரை எழுப்பவில்லை,' என்று இயம்பினார்.

அதுகேட்டதும் காந்திமகான் கலங்கினார். அவர் மனம் புண்பட்டது, நா தழுதழுத்தது. வறண்டும் போயிற்று. கண்களிலே நீரும் தளும்பியது. இத்தகைய அவஸ்தையில் அம் மகாத்மா மனக்கசிவுடன் மொழிந்தது இது:—

"அன்பர்களே! நூற்புப் போட்டியிலிருந்து திரும்பியதும், மணி பன்னிரண்டுக்குமேலிருக்கும். களைப்பு வந்து என்னை மூடிக்கொண்டது. உடனே படுக்கையில் படுத்தேன். கண்ணை மூடினேன். மணி இரண்டு இருக்கும், விழித்துக்கொண்டேன், பிரார்த்தனை செய்யாமல், உறங்கிவிட்டேனே என்று உள்ளம் உடைந்தேன்.

"உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது. படுக்கையில் எழுந்து உட்கார்ந்தேன். பிழை குறித்துப் பதறினேன். என் உடம்பு என் வசமில்லை. துக்கம் என்னைப் பிடித்தாட்டியது. எனது முயற்சிக் கெல்லாம் முன்னின்று உதவும் முன்னவனை மறந்தேனே! என்ன பேதைமை! என்ன மறதி! என்று ஏங்கினேன், தயங்கினேன், திகைத்தேன்.

"பகவானை நான் மறப்பதா? இது அடுக்குமா? என்ன காலம் இது! எனது மறதி

யை, அஜாக்கிரதையை நான் போக்கிக் கொள்ள முடியவில்லையே. என்ன மனிதன் நான்! இவ்வாறெல்லாம் எண்ணினேன். தேம்பினேன். துடித்தேன். அப்பால் எனக்கு உறக்கம் வரவில்லை. இரவு முழுவதும் என் மறதிக்கு வருந்தினேன். ஆண்டவனே என்னை மன்னித்துவிடு என்று வேண்டி நின்றேன்!''

இவ்விதம் அவர் சொல்லியபின், அசைவற்ற மரம்போல் ஆனார். வாய் திறக்கவில்லை. கண்ணும் இமைக்கவில்லை. அவயவம் எதுவும் அசையவில்லை. அக்காட்சியைக் கண்டு, அவ்விருவரும் மனம் நொந்தனர். உண்ண மறக்கவில்லை, உடுக்க மறக்கவில்லை, உறங்க மறக்கவில்லை, ஆனால் ஆண்டவனைப் பிரார்த்திக்க மறந்தோமே என்று மனத்தாடே இருவரும் புலம்பினர். வேறென் செய்வர்?

கடைசியிலே தேசாய் ஒரு சுலோகம் சொன்னார். நாமாவளியும் போட்டார். உடனே காந்தி மகான் மனம் விண்டு, ''அன்பர்காள்! படுக்கப் போகும்போதுதான், பிரார்த்தனை செய்வது என்றிருந்தோம். இதில் பிழைநேர்ந்துவிட்டது. ஆதலின், இனிமேல் இரவு ஏழு மணிக்கு, நாம் எங்கேயிருந்தாலும் வண்டியில் போனாலும், ரயிலில் சென்றாலும், பிரார்த்தனை செய்துவிட்டே மறுவேலை பார்க்கவேண்டும்'' என்று திட்டம் செய்தார்.

ஆந்திர நாட்டிலே கதர் யாத்திரைக் காலத்தில் அவர்கள் மோட்டார் வண்டியிலேயே எங்கும் சென்றனர். இரவு சரியாக ஏழு மணிக்குக் காடோ கரம்போ எங்கே இருந்தாலும், அலுவல்களையெல்லாம் அவர்கள் நிறுத்திப் பிரார்த்தனைக்கு அமர்ந்துவிடுவர். அன்றுமுதல் அந்த நியதி ஏற்பட்டது.

தெய்வப் பிரார்த்தனை என்பது மகாத்மாவுக்கு உயிராகும். பிரார்த்தனை நேரத்தில் ஏராளமான ஜனங்கள் கூடுவர், அவர் தம்மை மறந்து, ஆண்டவனிடத்தே மனத்தை இருத்துவார். அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதே அவரது பதம். மக்களின் நலங்கருதியே, ஆலயங்களிலும் பூசை வேளையை முன்னோர் வகுத்துவைத்தனர்.

* * *

மற்றொரு சமயம் மகாதேவ தேசாயும் மகாத்மா காந்தியும் வடநாட்டிலே பிரயாணம் செய்துகின்றனர். ரயில்வண்டியில் போகும்பொழுது, மகாத்மா கடிதம் எழுதுவதும் கட்டுரை வரைவதும் உண்டு. ரயிலில் போகும்பொழுதே, எழுத்துவேலை அனைத்தும் எழுதித் தீர்ப்பதில் மகாதேவர் மிக வல்லவர்.

ஒரு நாள் ரயில் பிரயாணத்திலே, மாலையில் எழுத்து வேலையில் முனைந்தார் மகாதேவர். இரவிலே நெடுநேரம்வரையில் அதிகாலை மூன்று மணிவரையில், எழுதிக்கொண்டிருந்தார். பிறகே படுக்கச் சென்றார். காலையிலே வழக்கமாக எழுந்திருக்கும் நேரத்தில் தேசாய் கண் விழிக்கவில்லை. இரவெல்லாம் அவர் எழுதிக்கொண்டிருந்ததை மகாத்மா கவனித்தார்.

தூங்கி எழுந்ததும், தேசாய்க்குக் களைப்பு மிகுதியாக இருக்குமே, அதற்கு ஆறுதல் தேடித்தரவேண்டும், என்று காந்திமகான் கருதினார். அவ்வளவுதான். தேசாய் விழித்து எழுந்தார். எழுந்ததும், தமக்குமுன்னே ஒரு பெரிய தாம்பாளத்தில் பால், சர்க்கரை, தேயிலைப்பானம், ரொட்டி, வெண்ணெய் ஆகிய எல்லாம் தயாராக இருப்பதைக் கண்டார்.

மேலும், தேசாய் எப்போது எழுந்திருப்பார்; எழுந்ததும், காலையுண்டி கொள்ள வேண்டும், கொண்டால்தான், களைப்பு நீங்கும் என்னும் அன்பும் ஆர்வமும் ததும்ப காந்திமகான் வீற்றிருப்பதையும் அத் தேசாய் கண்டார்; திடுக்கிட்டார். என்னே குருவின் அன்பு என்று கருதினர்; பக்தியும் விசுவாசமும் மிகுந்தார்; பரவசமும் எய்தினர்.

தேசாய் எழுந்திருக்கு முன்பே, காந்தி மகான் எழுந்து, ரயிலடி சேர்ந்து, பலகாரக் கடை புகுந்து, காசைக் கொடுத்து, காலையுணவுக்கு வேண்டிய அனைத்தையும் கொணரச் செய்தார். குருவுக்கு அபராதம் புரிந்தேனே என்று தேசாய் கலங்கி நிற்கையில் காந்தி மகான் மதுர மொழியில் பேசத் தொடங்கவே, மகாதேவரும் கூச்சம் தவிர்ந்து, உணவு கொள்ளத் தலைப்பட்டார்.

அன்போடு இயைந்த வழக்கு என்ப, ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு

என்று திருக்குறள் முழங்கும்! அன்புடையார் எதுதான் செய்யார்? மகாத்மாவின் அன்பினுக்குக் கேட்கவேண்டுமோ?

## List of Ist Prizewinners of P. No. 2

(1) P. D. Lukhose, S. Travancore (2) P. C. S. Nanbiar, N. Malabar & (3) S. N. Gupta, Kanpur. In addition 26 persons are awarded 3rd prize and 11 the 5th Prize.

*Full particulars are published in the Rainbow dated 10—2—52.*

ரிஜிஸ்டர் நெ. 277 **ரூபாய் 25,000 பரிசு** போட்டி நெ. 4

M/S. Premier Bank of India Ltd. ல் சீல் செய்து வைக்கப்பட்டுள்ள எங்கள் சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின் பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12000 முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு, இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்ரும் பரிசு ரூ 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000/- முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ 1000ம் அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்கவேண்டும்.

AMBAL'S PUZZLES

KEY S NO 2 • 2 To 17=38

| | | | |
|---|---|---|---|
| 10 | 8 | 7 | 13 |
| 17 | 3 | 4 | 14 |
| 5 | 15 | 16 | 2 |
| 6 | 12 | 11 | 9 |

We hereby certify that the above is the solution in original deposited with us by *Ambal's Puzzles* No 2 on 2.1.52 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

*For The Premier Bank of India Ltd.*

V. Ramaswamy
*Agent, Madras*
29.1.52

முடிவு தேதி 27—2—52. விடை 12—3—52.

பிரவேசக் கட்டணம்:- கூபன் 1-க்கு ரூ. 1/- ... 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5/-

74

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

விடைகள் கண்டுபிடிக்கும் விதம் :- 11 முதல் 26 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும், எப்படிக் கூட்டினாலும் 74 வரும்படியாக அமைக்கவேண்டும், ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும். விதிகள் :- தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்படவேண்டும். பிரவேசக் கட்டணத்தை கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதை கூப்பன்களுடன் சேர்த்து அனுப்பவேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூப்பன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :-

**AMBAL PUZZLE No. 4**

28 (7) Thandavaroya Gramani St., TONDIARPET, MADRAS-21.

---

ரிஜிஸ்டர் நெ. 277 **ரூபாய் 25,000 பரிசு** போட்டி நெ. 5

சரியான விடை Premier Bank of India Ltd. Madras-ல் சீல் செய்துவைக்கப்பட்டுள்ளது. (மற்றவை மேலே கூறப்பட்டுள்ளதுபோல்.) முடிவு தேதி 12—3—52. விடை: 27—3—52

78

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

பிரவேச கட்டணம் கூபன் 1-க்கு ரூ. 1/- 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5/-

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:- 12 முதல் 27 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எப்படிக் கூட்டினாலும் 78 வரும்படி அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்கவேண்டும். மற்ற விபரங்கள் மேற்கூறியதுபோல்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :-

**AMBAL PUZZLE No. 5**

28 (7) Thandavaroya Gramani St., TONDIARPET, MADRAS-21

# எனது கிழக்கு ஆசியாப் பிரயாணம் - இந்தொனீஷியாவிலே

**ரங்க ராமாநுஜ அய்யங்கார்**

### "பறக்கும் டச்சுக்காரன்"

ஜூன் மாதம் ஐந்தாம் தேதி நடுப் பகல். "பறக்கும் டச்சுக்காரன்" என்ற வானவூர்தி கடல் மட்டத்திற்குப் பதினாயிரம் அடி உயரத்தில், மணிக்கு முந்நூறு மைல் வேகத்தில் சிங்கப்பூரிலிருந்து ஜாவாவை நோக்கிப் பறக்கிறது. சுமார் நாற்பது பிரயாணிகள். அவர்களில் ஒருவர் இந்தொனீஷியாவிற்கு ஸ்தானீகராகப் போகும் பாகிஸ்தான் பிரதிநிதி. விமானம் சிறிதும் ஆட்டம் அசைவில்லாமல் செல்லுவதால், ரயில் பிரயாணத்தைவிட இது "டயரி" எழுத எளிதாயிருக்கிறது. வெளியில் தோன்றும் காட்சிகள் ஒருபுறம் மனதை இழுக்கின்றன. பசிபிக் மகாசமுத்திரம் அல்லவா? சரித்திரத்தின் ஏடுகள் ஒவ்வொன்றாக மனக் கண்முன் தோன்றுகின்றன. மனிதன் முதலாவது கடற் பிரயாணம் செய்தது கிழக்கு ஆசியாவை அடுத்த இந்துமகா சமுத்திரத்தில்தான் என்று சரித்திரம் கூறும். அதைத் தாண்டியபின் இந்தப் பசிபிக் மகாசமுத்திரத்தில்தான் முதல் கடற் பிரயாணி சென்றிருக்கவேண்டும். எழு கடல் கடந்து, தமிழ்க் கலையையும் சைவ சமயத்தையும் பிறநாடுகளில் பரப்பிய அகஸ்திய முனிவர் வந்த பிரதேசம் இதல்லவா? ஸுக்ரீவன், ஸீதா தேவியைக் கண்டுபிடிக்க, வானரப் படைகளை அனுப்பும் பொழுது, யவத்வீபம், ஸுவர்ணத்வீபம், ஸப்தராஜ்யம், என்றெல்லாம் குறிப்பிட்ட பிரதேசம் இதல்லவா? பௌத்த மத ஜாதக நூல்களும், டாலமி போன்ற புராதன சரித்திர ஆசிரியர்களும், புகழ்ந்து கூறுவது இந்தப் பிரதேசம் அல்லவா? காஞ்சி முதல் குமரி வரை வாழ்ந்த தமிழர்கள் திரைகடலோடித் திரவியம் தேடிய பிரதேசம் இதல்லவா? விஜயாலய சோழ வம்சத்தவர் தமிழகத்தில் விளங்கிய காலத்தில் "ஸ்ரீ விஜயா" என்ற பேரரசு பெருவாழ்வு வாழ்ந்ததும் இங்கு அல்லவா? ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்தில், மெகலன் போன்ற மாலுமிகள் நூதன திசையறி கருவிகொண்டு, சுற்றித் திரிந்ததும் இங்கு அல்லவா?

இப்பொழுது விமானத்திலிருந்து எட்டிப் பார்க்கையில், கீழே, பாதுகை, பன்னீர்ச் செம்பு, பூந்தொட்டி, முதலிய பல விசித்திர உருவங்களுடன் சிறு சிறு தீவுகள் காணப்படுகின்றன. மலைகளுக்கு நடுவில், வட்டமாகவும், கோண வடிவமாகவும் தெரிகிற பள்ளத்தாக்குகளில், பாற் கடலைப் போலவும், வெண்ணெய்க் கட்டியைப் போலவும் உறைந்து உறங்கும் மேகங்கள் தரும் காட்சி தானென்ன! நீலம், ஊதா, சிவப்பு, பச்சை இவ்வாறாகப் பல நிறங்களுடன் பிரகாசிக்கும் சிறு கடல்கள் மாறிமாறித் தோன்றுகின்றன. கீழே எதிர்த் திசையை நோக்கிப் பறக்கும் மற்றொரு விமானம் சிறுவர்கள் பறக்கவிடும் காகிதப் பட்டம் போலத் தெரிகிறது. இவற்றை எல்லாம் அகக் கண்ணாலும் புறக் கண்ணாலும் பருகி மகிழ்ந்திருக்கும் தருணம், விமானத்தில் தடதடவென்று குறுக்கே ஒருவர் ஓடிவரும் சத்தம் கேட்டுத் திரும்பலானேன். ஒரு வெள்ளையர், உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை, ரொட்டித் துண்டு, வெண்ணெய், பழரசம், முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு, அபிஷேக மூர்த்தியாக, ஸ்நான அறையை நோக்கி விரைந்து வரக்கண்டேன். அவர் பரபரப்புடன் என்னைத் தாண்டிச் செல்லும்பொழுது என் மடியில் அமர்ந்திருந்த வீணையைப் பார்த்து, "எத்தனை பெரிய ஹவாய் நாட்டுக் கிட்டார் வாத்தியம்! ஆச்சரியம்!" என்று சொல்லிக்கொண்டே ஓடினார். அவருடைய அலங்கோலத்தை விளக்குபவர் எவர் என்று அங்கும் இங்கும் திரும்பினேன். பிரயாணிகளின் ஸௌகரியங்களைக் கவனிக்கும் (Air HOSTESS) என்ற நங்கை, பத்து நிமிஷங்களுக்கொருமுறை முகம் கழுவி, நறுமணப் பொடி தூவி, உடை மாற்றி, பிரயாணிகளை விசாரித்து வருவார். அவர் மறுமுறை வருவதை எதிர்பார்த்திருந்து, அவரிடம் ஆவலுடன் வினவினேன். "சற்றுமுன் பூமத்திய ரேகையைக் கடந்தோம். விமானம் ஓட்டுபவர்களில் முதன் முதலாக இந்தச் சந்தர்ப்பம் வாய்ப்பவருக்கு மற்றப் 'பைலட்டுகள்" இப்படி அபிஷேகம் செய்து களிப்பது வழக்கம். அவர் அதன் பின்னர் குளித்து, உடை



சுகர்னே

மாற்றித் தம் பணியில் அமருவார்." என்ற பதில் கிடைத்தது. சில ஆண்டுகளுக்கு முன், நமது நாட்டுத் தலைவர் பண்டித நேரு கப்பலில் பூமத்திய ரேகையைத் தாண்டிய பொழுது நடந்த குதூகலமான நிகழ்ச்சிகள் அப்பொழுது என் நினைவிற்கு வந்தன. உடனே எதிரில் இருந்த கடிகாரங்களைப் பார்த்து, "பூமத்தியரேகை, இந்திய நேர அளவு 13·50; கிரீனிச் நேர அளவு 7.20," என்று "டைரி"யில் குறித்துக்கொண்டேன்.

## ஜயா கர்த்தா (படேவியா)

பிற்பகல் மூன்று மணிக்கு விமானம் ஜயா கர்த்தாவை அடைந்தது. இந்தோனீஷியாவின் தலைநகர் இது. "விஜயநகரம்" என்ற கருத்தடங்கியதே இதன் பெயர். இவ்வூர் விமான நிலையம் மிகப்பெரியது. ஐந்து நிமிஷங்களுக்கு ஒன்ருக விமானங்கள் இங்கே வந்து இறங்குவதும் புறப்படுவதுமாக இருக்கின்றன. என்னுடன் இறங்கியவர்கள் நாற்பது பெயர்கள்தான். ஆயினும், நுழைவுச் சீட்டுகளையும் சாமான்களையும் பரிசோதனைசெய்ய மூன்றுமணி நேரமாயிற்று. ஸ்தல நிர்வாகிகளின் அசிரத்தையும் அனுபவக் குறைவுமே இதன் காரணம். இதைத் தொடர்ந்து மேன்மேலும் ஏமாற்றமும் மனச் சஞ்சலமும் மாறிமாறித் தாக்கிவந்தன.

மலாய் நாட்டின் சீரும், சிறப்பும் மாசற்ற தூய்மையும் கனவென மயக்கம் கொள்ளும்படி ஜயாகர்த்தா நகரம், குப்பையும் கூளமும், துர்நாற்றமும் நிறைந்து காணப்பட்டது. மிகவும் கேவலமான தோற்றமுடைய ஒரு வாடகை ஜட்கா வண்டிக்கு எலும்பு கூடுகளைப் போன்ற குதிரைகள் இரண்டு பூட்டப்பட்டிருந்தன! இந்த ஜட்காவை இழுத்துச் செல்லும் வலிமை ஒரு குதிரைக்கு இல்லாமையினுல் அதற்கு ஒரு தோழன் தேவை போலும்!

ஸுகர்ணு, முகம்மது ஹாட்டா முதலிய இந்தோனீஷியத் தலைவர்கள் ஸமாளித்து வரும் சிக்கல்கள் நிறைந்த நிலைமையை இந்த நகரத்தில் காலடி வைத்த கணமே அறியலாம். 1858-ஆம் வருஷம் ஆங்கில அதிகாரம் திடீரென்று இந்தியாவை விட்டு அகன்றிருந்தால் நமது நாட்டின் நிலை எப்படி இருந்திருக்கும்? இரண்டு நூற்றுண்டுகளுக்குமேல், இந்தோனீஷியா டச்சு ஆட்சியில் இருந்தது. அதிகார வர்க்கம் சுரண்டல் வேலையை மேற்கொண்டதே தவிர, நாட்டு மக்களுடைய வாழ்க்கையிலோ அவர்களுடைய முன்னேற்றத்திலோ சிறிதும் கவனம் செலுத்தவில்லை. இதனுல் நாட்டிற்கு நேர்ந்த தீமையை அளவிட முடியாது. "ஆங்கில ஏகாதிபத்தியத்தில் ஸூரியன் அஸ்தமிப்பதில்லை" என்று பெருமை பேசி, "அத்துணை மாட்சிமை மிகுந்த ஏகாதிபத்தியத்தைக் கூறு போட்டுக் கலைத்து விடவா நான் தலைமை வகிப்பேன்?" என்று மார்பு தட்டும் கூட்டத்தினர், தங்களுடைய இனத்தவரின் சாசுவத ஸுக போகங்களுக்கென, பல கோடி ரூபாய்கள் செலவிட்டுப் புது டெல்லியை நிர்மாணம் செய்தனர் அன்ருே? பழைய டெல்லியை அதனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அம்மாதிரியே ஜயா கர்த்தாவில் டச்சு அதிகாரிகள் வசித்து வந்த பாகத்திற்கும் மற்ற இடங்களுக்கும் உள்ள வேற்றுமை வெட்கக் கேடானது. நாட்டு மக்கள் வசிக்கும் இடங்களில் முனிஸிபல் விளக்குகூடக் கிடையாது. கடல் நீரை வாய்க்காலில் பாய்ச்சி, சென்னையை அலங்கரிக்கும் கூவத்தைப் போன்ற அந்த வாய்க்காலில், இரவும் பகலும், ஆண்களும், பெண்

களும், திரள் திரளாக இறங்கி, நீராடியும், உடைகளைத் துவைத்தும், அந்தத் தண்ணீரில் நேராகவே பகிரங்கமாக மலம் ஜலம் கழித்தும், காவடிகளில் தகர டின்கள் தாங்கி வரும் அழுக்கு நிறைந்த தண்ணீரை விலைக்கு வாங்கிக் குடிதண்ணீராக உபயோகித்தும், இப்படிக் காலகதிக்குச் சிறிதும் பொருந்தாத பிற்போக்கான நிலையில் அவர்கள் உழன்று வருகின்றனர். செல்வம் உள்ள வீடுகளின் சுற்றுப் புறங்களில்கூட, பெரும்பாலும் நடையாக உபயோகப்படும் இடங்கள் தவிர, எஞ்சிய பாகங்களில் கூழாங் கற்கள் இறைக்கப்பட்டுத் தரை கரடுமுரடாக இருக்கிறது.

தபால், தந்தி, டெலிபோன் முதலியன மிகவும் கேவலமான நிலையில் உள்ளன. அரசாங்க உத்தியோகஸ்தர்களில் பலர் ஒழுங்கு, நேர்மை என்பதையே அறியாதவர்கள். உயர்ந்த பதவிகளை வகிப்பவர்கள் முதல் குமாஸ்தாக்கள் வரை காரியாலயங்களில் குறிப்பிட்ட நேரத்தில் ஆஜர் ஆவது என்பதுகூட அரிது. விடுமுறைகளோ அதிகம். முன் எச்சரிக்கை இல்லாமல் "ஹரிராயா" என்ற விடுமுறைப்பூதம் காரியாலயங்களை மூடிவிடும். பெட்ரோல் "பங்கு", வானொலி நிலையம், முதலியவைகள்கூட மூடிக்கிடக்கும். இப்படிப்பட்ட ஒழுங்கீனங்களுக்குக் காரணம் டச்சு அதிகாரிகள் துரைத்தனம் நடத்துவதில் நாட்டு மக்களுக்குப் படிப்படியாக நாளடைவில் பயிற்சி அளிக்காமலே இருந்துவிட்டதுதான். உலகப்போரின் பின் ஆசியாவில் எழுந்த சூழ்நிலையினாலும், நசுக்கமுடியாத சுதந்திரக் கிளர்ச்சியினாலும், அவர்கள் திடீரென்று நாட்டைவிட்டு வெளியேறினார்கள். இது சிறிதும் அனுபவமில்லாத தேச மக்களுக்குப் பெரும் சோதனையாயிற்று. மந்திரி சபைக்கும் நிர்வாக இலாகாக்களுக்கும் பூர்த்தியான தொடர்பு இல்லாமல், போலீஸ் அதிக்கிரமங்கள், செலாவணிக் குழப்பம், லஞ்சக்கொடுமை, "கண்ட்ரோல்" ஊழல்கள், முதலிய தொல்லைகள் சமூகத்தைப் பீடிக்கின்றன.

ஆயினும் முன்னேற்றத்திலும் சுதந்திர வாழ்விலும் மக்களுக்கு உள்ள பேராவல், அவர்கள் நுண்ணறிவுடனும் உழைப்புடனும் போற்றிவரும் நல்ல ஊதியம் தரத்தக்க பல தொழில்கள், பல நூற்றாண்டுகளாகப் பண்படைந்து அன்றுபோல் இன்றும் சமூகத்தின் ஜீவநாடியாக விளங்கும் கலாசாரத்தில் விடாப்பிடியான பற்று, சர்வதேசத் தொடர்பும் பரந்த உன்னதமான லட்சியங்களும் கொண்ட மேதாவிகளான தலைவர்கள்,




இந்தோனிஷிய தேசியச் சின்னம்

நாட்டின் இயற்கை வளம், இவைகளை உற்று நோக்கினால் இந்தொனீஷியாவின் எதிர்காலம் ஒளிவீசித் திகழும் என்ற நம்பிக்கை பிறக்கும்.

ஸூகர்ணோ, ஹாட்டா முதலிய தலைவர்கள், சீலம், தியாகம், தன்னலமற்ற தொண்டு, விடாமுயற்சி, பொதுமக்களின் நம்பிக்கை இவற்றில் தலைசிறந்தவர்கள். காலப் போக்கைச் செவ்வனே அறிந்து, வெளி நாடுகளுடன் மிகவும் இங்கிதமான தொடர்பு கொண்டவர்கள். மலாய் நாடெங்கும் நேத்தாஜி போஸின் திறமையும் தீரச் செயல்களும் ஒரு வீர காவியமாக முழங்குகின்றன. இந்தொனீஷியாவிலோ பண்டித நேருவை, நாட்டிற்கு ஸர்வ நாசமும் நெருங்கி வந்த காலத்தில் அபயமளித்துக் காத்த தெய்வீக புருஷராக மதிக்கிறார்கள். ஆடம்பரமான போலிப் புரட்சி வாதத்திலும், பொறுப்புணர்ச்சி இல்லாத இடதுசாரிக் கிளர்ச்சியிலும் அந்தத் தலைவர்கள் நாட்டமில்லாதவர்கள். மக்களிடையே வேரூன்றிய பழைய கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டே இளங்குடியரசை வளர்க்க முயற்சிப்பவர்கள். ஆழ்ந்த கருத்துக்களடங்கிய அந்த நாட்டுக் கொடியைப் பாருங்கள்.

பாரதக் கொடியைப் போலவே ஒரு தனிக் கமிட்டியின் சிபாரிசின்மேல் மந்திரி சபை




நடனமாதர்

அதை ஏற்றுக் கொண்டது. அதில் காணும் கருடன் கற்பனைச் சக்தியின் அடையாளம். அதன் கழுத்துச் சங்கிலியிலிருந்து ஒரு கேடயம் தொங்குகிறது, நாட்டின் உரிமையைப் பாதுகாப்பதே அதன் கருத்து. அதன் சிவப்பு, வெண்மை நிறங்கள் வீரியத்தையும் தூய்மையையும் அறிவிப்பன. அதன் ஐந்து பாகங்களும் அரசியலின் ஐந்து தத்துவங்களைக் குறிப்பன. அவை கடவுள் பக்தியைக் குறிக்கும் நக்ஷத்திரம், ஜனநாயகத்தை விளக்கும் மாட்டுத்தலை, நாட்டுப்பற்றின் அடையாளமான ஆலமரம், தகைமையையும் சமத்துவத்தையும் காட்டும் சங்கிலி, ஊண் உடையின் சின்னங்களான நெற் பயிரும் பருத்திச் செடியும். இவற்றைத் தவிர, அந்த ஐந்து பிரிவினைகள் மற்றொரு கருத்தையும் விளக்குவன. 1945 என்ற எண்ணின் கடைசி இலக்கமான ஐந்து, அந்த ஆண்டைக் குறிக்கும். கருடனின் வால்புறமுள்ள எட்டு இறக்கைகள் எட்டாவதான ஆகஸ்டு மாதத்தைச் சுட்டிக் காட்டுகின்றன. ஒவ்வொரு பக்கமும் உள்ள பதினேழு இறக்கைகள் 17-ஆம் தேதியைக் குறிக்கும். ஆகவே இவைகள் தெரிவிப்பது அந்த நாடு சுதந்திரம் அடைந்த 1945-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 17-ஆந் தேதியையே ஆகும். கருடனின் கால்கள் பற்றி இருக்கும், பட்டயத்தில் உள்ள வாக்கியத்தின் கருத்து "இனங்கள் பல; சமுதாயம் ஒன்று", என்பது. கருடனின்பொன் நிறம் மக்களின்மாட்சிமை, நாட்டின் கண்ணியம் இவற்றின் அறிகுறி. பூமத்திய ரேகையில் அமைந்த நாடுகளில், தனது முயற்சியினால் விடுதலை பெற்றது இந்தோனீஷியா ஒன்றே. இதனைக் குறிப்பது கேடயத்தில் இடம் வலமாகச் செல்லும் ஒரு கோடு.

*பாரதக் கலையின் ஒளி வீச்சே!*

ஜாவா முஸ்லிம்களின் நாடு. ஆனால் அங்கே மதவெறியையும்பிற மதப் பகைமையையும் காண்பதற்கில்லை. "தாருல் இஸ்லாம்" என்ற வெறியர் கூட்டம் மறைவிலிருந்து செய்யும் விஷப் பிரசாரமும் கொலை களவுகளும் பலிக்கவில்லை. சமீபகாலத்தில் நாட்டு மொழியை மேனாட்டு எழுத்துக்களில் எழுதத் தொடங்கி இருக்கிறார்கள். இதைத் தவிர, பாரதநாட்டின் பழக்க வழக்கங்கள், சிந்தனைப் போக்கு, இலக்கியங்கள் போன்றவைகளை நாடெங்கும் காணலாம்.

இந்துக்கள் தெய்வாம்சம் பொருந்தியதாக மதிக்கும் கருடனே அங்குத் தேசியக் கொடி. நாட்டின் ஆகாய விமானங்கள் கருடனையே சின்னமாகக்கொண்டவை. தர்ம துரியோதனே, ஸூர்யதர்மா, சுபேந்த்ரோ, விஜய குஸூமா, என்னும் பெயர்கள் முஸ்லிம்களிடம் விளங்குகின்றன. மேலும், உபவாஸம் புவாஸா என்றும், நாமம் நாமா என்றும் திரிந்து வழக்கத்திலிருக்கின்றன. நாடெங்கும் பல நூற்றாண்டுகளாக முழங்கும் "நிழலாட்டம்" என்னும் பொம்மைக்கூத்து, ராமா



வேணுகான கோஷ்டி.

யணம் பாரதம் முதலியவைகளில் அடங்கிய புராணக் கதைகளைப் பற்றியதே. சீனருடைய இசையில் நமது மோஹன ராகம் வேறு பெயருடன் முதன்மை பெற்று விளங்குவதுபோல் சாவக நாட்டு இசையில் முக்கியமானது நமது மத்தியமாவதியே. நாட்டியம், வேணுகானம் முதலியவை நமது தொல்கலைச் செல்வத்தின் ஒரு சிறு துளியே என்று முடிவாகக் கூறலாம்.

### ரூமா கஜா

கிழக்கு ஆசியாவில் அழியாப் புகழை நாட்டிய ஸ்டாம்போர்ட் ராப்ல்ஸ் என்ற ஆங்கிலக் கனவான் படேவியாவில் (ஜயா கர்த்தாவின் பழைய பெயர்) ஒரு கலைச் சங்கத்தைத் தோற்றுவித்தார். அது நாளடைவில் வளர்ந்து, தற்காலம் ஒரு பெரிய பொருட்காட்சிச்சாலை ஆகிவிட்டது. அதன் முன்புறத்து விசாலமான முற்றத்தில் ஒரு யானையின் வெண்கல உருவம் நிற்கிறது. அதனால் ஜனங்கள் அந்தக் காட்சிச்சாலைக்கு நமது மொழியுடன் தொடர்புகொண்ட ரூமா கஜா என்ற பெயரை இட்டனர். யானைக் கட்டிடம் என்பது அதன் பொருள். அதை ஞாயிறன்றுதான் திறந்து வைக்கிறார்கள். ஆகையினால் அன்று அங்கே கூட்டமும் சந்தடியும் அதிகம். இந்து, பௌத்த மதச் சின்னங்கள், விநோதச் சாமான்கள், புத்தகங்கள். சித்திரக் கலைப் பொருள்கள் முதலியவை அங்கு நிறைந்திருக்கின்றன. உதாரணமாக, அகஸ்தியர் கட்டைவிரல் அளவு உயரம் என்பது ஒரு அற்ப மனிதனின் அபாரச் சாதனையை மறைத்துரைக்கும் கற்பனை. இதை விளக்குவதுபோல அங்கு ஒரு சாதாரண மனிதனின் உருவம் பெற்ற அகஸ்தியரின் அழகிய கற்சிலையொன்று நிற்கிறது. இதைப் போல எங்குப் பார்த்தாலும் பண்டைய பாரத நாட்டின் அம்சங்கள் நாட்டிலும் மக்களிடையிலும் வேரூன்றியிருப்பதைக் காணலாம்.

(தொடரும்)

WELKINS TOOTH PASTE



இன்றே உங்கள் பற்களை
இதனால் சுத்தம் செய்து
பாருங்கள்

வெல்கின்ஸ் டூத் பேஸ்ட் உங்கள் பற்களைப் பளபளவென்று வெண்மையாக்கி, வாயின் துர்நாற்றத்தைப் போக்கி, பற்களைக் கெடாமலும், ஈறுகள் கெடாமலும் **இரு வகையிலும்** பாதுகாக்கின்றது. சுவாஸத்தை இனிதாக்குகிறது.

இது அனுபவமிக்க ஒரு அமெரிக்க (U.S.A.) ரஸாயனியால் இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது.

WELKIN LABORATORY (C)
9-3, Chanditolla Lane,
CALCUTTA-33.

# டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

சென்ற ஒருமாத காலம் பூராவுமே அரசியல் உலகில் காரசாரமாக விவாதிக்கப்படுப்வை சென்னை, திருவாங்கூர் கொச்சி தேர்தல்கள். எப்படி இந்தியாவிலேயே அதிக ஸ்தானங்கள் காங்கிரஸ்காரர்களால் நிரப்பப்பட்ட சென்னை அசெம்பிளிக்குக் காங்கிரஸ் அல்லாதார் இவ்வளவு சங்கியையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதுபற்றி வியப்பு உண்டாகிறது.

சென்னையிலிருந்து வந்த ஸ்ரீ நாடார், ஸ்ரீ ராஜா, ஸ்ரீ சஞ்சீவி ரெட்டி யாவரும் காரியக் கமிட்டிக்குச் சென்னையில் ஏற்பட்ட தேர்தல் சரிவைப்பற்றி ரிபோர்ட் செய்தனர். முக்கியமாக, சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் எதிர்ப்பாளர்களுக்குச் சர்க்காரின் ஆறு அவுன்ஸ் அரிசிக்கொள்கை மிகவும் பிரசாரத்திற்கு உபயோகமாக இருந்தது என்றும், மற்றும் காங்கிரஸுக்கு எதிராக எல்லாக் கக்ஷியினரும் சேர்ந்து முன்னணி ஏற்படுத்தியது காங்கிரஸைத் திக்குமுக்காடும்படி செய்துவிட்டது என்றும் சென்னைப் பிரதிநிதிகள் வற்புறுத்தியதாகத் தெரிகிறது.

சென்னைப் பிரதிநிதிகள் எவ்வளவுதான் தங்கள் கக்ஷியை எடுத்துரைத்து விளக்கிய போதிலும், சென்னையில் காங்கிரஸ் தோற்றதற்குப் பல்வேறு மற்றக் காரணங்கள் இருக்கின்றன என்று காங்கிரஸ் வட்டாரங்களில் கருதுகின்றனர். முதல்முதலாக, சென்னையில் மற்ற மாகாணங்களில் உள்ளதுபோல அகில இந்திய அந்தஸ்து உள்ள தலைவர் இல்லாதது ஒரு காரணம். அப்படி இருந்த ராஜாஜியை நம் புண்ணியவான்கள் ஒழித்துக்கட்டியதன் பலனை இப்பொழுது அனுபவிக்கிறார்கள். இரண்டாவதாக, சென்ற நான்கு வருஷங்களில் காங்கிரஸ் பொது ஜனத் தொடர்பை அறவே இழந்ததுடன் பல இடங்களில் காங்கிரஸ்காரர்கள் பொது ஜனக்கூட்டம் போடக்கூட அஞ்ச ஆரம்பித்தனர். மூன்றாவதாக, காங்கிரஸ்காரர்கள் தாங்களும் வகுப்புவாதிகளாக மாறினால் தங்களுக்குச் செல்வாக்கு உண்டாகும் என்று கனவுகண்டு படிப்பு, உத்தியோகம் முதலிய துறைகளில் வகுப்புவாதக் கொள்கையைக் கைப்பிடித்து ஜமாய்த்தனர். இதன் பலன், காங்கிரஸ்காரர்களால் மறைமுகமாக ஆதரிக்கப்பட்ட திராவிடக் கழகமே வலுத்ததுடன் வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது போல் தேர்தலில் இவர்கள் காங்கிரஸை நன்றாகக் காலைவாரிவிட்டார்கள். மேலும் காங்கிரஸின் கொள்கையால் பாதிக்கப்பட்ட சிறுபான்மையோர் காங்கிரஸுக்குத் தவிர வேறு யாருக்கு வேண்டுமானாலும் ஓட்டுப் போடத் தயாராயினர்.

இடதுசாரிகளுக்கு ஓட்டுக் கிடைத்து ஸ்தானம் கிடைத்தாலும் பரவாயில்லை, ஆனால் வகுப்புவாதிகளான உழைப்பாளிகள் கக்ஷியினருக்கும், காமன்வீலுக்கும். சுயேச்சையாளருக்கும் அல்லவோ ஸ்தானங்கள் கிட்டியிருக்கின்றன என்று தெரிந்த வட்டாரங்களில் ஆச்சரியப்படுகிறார்கள். ஆனால், விஷயம் தெரிந்தவர்களுக்கு இது வியப்பை அளிக்கவில்லை. பழைய நாளில் பிராமணர் — பிராம்மணரல்லாதார் என்ற பிரம்மராக்ஷஸை வளர்த்த ஜஸ்டிஸ் பார்ட்டி விஷம் இன்று வேர்வரை சென்றுவிட்டது. இன்று முன்னேற்றம் அடையாத பிராமணரல்லாதார்களில் பிள்ளைமார்களும், முதலியார்களும், நாயுடுகாருகளும் புது ரகப் பிராம்மணர்களாகத் தோன்றுகின்றனர். இந்த உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே உழைப்பாளிகள் கக்ஷி வெற்றியடைந்திருக்கிறது. அவர்கள் கோஷம் "வன்னியர் குலத்து ஓட்டு அன்னியருக்கில்லை" என்பதாம்.

ஆனது ஆகிவிட்டது. மேலே என்ன என்றும் காங்கிரஸ் கமிட்டி கவனித்திருக்கிறதாக அறிகிறேன். எவ்வளவுதான் கம்யூனிஸ்ட்களும்—கிஸான் மஸ்தூரும் முயன்றாலும் சர்க்கார் அமைக்க அவர்களால் முடியாது என்று இங்கே கருதப்படுகிறது. சுதாவாகக் காங்கிரஸ், உழைப்பாளிகள் ஆதரவையும், சில சுயேச்சையாளர்கள் ஆதரவையும் கொண்டு சர்க்கரர் ஏற்படுத்தலாம். ஆனால் காங்கிரஸ் கமிட்டி இந்த யோஜனையை அங்கீகரிக்கவில்லை. புதுத் தேர்தல்கள் நடத்தவும் காங்கிரஸ் கமிட்டிக்கு இன்னும் தைரியம் ஏற்படவில்லை. உள்ளதும் போனால் என்ன செய்வது என்ற கவலை இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, புது மந்திரிசபை ஏற்படுத்துவது பற்றி ஹேஷ்யம் சொல்ல இப்பொழுது இயலவில்லை. ஆனால் கவர்னர் ஆட்சி நம் மாகாணத்தில்

ஏற்படாது என்றுமட்டும் உறுதி கூற முடியும். முடிவில் காங்கிரஸ்கூட, கூட்டுச்சர்க்கார் அமைக்க ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளலாம்.

*　　　*　　　*

அகில இந்தியாவிலும் தேர்தல்கள் முடிவடைந்துவிட்டன. சென்னை, திருவாங்கூர் கொச்சி, ஒரிஸ்ஸா, பெப்ஸு ராஜஸ்தான் நீங்கலாக மற்ற இடங்களில் காங்கிரஸுக்கு மெஜாரிட்டி கிடைத்துள்ளது. தவிர, பார்லிமெண்டில் காங்கிரஸுக்கு மெஜாரிட்டி கிடைத்துவிட்டதால், இந்த மாகாணங்களில் பிற்போக்குள்ள சர்க்காரோ அல்லது அதீதக் கொள்கையுடைய சர்க்காரோ அமைக்கமுடியாது என்பது நிச்சயம்.

*　　　*　　　*

திருவாங்கூர் — கொச்சியைப் பொறுத்தவரை காங்கிரஸ் தோற்றதைக் குறித்து வியப்பு அல்ல, கம்யூனிஸ்ட்கள் காங்கிரஸுக்கு அடுத்தபடியான கக்ஷியாக வந்ததுபற்றியே. சென்ற இரண்டு வருஷங்களுக்கு மேலாக இந்தச் சமஸ்தானத்தில் காங்கிரஸ் கக்ஷியில் ஏற்பட்ட விளைவினால் பிரபல காங்கிரஸ் தலைவரான பட்டம் தாணு பிள்ளை கக்ஷியைவிட்டே வெளியேறவேண்டி வந்தது. ஸ்ரீ தாணுபிள்ளை தம் வெளியேற்றத்திற்குப் பிறகு ஸோஷலிஸ்ட் கக்ஷியை ஆரம்பித்து அதற்குப் பலம் சேகரிக்க ஆரம்பித்தார். காங்கிரஸிலிருந்து வெளியேறிய பலர் ஸோஷலிஸ்ட் கக்ஷியில் சேர்ந்தார்கள் என்றாலும் அதிலேயே பல கிளை ஸ்தாபனங்கள் தோன்றின. அவை புரட்சிகர ஸோஷலிஸ்ட்கள், பார்வர்ட் பிளாக் போன்றவை. தேர்தலுக்கு சிறிது காலத்துக்குமுன் இடதுசாரி ஐக்கிய முன்னணி ஏற்படவேண்டும் என்ற பிரேரேபணை எழுந்தபொழுது பல இடதுசாரிகள் ஸோஷலிஸ்ட்களுடன் ஒத்துழைக்கத் தயாராக இருந்தனர். ஆனால் ஸ்ரீ தாணுப்பிள்ளை கொஞ்சமும் மனோபாவமோ, சிந்தனையோ இல்லாமல் ஐக்கிய முன்னணி யோசனையைத் திரஸ்கரித்து ஸோஷலிஸ்ட்கள் நீங்கலாக உள்ள மற்ற இடதுசாரியாட்களைக் கம்யூனிஸ்ட்கள் கோஷ்டியார் கையில் பரிசளித்தார். ஆகவேதான் சுயேச்சை என்று சொல்லிக்கொண்டு நின்ற பல இடதுசாரிகள் கம்யூனிஸ்ட்களால் ஆதரிக்கப்பட்டு இன்று உண்மையில் கம்யூனிஸ்ட்கள் என்று கருதப்படுகிறார்கள். இந்தப் பரிதாபகர நிலைமைக்குக் காரணம் ஸோஷலிஸ்ட்கள் மௌடீகமும் முன்யோசனையின்மையுமே. காங்கிரஸுக்கு அடுத்த பெரிய கக்ஷி என்று ஏற்படக்கூடிய சந்தர்ப்பத்தை இழந்ததுடன் உண்மையை மறைத்து உண்மைக்கு வெகு தூரமான ஒரு பெரிய கம்யூனிஸ்ட் பரமவலுவைத் தேர்தல் முடிவுகள் காண்பிக்கின்றன. மற்ற இடதுசாரிகளுடன் ஒத்துழைத்து அவர்களுக்கு சில ஸ்தானங்களை விட்டுக்கொடுத்திருந்தால் காங்கிரஸின் 44 ஸ்தானங்களுக்கு அடுத்தபடியாக ஸோஷலிஸ்ட்களுக்கு தற்போதைய 12 ஸ்தானங்களுக்குப் பதிலாக 32 ஸ்தானங்கள் சுலபமாக கிட்டியிருக்கும் என்பது அறிந்த வட்டாரங்களின் கருத்து.

திருவாங்கூர்—கொச்சியில் காங்கிரஸ் ஏன் தோற்றது என்பதுபற்றி சர்தார் பணிக்கர் (சீனாவில் இருக்கும் இந்திய ஸ்தானீகர்) எனக்கு ஒரு பிரத்தியேகப் பேட்டியில் சொன்னார்: "திருவாங்கூரில் காங்கிரஸ் ஒரு மகத்தான தேசிய சக்தியாக உருவாகவில்லை. மற்றச் சமஸ்தானங்களில் உள்ளதுபோல அல்லாமல் அன்னிய ஆதிக்கத்தை அகற்றி, அடிமைத் தளையை அறுக்க திருவாங்கூர் காங்கிரஸ் பாடுபட்டது என்பது மிகவும் சொற்பம்.

இந்தக் காங்கிரஸ் பெரும்பாலும் சமஸ்தானப் போராட்டங்களிலும் சில்லறை இயக்கங்களிலும் தன் சக்தியைச் செலவழித்து, 1947-க்குப் பிறகே அகில இந்தியப் படத்தில் இடம் பெற்றது. ஆனால் 1947-ல் உண்டான மாறுதல் இந்தக் காங்கிரஸைக் கேட்டுக்கொண்டு வரவில்லை. ஆகவே திருவாங்கூர் காங்கிரஸ் அகில இந்திய வேகங்களால் பதவிக்கு வந்ததே ஒழிய தன் பலத்தைக் கொண்டு வரவில்லை. தவிர, காங்கிரஸ் தலைவர்களும் ஜனங்களின் நன்மதிப்பை இழக்கலாயினர். இந்தக் காரணங்களினால்தான் அதீதப் பிரசாரவாதிகளின் வேலை எளிதாயிற்று. இன்னும் லாயக்கான நபர்களின் தலைமையில் காங்கிரஸை ஒப்படைத்து ஒரு வருஷம் இல்லை, ஒரு மாதத்தில் மறு தேர்தல் நடத்தினால்கூட காங்கிரஸுக்கு மெஜாரிட்டி கிடைக்கும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. வெகுவாகத் திருவாங்கூர் மக்களை நான் நன்கு அறிவேன்; ஆதலால் அவர்கள் ஒரு ஆச்சர்யப்பொழுதில் கம்யூனிஸ்ட் சித்தாந்தங்களை அறிந்து, அனுதாபிகளாக மாறி, அந்தக் கட்சியைப் பலப்படுத்த முற்பட்டுவிட்டார்கள் என்று யூகிப்பது தவறு.

தவிர, இன்று கம்யூனிஸ்ட் என்று சொல்லப்படும் பல சுயேச்சையாளர்கள் கம்யூனிஸ்ட் மூலம் கிடைக்காத மற்றப் பல்லாயிரம் ஓட்டுக்களால் வெற்றி பெற்றிருக்கிறார்கள். நேரடியாகக் கம்யூனிஸ்ட்கள் தங்கள் அபேக்ஷகர்களை நிறுத்தியிருந்தால்கூட இவ்வளவு ஸ்தானங்கள் அவர்களுக்குக் கிட்டியிருக்காது." ஸ்ரீ பணிக்கரின்

அபிப்பிராயங்களுக்கு எதிர்ப்புச் சொல்லுவது கடினமானதுதான்.

* * *

டில்லியில் கொண்டாடப்படும் குடியரசு தினக் கொண்டாட்டம் சிறப்பாக அமைந்தற்குக் காரணம் இது தலைமை நகரமாக இருப்பதாலும் இதில் இந்திய பாதுகாப்புப் படைகளின் பல அங்கங்களும் வைபவத்தில் பங்கெடுத்துக்கொள்வதாலுமே. சைன்ய அணிவகுப்பு ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்துமிடம் ஜனாதிபதிமாளிகைக்கு சமீபமான கிங்ஸ்பேயில். ஜனங்கள் பார்ப்பதற்காகப் படைகள் இயந்திர அணி வகுப்புகள் முதலியன புது தில்லியின் பல இடங்கள் மூலமாகவும் சுமார் ஏழு மைல்கள் நடந்து செல்லும்.

அன்னிய நாடுகளில் ஏற்படுவது போல் இங்கு ஜனங்கள் கைகொட்டி ஆரவாரிப்பதில்லை. அதற்குப்பதிலாக துருப்புக்களையும் அவைகளின் சாதனங்களையும் வைத்த கண் வாங்காமல் பார்க்கிறார்கள். இந்த வருஷம் பல பிரபல பட்டாளங்கள் விழாவில் கலந்துகொள்வதுடன் ஒரு புது ராணுவ அரங்கம் காண்பிக்கப்பட்டது. பனியில் மலைப் பிராந்தியங்களில் சறுக்குகிறார்களல்லவா! யுத்தங்களிலும் இப்படி சிப்பாய்கள் சறுக்கி, ஒரு இடத்திலிருந்து மற்றொரு தாழ்ந்த இடத்தைச் சறுக்கி அடைவதற்கு வேண்டிய சாதனங்களுடன் தயார் செய்யப் பட்டிருக்கிறார்கள். அப்படி தயார் செய்யப்பட்ட ஒரு சிறு குழுவினர் அணி வகுத்து சென்றது ஜனங்களுக்கு அதிக மகிழ்ச்சியை அளித்தது.

இந்த வருஷ கொண்டாட்டத்தில் பற்பல மாகாணங்களின் பிரத்தியேக கலாசாரங்களைத் தத்ரூபமாக பலஸீன்கள் மூலம் ஜனங்களுக்குக் காட்டிச் சென்றார்கள். உதாரணமாக, காஷ்மீர வாழ்க்கை, தென்னிந்தியக் கோவில், மலையாளக்கதகளி போன்ற மாகாணச் சின்னங்கள் பட்டறைகள் மேல் ஜோடிக்கப்பட்டு டிராக்டர்களால் இழுத்துச் செல்லப்பட்டன. இதற்குக் (Cultural Pageantry என்று சொல்லப்பட்டது. இந்த ஏற்பாட்டில் மிகவும் நன்றாக இருந்தது குளு பள்ளத்தாக்கு வாழ்க்கை, தென்னிந்தியக் கோவில், கதகளி நடிகர்கள். ஒரு தென்னிந்திய பஜனை கோஷ்டியை ஜாலரா சகிதம் தெருவில் அனுப்பியது அவ்வளவு உசிதமாக இல்லை. ஏனென்றால் பஜனை ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ளது. அதை ஒரு கலாசாரம் என்று சொல்லமுடியாது. பம்பாய்க்காரர்கள் தீபாவளியைக் குறித்து ஏற்பாடு செய்ததுபோல் தென்னிந்தியக் கிளப்பார் பொங்கல் கொண்டாட்டத்தைப் பற்றிய ஒரு சப்பரம் ஜோடித்திருக்கலாம். இது பற்றி அடுத்த வருஷமாவது இவர்கள் ஏற்பாடு செய்வார்கள் என்று நம்புவோம்.

* * *

நேபாளத்தை ராணாக்களிடமிருந்துமீட்டு ஜனநாயக ஆட்சி ஏற்படுத்த நேபாளக் காங்கிரஸ் போர் தொடுத்ததும் அதற்குப்பின் இந்திய சர்க்கார் சமரசம் ஏற்படுத்தியதும் யாவரும் அறிந்ததே. தங்கள் செல்வாக்கை இழக்க நேர்ந்த ராணாக்கள் தேசத்தில் ஏற்பட்ட ராஜிய மாறுதல்களை முழுமனதுடன் ஒப்புக்கொள்ளாததுடன் இந்திய சர்க்கார் நேபாள காங்கிரஸுக்கு அளவுக்கு மீறிய ஸ்தானம் கொடுத்து ஒரு வலுக்கட்டாய சமரஸத்தை ஏற்படுத்தினார்கள் என்று வாதித்தார்கள்.

ராணாக்கள்—காங்கிரஸ் கூட்டு சர்க்கார் மறைந்த பிறகு, காங்கிரஸ் பிரதிநிதிகள் தங்களுக்குப் பிடித்த ராணாக்களுடன் சர்க்கார் ஏற்படுத்தினார்கள். அப்பொழுது மற்ற இடங்களில் சகஜமாக ஏற்படும் பதவி வேட்டை ஏற்பட்டது. சர்க்காருக்குள் நுழைய முடியாத காங்கிரஸ்காரர்கள் சர்க்காருக்கு எதிராக வேலை செய்ய ஆரம்பித்தனர். ஒரு காலத்தில் காங்கிரஸ்காரராக இருந்து பிறகு பிரபல பக்காத் திருடனாக மாறிய கே. ஐ. ஸிங், ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியில் பங்கெடுத்துக்கொண்ட பழைய காங்கிரஸ்காரர்கள் ஸ்தாபனமான ரக்ஷாதளத்துடன் சதிசெய்து தாமும் ஜெயிலிலிருந்து வெளிவந்ததுடன் ரக்ஷாதளத்தை ஏவிவிட்டு இரவுக்கு இரவாகப் புரட்சியையும் கிளப்பிவிட்டார். நல்லகாலமாக நேபாளத்தின் ராணுவம் சர்க்காருக்கு விசுவாசம் காட்டியதுடன் புரட்சிக்காரர்களையும் ஒடுக்கியதனால் நிலைமை சீர்கேடாகாமல் தப்பியது.

புரட்சிக்காரர்கள் சர்க்காருக்கு அத்தியாவசியமான காரியாலயம், டெலிபோன் மார்க்கம், ரேடியோ நிலையம், ராணுவ கிடங்குகள் முதலியவைகளைப் பிடித்திருந்தார்கள் என்பதனால் புரட்சி நிறைவேறாததுபற்றி மிகவும் ஆச்சர்யமாக இருக்கிறது. நேபாளம் இந்தியாவுக்கு எல்லைப்புறத் தேசமாக இருப்பதால் நேபாளத்தில் நடந்த கிளர்ச்சி இந்திய வட்டாரங்களில் பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. புரட்சியில் கம்யூனிஸ்ட்களுக்கும் பங்கு உண்டு என்பது மேற்கொண்டு கவலையை அதிகரித்திருக்கிறது. இந்தக் காரணங்களினால் மறுபடியும் இந்தியாவுக்கும் நேபாளத்திற்கும் இடையே ஆலோசனை நடக்கும் என்று அறிகிறேன். குறிப்பாக, நேபாள—திபெத் எல்லையில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி பரிசீலனை நடப்பதுடன் பழைய காங்கிரஸ் தரப்பு சிப்பாய்களை நேபாளத்தின் ராணுவத்தில் வைத்துக் கொள்வது பற்றியும் விவாதங்கள் நடைபெறும். இது சம்பந்தமாக, இந்தியத் தேசிய ராணுவத்தாரை இந்திய ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளுமுன் எவ்வளவு ஜாக்கிரதையாக சர்க்கார் இருந்தார்கள் என்பதுச் சுட்டிக் காட்டப்படுகிறது ●

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

199332

கட்டிட தளவாடங்கள்

அன்று

பண்டைகாலச் சிற்பிகளின் கலைதிற
னும் ஆற்றலும்தான் என்னே! எல்
லோராவில் பாறைகளைக் குடைந்து
செதுக்கப்பட்டுள்ள குகைக்
கோவில்களே பழமை சிற்பியரின்
திறனுக்குத் தக்க சான்றாகும்.



இன்று

சங்கர் IC பிராண்ட்

போர்ட்லண்ட்
சிமெண்ட்

திடத்திலும் தரத்திலும் தேர்ந்தது

தென்னிந்தியா முழுவதும் இந்தியா
சிமெண்ட்ஸ் ஸ்டாக்கிஸ்டுகளுள்ளனர்

இந்தியா சிமெண்ட்ஸ் லிட்.

தொழிற்சாலை : தாழையூத்து, திருநெல்வேலி ஜில்லா.
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் : 11/1௨, செகெண்ட் லைன் பீச், மதறாஸ்-1.




The Cauveri C[illegible]our Press, Kumbakonam.